# 3. இமாம் ஷாபியீ (ரஹ்)

இணையற்ற முறையில் இஸ்லாமிய சட்டத்தைத் தொகுத்துத் தந்த மாமேதை, ஹதீஸ் கலையில் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்த பெரியார், அரபி இலக்கணத்தில், சொல்லாட்சியில் தன்னேரிலாத திறமை படைத்த வித்துவான், இனிய கவிதைகள் எண்ணற்றவை எழுதிய ஏந்தல், நோய் நிவாரணங்கற்ற வைத்திய வல்லுனர், போர்த் திறம் யாவுமறிந்த மாவீரர், நாவன்மையில் தமக்கு ஒப்பாரும் மிக்காருமின்றிச் சொற்பெருக்காற்றிய செந்நாப்போதார், மனிதனின் தோற்றம் கொண்டே அவன் இயல்பைக் கூறும் ஆருடம் கற்ற அறிஞர், "வீரத்துக்கு ஹஜ்ரத் அலீ (ரலி), வள்ளன்மைக்கு ஹாத்திம் தாயீ, இலக்கண இலக்கியத்துக்கு இமாம் ஷாபியீ" என்று இமாம் ராஜியால் போற்றப்பட்ட பேராற்றலாளார். இவர்கள் தாம் இன்று உலகின் பெரும் பான்மையான முஸ்லிம்களால் பின்பற்றப்படும் மத்ஹபை உண்டாக்கி அளித்த பெம்மான் ஷாபியீ (ரஹ்) அவர்களாவர்.

ஏழைதான்; ஆயினும், உயர் குலத்திலுதித்தவர்கள்; பிறக்கு முன்னே தந்தையை இழந்த அனாதைதான்; ஆயினும், வாழ்க்கைப் போராட்டத்தில் மகத்தான வெற்றி கண்டவர்கள். வறுமையில் வாடியவர்கள் தாம்; ஆனால், பின்னர் அள்ளி அள்ளிக் கொடுத்துக் கை சிவந்த வள்ளலாயும் திகழ்ந்தவர்கள். கல்வி தேட எண்ணற்கரிய இன்னல்களையெல்லாம் அனுபவித்தவர்கள் தாம்; எனினும் பெற்ற ஞானத்தைப் பிறருக்குப் போதிப்பதற்காக நாடு நகரங்களிலும், காடு மலைகளிலும் கஷ்டப்பட்டு அலைந்து திரிந்தவர்கள். சத்தியத்தையே காப்பாற்றிய பான்மைக்கூகத் தான் தோன்றியான அதிகாரவர்க்கத்தின் அடக்கு முறைகளையே ருசித்தவர்கள் தாம்; எனினும், மாமன்னர் களும் கண்டு மகிழ்ந்து வரவேற்கும் மதிப்புடையவர்களாகவும் திகழ்ந்தவர்கள். பிற்காலத்தில் கொடுமையான மூல நோயால் கடும்

துன்பமடைந்தவர்கள் தாம் எனினும், அப்போதும் தங்கள் சன்மார்க்கச் சேவையையோ, அற்புதமான நூல்களை எழுதும் அரும் பணியையோ தளர்த்தாதவர்கள். எத்தனையோ சாஸ்திரங்களைக் கற்று, அத்தனையிலும் நிபுணத்துவம் படைத்திருந்ததுடன், அறிவுக் கூர்மையிலும் நிகரற்ற மாமேதையாகத் திகழ்ந்தவர்கள் தாம்; எனினும், அடக்கத்தோடும், பணிவோடும் நடந்து கொண்ட அருமையான மகான்-இவர்கள் தாம் இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்களாவர்.

## பிறப்பு

இமாமவர்களின் இயற்பெயர் முஹம்மது. இடுகுறிப் பெயர் அபூ அப்துல்லாஹ்; பட்டப்பெயர் நாஸிருல் ஹதீஸ். எனினும், அவர்களுடைய பாட்டனாரின் பாட்டனார் பெயரான ஷாபியீ என்பதே அவர்களுடைய உலகம் போற்றும் பெயராக நிலைத்துவிட்டது.

இமாமவர்கள் அரேபியாவிலுள்ள உயரிய குலத்தவர்கள் என்று பாராட்டப் பெற்ற குறைஷிக் குலத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரு ஸஹாபியின் வழித்தோன்றலும் கூட. அவர்களுடைய வம்சாவளி வருமாறு: முஹம்மது பின் இத்ரீஸ்-பின் அப்பாஸ் பின் உதுமான் பின் ஷாபியீ பின் ஸாயிப் பின் உபைதா பின் அப்து பின் ஹாஷிம் பின் அப்துல் முத்தலிப் பின் அப்த மனாப் ஹாஷிமி. இந்த வகையில் இவர் களுடைய பரம்பரை நபி பெருமானார் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தோடு போய்ச் சேருகிறது. இந்த வரிசையில் உள்ள ஸாயிப் என்பவர் பத்ருப் போர்க்களத்தில் முஸ்லிம்களுக்கு எதிராகக் கொடிப் பிடித்துப் போரிட்டவர். அப்போது முஸ்லிம்களால் கைது செய்யப் பட்டவர். பின்னர் முஸ்லிமாகி நபி பெருமானாரின் தோழர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இவருடைய புதல்வர் ஷாபியீயும் நபி பெருமானாரோடு நன்கு பழகியவராவார்.



இமாமவர்களுடைய தாயாரும் எமன் நாட்டிலுள்ள பிரபலமான அஜ்து என்ற கூட்டத்தைச் சேர்ந்த உயர்குடிப் பெண்மணியாவார். (இவர் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் சந்ததியிலுதித்தவர் என்றும் சிலர் கூறுகின்றனர். (அது சரியன்று) இமாமவர்கள் பிறந்த ஊர் அஜ்ஜா என்பதாகும். இமாமவர்களுடைய தந்தையார் இத்ரீஸ் பின் அப்பாஸ் முதலில் மதீனாவையடுத்த தபாலா என்ற சிற்றூரில் வாழ்ந்து வந்தார். பின்னர் சில காலம் மதீனாவிலும் தங்கியிருந்தார். அதன்பின் ஜீவனோபாயத்துக்காக ஸிரியாவிலுள்ள அஸ்கலானில் குடியேறினார். அங்கே ஷாபியீ பாலப் பருவத்தினராக இருக்கும்போதே அவர் காலமாகிவிட்டார்.

இமாம் ஷாபியீ பிறப்பதற்கு முன்பு அவர்களின் அன்னையார் கனவொன்று கண்டார். அதில் வியாழ கிரகம் உதயமாவதையும், அதன் ஒளி எகிப்து தேசத்தை நோக்கிப் பாய்வதையும், உலகம் முழுவதும் தன் ஜோதியைப் பரப்புவதையும் அவர் கண்டார். இதை அவர் கனவுகளுக்கு விளக்கம் கூறும் ஒருவரிடம் தெரிவித்ததும் அவர், "உங்கள் வயிற்றிலிருந்து பிறக்கப் போகும் குழந்தையின் மேதா விலாசத்தால் முதலில் எகிப்தும் பின்னர் உலகிலுள்ள சகல நாடுகளும் உயர்வடையும்" என்று அந்தக் கனவுக்குப் பதில் கூறினார்.

இவ்விதம் பிறந்த பாலகர் தன் தந்தையை இழந்து அனாதை யானதும், அந்த அன்னை, அவர்களை அழைத்துக் கொண்டு எமன் நாட்டில் தன் சகோதரன் இருந்த வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார். இமாமவர்கள் தங்களின் எட்டு வயதுவரை அங்கேயே வளர்ந்திருக் கிறார்கள். இதற்கிடையே திருக்குர்ஆனை மனப்பாடம் செய்த ஹாபிஸ் ஆகிக்கொண்டார்கள். அங்குள்ள கிராமிய மக்களிடை வழங்கும் மொழிகளையும், அவர்களுடைய நாட்டுப் பாடல்களையும் இமாமவர்கள் நிறையப் படித்துக் கொண்டார்கள்.

## கல்வியின் பாதையிலே

இளமையிலேயே அவர்கள் காட்டிய திறமையும், சாதுர்யமும், எதையும் இலகுவாக மனனம் செய்யும் இயல்பும், அவர்களுடைய அன்னையாரை மிகவும் இன்புறச் செய்தன. அவர் தம் மகனுக்கு நல்ல முறையில் கல்வி பயிற்றுவிக்க எண்ணினார். ஆனால், அதற்கேற்ற வசதிகள் அவர்களிடம் எதுவுமில்லை. அதனால், அவருடைய அன்னை அவர்களை, அவர்களுடைய பத்தாம் வயதில் மக்காவிலிருந்த அவர்களுடைய சிறிய தந்தையாரிடம் அனுப்பினார். அவரும் போதிய வசதியுடையவரல்லர்; அதனால், ஷாபியீயைப் படிக்க வைக்க அவரும் கஷ்டப்பட்டார். அக்கால அரபிகளின் பழக்கம் தமது சிறுவர்களை முதலில் பற்பல பரம்பரைகளைப் பற்றிய பாடத்தை (இல்முல் அன்ஸாபை)ப் படிக்க வைப்பதாகும். இமாமவர்கள் இந்தப்படிப்பில் சேர்ந்து வெகு விரைவிலேயே தங்கள் அபாரமான ஞாபக சக்தியால் நல்ல தேர்ச்சி பெற்று விட்டார்கள். மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஷாபியீயை உந்தித் தள்ளிக்கொண்டிருந்தது. ஆனால், அவர்களுடைய சிறிய தகப்பனாருடைய குடும்பமோ மிகவும் கஷ்டஜீவனம் நடத்திக்கொண்டிருந்தது. இதில் பொருள் கொடுத்து அவர்களைப் படிக்கவைப்பதென்பது சாத்தியமில்லாதிருந்தது. இமாமவர்கள் தங்கள் நம்பிக்கையைத் தளரவிடவில்லை. மக்காவின் சுற்றுப்புறங்களிலுள்ள பல ஊர்களுக்கும் தம் சிறிய தகப்பனாருடன் வேலைகளுக்காக அவர்கள் சென்று வருவதுமுண்டு. அப்போ தெல்லாம் ஆங்காங்குள்ள வழக்கு மொழிகளையும், பாடல்களையும் அவர்கள் கற்றுக் கொண்டார்கள்.

முறைப்படி படிப்பதற்கு வாய்ப்பற்ற இமாமவர்கள், பல்வேறிடங் களிலும் நடக்கும் ஹதீஸ் விளக்கங்களையும், மார்க்க சொற்பொழிவு களையும் ஆவலோடு சென்று கேட்பார்கள். கடைசியில் மதரஸா



ஒன்றில் ஏழை மாணவராகப் போய் ஓதுங்கிய அவர்களால் ஆசிரியருக்கு எதுவும் கொடுக்க இயலாதிருந்ததால் அவரும் அவர்களிடம் பாடம் கேளாமலும், அவர்களைக் கவனியாமலும் புறக்கணித்து விட்டார். ஆனால், கல்வி அவர்களைப் புறக் கணிக்கவில்லை. வகுப்பில் தாங்கள் கவனமாகக் கேட்டதை வீடு சென்றதும், தட்டையான, அகலமான எலும்புகளைப் பொறுக்கி, அவற்றில் எழுதி மனப்பாடம் செய்து கொள்வார்கள். எழுதுவதற்கான தாள் முதலியன வாங்க வசதியற்ற இமாமவர்கள் இப்படிக் கஷ்டப்பட்டுக் கல்வி பெற வேண்டியதாயிற்று. நாளடைவில், இவ்விதம் தாங்கள் மனனம் செய்த பாடங்களையே, ஆசிரியர் அங்கே இல்லாத சமயம் மற்ற மாணவர்களுக்குப் போதிக்கும் அளவுக்குத் திறமையுடையவர் களாகி விட்டார்கள். இதையறிந்த ஆசிரியர், இமாம் ஷாபியீயைப் பாராட்டி முன் வரிசையில் அமர்த்திக் கொண்டார். எனினும், இலவசமாகக் கல்வி பெறுவதை இமாமவர்கள் விரும்பவில்லை. தாம் பெறும் கல்விக்காக, ஈத்தம் ஓலைகளையும், மட்டைகளையும் பொறுக்கிக் கட்டி எடுத்துப் போய்த் தமது ஆசிரியர் வீட்டில் போட்டு வரலானார்கள்.

மக்காவில் பிரபல ஹதீஸ் பாடபோதனை நிபுணராகவும், சட்ட வல்லுனராகவும், முப்தியாகவும் விளங்கிய பெரியார் முஸ்லிம் பின் காலித் அவர்கள் ஹதீஸ், பிக்ஹுப் போதனையை நடத்திக் கொண்டிருந்த காலம் அது. அக்காலையில் மாணவர்கள் ஹதீஸ் விளக்கங்கள் கற்க அனுமதிக்கப்பட வேண்டுமாயின் அவர்கள் இருபது வயதையாவது அடைந்திருக்க வேண்டும் என்று கட்டுப்பாடு ஒன்று இருந்து வந்தது. அதுவரை ஹதீஸ் வகுப்புகளில் மாணவர்கள் அமர அனுமதிக்கப்படுவதில்லை. எனினும், இமாம் ஷாபியீ தங்கள் அறிவாற்றலாலும், நுன்மதியாலும் பெரியார் முஸ்லிமைக் கவர்ந்து விட்டார்கள். எனவே, அவர்களிடம் அமர்ந்து பாடம் கேட்க

முடிந்தது. மூன்றாண்டுகள் இமாமவர்கள் இந்தப் பெரியாரின் கண்காணிப்பிலிருந்து படித்தார்கள். அப்போது இந்தப் பெரியார் அடிக்கடி இமாம் மாலிக்கைப் பற்றித் தங்கள் பாடபோதனைகளிடையே குறிப்பிடுவதுண்டு. இதனால், இமாமவர்கள் மனத்தில் இமாம் மாலிக் அவர்களிடம் சென்றமர்ந்து கல்வி பயிலவேண்டும் என்ற ஆர்வம் உண்டாகி வளர்ந்து கொண்டிருந்தது.

இவ்விதம் அவர்கள் ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கனவொன்று கண்டார்கள். அவர்கள் சொல்கிறார்கள்; "நான் என் கனவில் நபி பெருமானார் (ஸல்) அவர்களைக் கண்டேன். அவர்கள் என்னை விளித்து. என் பெயரையும் கோத்திரத்தையும் விசாரித்தார்கள். பின்னர் என் வாயினுள் தங்கள் உமிழ் நீரைத் துப்பி விழுங்கச் சொன்னார்கள். நான் அதை விழுங்கியதும் 'உன் மீது அல்லாஹ்வின் கிருபை உண்டாவதாக! என்று ஆசீர்வதித்தார்கள். இந்த அற்புதமான கனவுக்குப் பின்னர், என் வார்த்தைகளிலோ, குரலிலோ எந்தப் பிழையோ, அபசுவரமோ நிகழவே இல்லை"

இமாம் அவர்களின் இருபத்தோராவது வயதில் அவர்கள் கண்ட கனவு ஒன்றையும் அவர்கள் விவரித்துள்ளார்கள்; "நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கஃபத்துல்லாஹ்வில் தொழுது கொண்டிருந்தார்கள். அவர்கள் தொழுது முடிந்ததும் மக்களை அழைத்து ஆசி வழங்கிக் கொண்டிருந்தார்கள். உடனே நானும் அவர்கள் அருகில் சென்றேன். எனக்கும் ஆசியளிக்க வேண்டும் என வேண்டினேன். அவர்கள் தங்கள் அங்கியுள் கையை விட்டுத் தராசு ஒன்றைக் கையிலெடுத்து என்னிடம் தந்து, 'இது உனக்கு என் அன்பளிப்பு' என்று கூறினார்கள். இந்தக் கனவுக்குப் பயன் தெரிய ஆவல் கொண்ட நான், இதை ஒரு பெரியாரிடம் சென்று தெரிவித்தேன். அதைக் கேட்ட அந்தப் பெரியார் என்னை நோக்கி, 'நபி பெருமானாரின் முன்மாதிரியை உலகில் வளர்க்கும் ஓர் இமாமாக நீங்கள் விளங்கப் போகிறீர்கள்' என்று அவர் விளக்கமளித்தார்கள்."



## மாலிக்கின் மாணவர்

இந்தச் சம்பவம் நடந்தபின்னர் இமாமவர்கள், இமாம் மாலிக்கிடம் சென்று கல்வி பயில முடிவுகட்டித் தங்கள் ஆசான் முஸ்லிமிடம் தமது ஆசையைத் தெரிவித்தார்கள். அந்தப் பெரியார் அதற்காகத் தங்கள் ஆசியை நல்கியதுடன், இமாம் மாலிக் அவர்களுக்கு சிபாரிசுக் கடிதம் ஒன்றும் கொடுத்தார்கள். அந்தக் கடிதத்தில், "இந்தக் கடிதம் கொண்டுவரும் இளைஞர் உங்களிடம் கல்வி பயில அருகதையுடையவர் தாம். இவர் அபாரமான புத்தி நுட்பமும் பணிவு முடையவர்" என்று எழுதப்பட்டிருந்தது.

இமாம் ஷாபியீ இக்கடிதம் பெற்றதும், பெரிதும் மகிழ்ந்தார் களாயினும், பெருத்த கவலைக்கும் உள்ளானார்கள். அவர்களோ பரம ஏழையாக இருந்தார்கள். அந்த நிலையில் அவர்கள் மதீனா செல்லவும், அங்கே தங்கிப் படிக்கவும் பணம் வேண்டும். என்ன செய்வதென்று தெரியாது தத்தளித்த அவர்கள் முஸ்அப் பின் ஜுபைர் என்பவரிடம் சென்று தங்கள் தேவையைக் கூறினார்கள். அவர் இன்னொருவரிடம் சென்று சிபாரிசு செய்து இமாமவர்களுக்கு நூறு தீனார்கள் வாங்கிக் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு இமாமவர்கள் மதினா போய்ச் சேர்ந்தார்கள்.

இமாம் மாலிக்கின் வீட்டையடைந்த இமாம் ஷாபியீ அவர்கள், பணியாளர் மூலம் அவர்களுக்குச் செய்தி சொல்லி அனுப்பினார்கள். உடனே அங்கு வந்த இமாம் மாலிக் அவர்கள் மிகுந்த அன்போடு அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். இமாமவர்கள் தாங்கள் தங்கள் ஆசானிடமிருந்த பெற்று வந்திருந்த சிபாரிசு கடிதத்தை இமாமவர்களிடம் கொடுத்தார்கள். அதை வாங்கிப் படித்த இமாம் மாலிக் ஆத்திரத்தோடு அதைக் கசக்கி எறிந்தார்கள். அவர்களுடைய உதடுகள் துடித்தன. இமாம் ஷாபியீ பயந்து நடுங்கிப் போனார்கள். "சுப்ஹானல்லாஹ்! நபி பெருமானார் வாய்மொழியாக வந்த புனிதப்

பாடங்களை சிபாரிசு மூலம் படிக்குமளவுக்குக் காலம் கெட்டுப்போய் விட்டதா!'' என்று இமாம் மாலிக் கோபத்தோடு கத்தினார்கள்.

''குரு மகானே, என்னை மன்னித்தருளவேண்டும். எப்படி யேனும் படிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக ஏங்கிக் கிடப்பவன் நான். அதனால்தான் இவ்வாறு சிபாரிசுக் கடிதம் வாங்கி வந்துவிட்டேன். பிழை செய்திருப்பின் பொறுத்தருளவேண்டும்!'' என்று இமாம் ஷாபியீ மிகவும் பணிவோடு வேண்டுதல் விடுத்தார்கள். அதன் பின்னரே அவர்களுடைய ஆத்திரம் தணிந்தது.

பின்னர் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அடக்கத் துடனும், சரியான முறையிலும் இமாம் ஷாபியீ பதிலளித்தார்கள். ஒருவரின் பேச்சைக் கொண்டே அவர் எத்தகைய இயல்பினர் என்று அறியும் திறமை இமாம் மாலிக் அவர்களுக்கு உண்டு. எனவே, ஒரு நொடிப் பொழுதில் இமாம் ஷாபியீயின் நல்லியல்பையும், ஆர்வத்தையும் அவர்கள் கண்டு கொண்டார்கள். ''முஹம்மதே, பேணுதலுடன் நடந்துகொள்! அல்லாஹ்வின்மீது பயபக்தியுள்ளவனாக ஒழுகிவா! வீணான காரியங்களில் சிந்தையைச் செலவிடாது விழிப்போடிரு! உன்னால் முஸ்லிம் சமூகமே பயனடையப் போகிறது. அதனால் நீயும் பெயரும், புகழும், மகிமையும், பெருமையும் பெறுவாய்'' என்று இமாம் ஷாபியீயை வாழ்த்தினார்கள்.

இமாம் மாலிக் அவர்களுடைய போதனா மன்றம் எத்துணை சிறப்பு வாய்த்ததாக இருந்தது என்பதை அவர்களுடைய வாழ்க்கை பற்றிய பகுதியில் பார்த்தோம். அக்காலையில் மக்காவிலும் மற்றும் பல நகர்களிலும் ஆசான் ஒரு மேடைமீது அமர்ந்துகொண்டோ நின்று கொண்டோ தான் பாடபோதனை செய்வார். மாணவர்கள் அவர் எதிரில் வரிசை வரிசையாக அமர்ந்து பாடம் கேட்பார்கள். ஹதீஸ் சொற்பொழிவாக இருப்பின் அவர் ஹதீஸைப் படித்து விளக்கம் கொடுப்பார். பாடமாயினும் படித்துக்கொண்டே போவார்; அவர் சொல்வதை மாணவர்கள் எழுதிக் கொள்வார்கள். ஆனால், மதீனாவில் அக்காலையில் பிரசித்திப் பெற்றிருந்த மகான்களெல்லாம் ஹதீஸ்களையும், அவற்றின் விளக்கங்களையும் வீட்டிலேயே ஒழுங்காக எழுதி எடுத்து வந்து, வகுப்பில் அருமையாகப் படிக்கக்கூடிய மாணவன் ஒருவன் கையில் கொடுத்து விடுவார்கள். அவன் அதைப் படிக்கும்போது தேவைப்படுமிடத்தில் மட்டும் விளக்கங்களைக் கொடுப்பார்கள். இமாம் மாலிக் அவர்களும் இதே முறையைப் பின்பற்றித்தான் பாடபோதனை நடத்திக் கொண்டிருந்தார்கள்.



இமாமவர்களின் கல்விக்கூடம், பரிசுத்தமான எம்பெருமானார் (ஸல்) அவர்களுடைய பேச்சையும், செயல்களையும் பற்றி விவரிப்பதற்குத்தக்க முறையில் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தது. வகுப்புத் தொடங்குமுன் வாசனைப்புகை போடப்பட்டு, எங்கும் அருமையான நறுமணம் கமழ்ந்து கொண்டிருக்கும். மாணவர்கள் சுத்தமான உடையுடுத்தி ஒலுவுடன் வந்து அமருவார்கள். எங்கும் நிசப்தம் நிலவும். மாணவர்களையன்றி மற்றும் உலமாக்களும், பிரபுக்களும் பொதுமக்களும் கூட உரிய மரியாதையுடன் அங்கே வந்து கூடியிருப்பதுண்டு. இந்த நிலையில் இமாம் மாலிக் அவர்கள் வகுப்பில் நுழைந்து பாடம் தொடங்குவார்கள். சிற்சில சமயங்களில் பாடங்களை வாசிக்கும் வேலை இமாம் ஷாபியீ அவர்களுக்கும் கிடைப்பதுண்டு. இமாம் ஷாபியீ சொல்கிறார்கள்: ''எங்கள் சபை அரச தர்பாரைப்போல காம்பீரியத்தோடு காட்சியளிக்கும். எங்கள் சபையில் நாங்கள் தாள்களைக்கூட மிக மிக மெதுவாகவே திருப்புவோம். மாணவர்களின் வரிசை, பொதுமக்கள், பிரபுக்கள், உலமாக்கள் ஆகியோருடைய கூட்டம் சபையில் அமர்ந்திருப்பது பார்ப்போருக்கும் பிரமிப்பூட்டுவதாகும்'' என்று.

மேலும், இமாம் ஷாபியீ சொல்வதாவது: ''இமாம் மாலிக்கிடம் பாடம் கேட்பவர்களெல்லாம் திறமையும் துணிவுமுடையவர்களாக

விளங்கினர். ஒரு நாள் இமாமவர்கள் என்னைப் பாடம் படிக்கும்படி உத்தரவிட்டார்கள். நான் வெகு சரளமாகப் படித்துக்கொண்டே போனேன். இடையிடையே பல இடங்களில் இமாமவர்கள் விளக்கம் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். ஓரிடத்தில் நான் படிப்பதை நிறுத்தியதும், 'ஏன் ஷாபியீ நிறுத்தி விட்டீர்? தொடர்ந்து படித்துக் கொண்டே செல்லும்!'' என்று என்னை அன்போடு ஊக்குவித்தார்கள்.

இத்தகைய மாண்பும், மகத்துவமுள்ள சபையிலே தொடர்ந்து மூன்றாண்டுக் காலம் அமர்ந்து இமாமவர்கள் பாடம் கேட்டார்கள்: அற்புதமான விளக்கங்களைத் தெரிந்து கொண்டார்கள். இமாம் ஷாபியீ இமாம் மாலிக்கிடம் வந்து சேர்ந்த வேளையில்தான், மாலிக்கின் 'முஅத்தா' தயாராகி முடிந்திருந்தது. எனவே, அதை எடுத்து அதன் பெரும் பகுதியை இமாமவர்கள் மனப்பாடமிட்டுக் கொண்டார் கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அதில் தங்களுக்குத் தேவையான விளக்கங்களையும் இமாமவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். ஸஹாபாக்கள், தாபியீன்களின் வரலாறுகள், மார்க்கத் தீர்ப்புகள், பிக்ஹு போன்ற பாடங்களில் திறமான கல்வியடைந்தார்கள்.

இவ்விதம் அவர்கள் கல்வி தேடிக்கொண்டிருந்த வேளையில் ஒரு நாள் இந்தச் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. புறா விற்பவன் ஒருவன் இமாம் மாலிக்கிடம் வந்தான். சபையில் பாடம் முடிந்து மாணவர்கள் வெளியாகி விட்டனர். இமாம் ஷாபியீ மட்டும் அங்கே இருந்தார்கள். அச்சமயம் மாலிக்கிடம் அந்த மனிதன் சொன்னான்: ''நான் புறாக்களைக் கூவப் பழக்கி விற்று வாழ்க்கை நடத்துபவன். நான் ஒருவனுக்கு விற்ற புறா கூவவில்லை என்று அவன் என்னிடம் வந்து தகராறு செய்தான். நான் அது கூவும் என்றேன். அவன் அது கூவவில்லை என்றும், கூவாத புறாவைக் கொடுத்து நான் அவனை ஏமாற்றிவிட்டாதாகவும் என்னிடம் முரட்டுத்தனமாகப் பேசலானான். நான் ரோஷத்தோடு, ''நான் உனக்கு விற்ற புறாக் கூவவில்லையானால், என் மனைவியைத் தலாக்குச் செய்தவனாகிறேன்'' என்று சபதம் செய்துவிட்டேன். என்னுடைய ஆத்திரம் தணிந்து நிலைமையை நான் சீர் தூக்கிப்பார்க்கும்போது, நான் சத்தியம் செய்தது எத்துணை அபாயமானது என்பதை உணர்கிறேன். ஒருக்கால் அந்தப் புறாக் கூவாதிருந்துவிட்டால், நான் என் மனைவியைக் 'தலாக்' சொல்லிவிட வேண்டியதுதானா? அல்லது, இதற்கு ஏதாவது மாற்று உண்டா? இதைத்தான் தங்களிடம் தெரிந்து போக வந்தேன்'' என்று கூறினான்.



''இதற்கு மாற்றில்லை, சபதப்படி நடக்கவேண்டியது தான்'' என்று இமாம் மாலிக் கூறிவிட்டார்கள், உடனே அவன் மிகுந்த வேதனையோடும், ஏமாற்றத்தோடும் அங்கிருந்து வெளியானான். அவன் செல்லும்போது, அங்கே அமர்ந்திருந்த இமாம் ஷாபியீயும் எழுந்து அவன் பின்னால் சென்றார்கள். வெளியில் அவனை நிறுத்தி, ''அந்தப் புறாக் கூவும் என்றாயே? அது கூவுவது அதிகமா, கூவாமலி ருப்பது அதிகமா?'' என்று அவனிடம் வினவினார்கள்.

சற்றே திகைத்த அந்த மனிதன், ''கூவுவதுதான் அதிகம்'' என்று பதிலளித்தார்கள்.

உடனே ஷாபியீ அவனையுமழைத்துக் கொண்டு மிகுந்த பணிவோடு தங்கள் குருநாதரை அணுகி, ''நான் இவனிடம் அந்தப் புறா கூவுவது அதிகமா, வாய் மூடியிருப்பது அதிகமா என்று கேட்டேன். கூவுவதுதான் அதிகம் என்றான். அதனால் இவன் மனைவி தலாக்காக மாட்டாள் என்று கருதுகிறேன்'' என்று கூறினார்கள். இமாம் மாலிக் தங்களுடைய இந்த மாணவரிடம் மிகுந்த அன்பும், பிரியமும் உடையவர்களாய் இருந்தும், இப்படித் தங்கள் தீர்ப்பு ஒன்றில் அவர்கள் குறுக்கிடுவது கண்டு சற்று கோபத்தோடு, ''இது எப்படி அவன் சபதத்துக்குப் பிராயச்சித்தமாகிவிடும்? இதற்கு ஹதீஸ் ஆதாரம் வேண்டாமா?" என்று கேட்டார்கள். இமாம் ஷாபியீ சொன்னார்கள்: ''ஒரு நாள் தாங்களே சொன்ன ஹதீஸ்தான் இதற்கு ஆதாரம். அதாவது, பாத்திமா பிந்த் கைஸ் என்ற பெண்மணி நபி பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்து, 'தங்கள் நற்தோழர்களில் இருவரான அபூ

ஜஃமின் என்பவரும், முஆவியா என்பவரும் என்னை மணக்க விரும்பிப் பெண் கேட்கிறார்கள். அவர்கள் இருவரில் நான் யாருக்கு வாழ்க்கைப்பட வேண்டும்?' என்று கேட்டாள். அப்போது நபி பெருமானார், 'முஆவியா தன் கவசத்தைக் கீழே வைக்க மாட்டாதவர் என்பதைத் தெரிந்துகொள்!' என்று கூறினார்கள். அவர் தூங்கும் போதும், உணவுண்ணுகையிலுமாவது தமது கவசத்தை அப்புறப்படுத்தத்தான் செய்வார் என்பதை நபி பெருமானார் அறிந்திருந்தும், இப்படிக் கூறிய தன் கருத்து யாதெனில், பெரும்பாலாக அவர் அப்படியிருப்பதைத் தானல்லவா! இந்த மாதிரிச் சந்தர்ப்பத்தில் குறைந்ததைப் புறக்கணிக்கத்தானே நேரும்! எனவே, இவனுடைய புறாவும் கூவுவதுதான் அதிகம் என்றதும் நான் அந்த அடிப்படையில் அந்த மிகுதமான அம்சத்தைத்தான் கவனிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன்...''

இமாம் மாலிக் தமது மாணவர் கூறுவதிலுள்ள உண்மையை, அவர்கள் இந்த ஹதீஸ் மேற்கோளைக் காட்டத் தொடங்கியதுமே விளங்கிக் கொண்டார்கள். எனினும், கடைசிவரை அவர்கள் பேசிமுடிக்க அனுமதித்தார்கள். பின்னர், ''உம்முடைய திறமையை மிகவும் மெச்சுகிறேன். அதனால், இவன் புறா ஒருக்கால் கூவாவிட்டால் கூட இவன் தன் மனைவியை தலாக்குச் சொல்ல வேண்டியதில்லை என்று என் தீர்ப்பை மாற்றுகிறேன்'' என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள். தமது மாணவரிடம் அவர்கள் வைத்திருந்த அன்பு இதனால் பன்மடங்கு அதிகமாயிற்று. ''என்னிடம் பாடம் கேட்ட மாணவர் அனைவரிலேயும் ஷாபியீயைப் போன்ற மதிநுட்பமுடைய வேறு எவரையும் நான் காணவில்லை'' என்று அவர்கள் கூறினார்கள்.

இமாம் மாலிக்கிடம் கற்று அத்தாட்சிப்பத்திரம் பெற்ற பின்னர் பல்வேறு பெரியார்களிடமும் கற்பதற்காகவும், தாம் பெற்ற கல்வியைப் பூரணமாக்கிக் கொள்வதற்காகவும் இமாம் ஷாபியீ அவர்கள் தங்கள் ஆசிரியரிடம் சென்று விடை கேட்டார்கள். ''மகனே, அல்லாஹ் உனக்கு அருளியுள்ள ஞானம் தவறான கருமங்களால் பழுதுபடாமலி ருக்குமாக!'' என்று அவர்கள் ஆசீர்வதித்து அனுப்பினார்கள். (இமாம் மாலிக் இமாம் ஷாபியீயின் இருபத்தொன்பதாம் வயதில் காலமானார் கள். அதுவரை இவர்கள் அவர்களுடைய மாணவராகவே இருந்தார் கள் என்று வரலாற்று நூல்கள் சிலவற்றில் கூறப்பட்டுள்ளது.)



இமாமவர்கள் சுமார் எண்பது ஆசிரியர்களிடம் பாடம் கேட்டுள்ள தாக ஹாபிஸ் இப்னு ஹஜர் குறிப்பிடுகிறார்கள். அவர்களுள் முஸ்லிம், இமாம் மாலிக் தவிர புலைல் பின் இயால், சுப்யான் பின் ஜனா, வகீஉ, யஹ்யா பின் சயீத், முஹம்மது பின் இஸ்மாயில், முஹம்மது ஹஸன், அப்துல்லா ஹிப்னு முபாரக், இப்ராஹீம் பின் சஅத், அப்துல்லாஹ் பின் நாபிஃ போன்ற நாதாக்களும், இமாம்களும் முக்கியமானவர்களாவர். இமாம் மாலிக்கிடத்திலிருந்து மட்டும் இமாம் ஷாபியீ அவர்கள் சுமார் பத்தாயிரம் ஹதீஸ்களையும், மார்க்கத் தீர்ப்புக்களையும் பயின்று மனனம் செய்துள்ளார்கள்.

## தீர்ப்பு வழங்க அனுமதி

இதன்பின் இமாமவர்கள் மக்கா சென்று, அங்கே தங்கள் உறவினர்களைப் பார்த்தார்கள். அத்துடன் அச்சமயம் அங்கே மிகவும் பிரபலமான ஹதீஸ் போதகாசிரியராக விளங்கிய இமாம் சுப்யான் பின் ஜனாவை அணுகிச் சில மாதங்கள் ஹதீஸ் விளக்கங்களைக் கேட்டார்கள். அத்துடன் தாங்கள் முப்பது வயதை அடைந்து விட்ட நிலையிலும், தங்களுடைய தலையாய ஆசான் இமாம் மாலிக் கால மாகிவிட்ட நிலையிலும், தாங்களே சுயமாக மார்க்கத் தீர்ப்பு வழங்க நாடினார்கள். இவ்விதம் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதென்பது மிகமிகப் பொறுப்பான காரியமாதலாலும், அதனால் பலருடைய வாழ்க்கையே பாதிக்கப்படக் கூடுமாதலாலும், இவ்விதம் மார்க்கத் தீர்ப்புகள் வழங்கும்

பொறுப்பைப் போதிய அனுபவமுள்ள மார்க்கஞானிகளிடமே விடுவது வழக்கம். இமாம் சுப்யான் பின் ஜனாவிடம் பாடம் கேட்டபின், தாங்கள் சுயமே மார்க்கத் தீர்ப்பு வழங்க அனுமதிக்க வேண்டும் என்று அவர்களிடமே இமாம் ஷாபியீ அவர்கள் வேண்டுதல் விடுத்தார்கள்.

அந்தப் பெரியார் இமாம் ஷாபியீயின் மகா மேதையையும், திருக்குர்ஆன், ஹதீஸ் தேர்ச்சியையும் நன்றாக அறிந்திருந்தார்கள். ஆயினும், ஒரு சிறிய சோதனை நடத்தினார்கள். "எம்பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு சமயம், தங்கள் பிராட்டியார் உம்முல் மூமினீன் ஸபிய்யாவுடன் மஸ்ஜிதிலிருந்து இறங்கித் தெருவில் போய்க் கொண்டிருக்கும் போது, இரண்டு மனிதர்கள் எதிர்ப்பட்டனர். அவர்களோடு நபி பெருமானார் உரையாடலானார்கள். அப்போது அவர்கள் தங்கள் பிராட்டியாரைச் சுட்டிக்காட்டி, "மனிதனுடைய இரத்தக் குழாய்களிலெல்லாம் ஷைத்தான் ஊடுருவிச் சுற்றுகிறான்" என்று அருளினார்கள். இது இமாம் ஜஹ்ரி ரிவாயத்துச் செய்துள்ள ஹதீஸ். இதிலுள்ள கருத்து யாது?" என்று இமாம் ஸுப்யான் பின் ஜனா இமாம் ஷாபியீயிடம் வினவினார்கள்.

அது கேட்ட இமாம் ஷாபியீ சற்றும் தயங்காது சொல்ல லானார்கள்: "இத்தகைய மகிமைமிக்க தூய நபி ஒரு பெண்ணைத் தங்களோடு அழைத்தேகுகிறார்களே! நபி பெருமானார் கூடவா இப்படி அன்னிய மாதொருவரோடு செல்வார்கள்" என்று அந்த இரண்டு மனிதர்கள் மனத்திலும் ஊசாட்டமுண்டாகலாம். அது மனித இயல்பு தானே! அதனால்தான் அவர்களோடு பேசத் தொடங்கியதுமே நபி பெருமானார் அவர்கள், "இவர்கள் என் மனைவியார் ஸபிய்யா" என்று தெளிவுபடுத்திவிட்டு, மேலும், "நான் இறைவன் தூதனாக இருப்பினும், அறியாத மக்கள் என்மீது கெட்ட எண்ணம் கற்பிக்கக் கூடும். ஆகவே நீங்களும் பிறர் மீது கெட்ட எண்ணம் கொள்ளாதீர்கள்:



அவர்களைப்பற்றி அவதூறாகப் பேசவோ, எண்ணவோ செய்யாதீர்கள். இந்தத் தீய குணத்தைவிட்டு உங்கள் இதயத்தைப் பரிசுத்தமாக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில், ஷைத்தான் மனிதனுடைய இரத்தம் ஓடும் குழாய்களிலும் கூட ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறேன்" என்று எம்பெருமான் (ஸல்) அவர்கள் தங்கள் உம்மத்துக்களுக்கே ஓர் எச்சரிக்கை விடுக்குமுகத்தான் அவ்விதம் கூறியுள்ளார்கள்." இந்த விளக்கம் பெரியார் சுப்யான் பின் ஜனாவைப் பெரிதும் மகிழ்வித்து விட்டது. அவர்கள் இமாம் ஷாபியீ பத்வாக் கொடுக்க அருகதை யுடையவர்கள் என்று அத்தாட்சி வழங்கியதுடன் அவர்களுக்காக நல்துஆவும் செய்தார்கள். "இனி நீர் சுயமே மார்க்கத் தீர்ப்புகள் வழங்கலாம்" என்று ஆசியுமளித்தார்கள்.

## அரசாங்கப் பதவி

இச்சமயம் பக்தாதிலிருந்து கலீபா ஹாரூனர் ரஷீதின் தலைமை யான அதிகாரியொருவர் மக்கா வந்தார். அவரிடம் இமாம் ஷாபியீ அறிமுகப்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய நேர்மையையும், அறிவின் ஆழத்தையும், ஆராய்ச்சியையும் கண்ட அந்த அதிகாரி அவர்களை எமன் பகுதியில் அரசாங்க அதிகாரியாக நியமனம் செய்து விட்டார். தங்களுடைய முப்பதாம் வயதில் அவர்கள் இந்தப் பதவியை ஏற்பதற்காகத் தமது தாயாரின் இடமான எமன் சென்றார்கள். அங்கே அவர்கள் திறமையும் நாணயமுமிக்க அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்று, அந்த வட்டார நிர்வாகியாகவும் ஆகிவிட்டார்கள்.

இமாமவர்கள் இந்தப் பகுதிக்குப் பதவி வகிக்க வந்தது, அவர்களுடைய கல்வியை மேலும் விருத்தி செய்துகொள்ளப் பெரிதும் வசதியாக இருந்தது. பதவியிலிருந்து கொண்டே எமனில் பிரசித்தி பெற்ற ஹுஜைல் கிளையாரோடு நெருங்கிப் பழகி, அரபு அகராதி, சரிதை, சொல்லிலக்கணம், யாப்பிலக்கணம் ஆகியவற்றில் திறமையான தேர்ச்சியடைய இமாமவர்களுக்கு வாய்ப்புக் கிட்டிற்று.

மேலும், இந்தப் பதவியிலிருந்து கொண்டே போர்ப் பயிற்சியிலும் அவர்கள் போதிய தேர்ச்சியடையவும் முடிந்தது. குறிப்பாகக் குறிபார்த்து அம்பெய்வதில் இமாமவர்கள் தனியானதோர் தேர்ச்சியடைந் திருந்தார்கள். தாங்கள் போர்ப் பயிற்சி பெற்று, திறமையான ஒரு போர் வீரராக விளங்கியதுபற்றி அவர்கள் பெருமையோடு பேசுவதுண்டு.

இந்தக் காலத்து அரசியல் நிலையை ஓரளவு நாம் நன்கறிவோம். அதாவது, முந்திய இரண்டு இமாம்களுடைய சரிதை களிலும் இக்கால அரசியல் நிலையை விவரித்துள்ளோம். அப்பாஸி யாக் கலீபாக்கள் அபுல் அப்பாஸ், அவர் சகோதரர் மன்சூர், அவருடைய மகன் முஹம்மது மஹ்தி, அவருடைய முதல் மகனார் மூஸா அல் ஹாதி ஆகியோர் ஹிஜ்ரி 170 வரை அடுத்தடுத்து ஆட்சி செலுத்திவிட்டனர். பிரஸ்தாப ஆண்டில் கலீபா ஹாரூனார் ரஷீது பட்டமேற்றார். இவர் நேர்மையாளர் என்றும், அறிவாற்றலில் சிறந்தவர் என்றும் பெயர் பெற்றிருப்பினும், இவரும் நபி பெருமானாரின் சந்ததியார்களைக் கொடுமைப்படுத்துவதை நிறுத்த வில்லை. அவர்கள் மீது ஐயம் கொண்டு இவரும் அவர்களை நசுக்கி வந்தார்.'' *

ஹஜ்ரத் அலீயின் வமிசத்தவரான ஜைது என்பவர் போரிட்டு மாண்டதையும், அவர் புத்திரர் யஹ்யா பஸராவின் அருகில் ஒரு போரில் கொல்லப்பட்டதையும் முன்னமேயே குறித்துள்ளோம். அது

* நேர்மையாளர், அன்பானவர், ராஜதந்தரி என்றெல்லாம் உலகப் புகழ் பெற்றிருந்த கலீபா ஹாரூனர் ரஷீதின் சரிதையை எழுத வேண்டியதிருக்க, அதை விடுத்த அவர் மகன் மாமூன் சரிதையை அல்லாமா ஷிப்லீ நுஃமானி எழுதினார். சகல வகையிலும் சரித்திரம் எழுதப் பொருத்தமானவர் ஹாரூன்தான். ஆனால், அவர் சாதாத்துகளை வெட்டித் தள்ளிச் செய்த கொடுமைகள் காரணமாகவே அவருடைய சரிதையைத்தான் எழுதவில்லை என்று அவர் தெரிவிக்கிறார்.



உமையாக்களின் அந்தியகால ஆட்சி நடந்து கொண்டிருந்த சமயம், அதனால், தமக்குப் போட்டியற்ற நிலையில் அப்பாஸியாக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அவர்கள் ஒரு பாவமும் அறியாத மதீனாவாழ் சாதாத்துகளுக்குச் செய்த கொடுமைகளை முன்னரே பார்த்தோம். இவ்விதமான கொடுமைகளை ஹாரூனர் ரஷீதும் தொடர்ந்து நடத்தி வந்தார்.

எமனில் இந்தக் கலீபாக்களின் பிரதிநிதியாக அதிகாரம் வகித்த இமாம் ஷாபியீ அவர்கள், தங்கள் நேரிய நடத்தையாலும், உயரிய ஒழுக்கத்தாலும், இனிய சுபாவத்தாலும், ஏழைகளுக்கு இரங்கும் இயல்பாலும் பொது மக்களுடைய அன்பைக் கவர்ந்து விட்டார்கள், அநியாயமான நடைமுறைகளை எல்லாம் அகற்றி விட்டார்கள். இவ்விதம் பலருக்கு நன்மையுண்டாகும் போது சிலருக்கு இடைஞ்சல் உண்டாவதும், அந்தச் சிலரும், தங்கள் சுயநலனுக்காகவே நீதி நேர்மையை மறந்து வாழ்பவர்கள் என்பதும் மனித சரிதை காட்டும் உண்மையன்றோ! எனவே, இமாமவர்களின் நேர்மையையும், இத்தகைய சுயநலமிகள் வெறுக்கலாயினர். குறிப்பாகப் பனூ ஹாரிஸ், தகீப் என்ற இரண்டு கூட்டத்தார், அந்த வட்டாரத்தில் அதிகாரிகளாக வருபவர்களுக்குப் போதுமான அளவு லஞ்சம் கொடுத்துச் சரிக்கட்டிக் கொண்டு தங்கள் இஷ்டப்படி ஆட்டம் போட்டு வந்தனர்.

இந்த இரண்டு கூட்டத்தாரும் இமாமவர்களை அணுகித் தங்கள் மாமூலான லஞ்சத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு வற்புறுத்தினர். இமாமவர்கள் ஆத்திரமிகக் கொண்டு அவர்களைக் கடிந்ததோடு, அவர்கள் நியாய வரம்பு தவறினால் தண்டிக்கப்படுவார்கள் என்றும் எச்சரித்தார்கள். அத்துடன் அந்தப் பிரதேசத்திலுள்ள நியாயமான நபர்கள் எழுவர் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, அன்றாட நிர்வாகங்களை இந்தக் குழுவின் பொறுப்பில் விட்டார்கள். தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளையும், ''எப்போதும் லஞ்சம் வாங்கக்

கூடாது; குடிமக்களைக் கொடுமைப்படுத்துவது பாவம்; நீதி வழங்குவதில் தாட்சண்யமே காட்டக்கூடாது; உயிர் போவதாயினும் நேர்மை தவறக் கூடாது.'' என்றெல்லாம் போதித்துத் திருத்தினார்கள், இதனால், பிரஸ்தாபக் கூட்டத்தார்கள். ஒரு சில அதிகாரிகளைச் சேர்த்துக் கொண்டு, இமாமவர்களுக்கெதிராகச் சதி செய்யலாயினர். இவர்களுள் முத்ரிப் என்ற அதிகாரி மிகுந்த செல்வாக்குடையவன், இவனுடைய நிருபங்கள் கலீபா ஹாரூனின் சபையில் அதிகமும் கவனிக்கப்படுவதுண்டு. இந்தச் சதிகாரர்கள் சார்பாக, இவன் ஹாரூனர் ரஷீதுக்கு ரகசியமாகக் கடிதமொன்று எழுதினான். அதில், ''அமீருல் மூமினீனே, உண்மையாகவே நீங்கள் எமன் பகுதி உங்கள் ஆதிக்கத்திலிருக்க வேண்டும் என்று நாடினால் உடனே இங்குள்ள நிர்வாக அதிகாரியான முஹம்மது பின் இத்ரீஸ் ஷாபியீ என்பவரைப் பதவி நீக்கம் செய்து, அவருடைய ராஜத் துரோகமான குற்றத்தை விசாரித்து அவரைத் தக்கபடி தண்டிக்க வேண்டும்'' என்று எழுதியிருந்தான்.

இச்சமயம் மதீனாவின் வட பகுதியான தீலம் என்ற பிரதேசத்தில் இமாம் ஹுஸைனின் பேரரின் பேரர்களுள் ஒருவரான யஹ்யா பின் அப்துல்லாஹ் கலீபாவுக்கெதிராகக் கலகக் கொடியைத் தூக்கினார். உடனே கலீபா ஹாரூனர் ரஷீது, தமது மதிமந்திரி யஹ்யா பர்மகீயின் புத்திரர் ஜஃபர் என்பவர் தலைமையில் அங்கே படையொன்றை அனுப்பினார். அந்தப் படை யஹ்யாவின் படைகளைச் சிதறடித்து அவரையும் கொன்று விட்டது.

இந்தக் கிளர்ச்சியால் கிலியடைந்த கலீபா ஹாரூனர் ரஷீது சாதாத்துகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கலானார். இத்தகைய தருணத்தில் தான் முத்ரிபின் கடிதம் அவர் பார்வைக்கு வந்தது.



## கலீபாவின் கைதி

''யார் இந்த ஷாபியீ?'' என்று கலீபா விசாரித்தார். விபரம் கொடுக்கப்பட்டது. ''ஓஹோ குறைஷிக் குலத்தவரா, ஹாஷிமியா சரிதான்!'' என்று தமது புருவத்தை உயர்த்தினார் அவா. நபியின் உதிரம் தம் உடலில் ஓடிய அத்தனை மகான்களையுமே தமது ஆட்சியின் எதிரிகளாக எண்ணித் தொலைப்பதில் முனைந்திருந்த மன்னர்களில் ஒருவரல்லவா! சாதாத்துகள் என்றாலே அவருக்குக் குலை நடுக்கம்! அவர்கள் வமிசத்தினர் கையில் சிறு அதிகாரம் கிடைப்பினும் தமது ஆட்சியின் அஸ்திவாரமே அசைந்து சாய்ந்து விடும் என்று அஞ்சினார். எனவே, இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்க வேண்டும் என்று அவர் அனுமானித்தார். உடனே உத்தரவு வெகு வேகமாகப் பறந்தது. எமனிலிருக்கும் அதிகாரி முஹம்மமு பின் இத்ரீஸ் ஷாபியீயையும், அந்த வட்டாரத்திலுள்ள சாதாத்துகள் அனைவரையும் பிடித்து விலங்கிட்டுத் தமது சபைக்கு அனுப்புமாறு அந்த உத்தரவில் கண்டிருந்தது. இது அந்தப் பகுதியில் இருந்த ராணுவ அதிகாரியான ஹம்மாத் பர்பரி என்பவருக்குக் கிடைத்ததும். அவர் அதில் கண்டபடி செய்துவிட்டார்.

இவ்விதம் பக்தாதுக்குக் கொண்டுவரப்பட்ட சாதாத்துகளும், இமாம் ஷாபியீ அவர்களும் சிறையிலடைக்கப்பட்டனர். பின்னர், ஒரு நாள் இமாம் ஷாபியீ அவர்களும், அவர்களோடு சாதாத்துகள் சிலரும், கைகளில் விலங்குகளுடன் விசாரணைக்காகக் கலீபாவின் அவைக்குக் கொண்டு வரப்பட்டனர். இமாமவர்களின் பெயர் கூறப்பட்டதும் கலீபா ஹாரூனர் ரஷீது அவர்களை ஏளனப் புன்னகையோடு நோக்கினார்.

''அரசாங்க அதிகாரியாக இருந்து கொண்டு அரசியல் துரோகம் செய்ததாக உம்மீது குற்றம் கூறப்படுகிறதே, அதற்கு நீர் என்ன பதில் சொல்கிறீர்?'' என்று அவர்களிடம் வினவினார்.

"காட்டிக் கொடுக்கும் கசடர் கூட்டத்திடம் கேட்க வேண்டிய கேள்வியை என்னிடம் கேட்டு விட்டீர்கள் அமீருல் மூமினின்!" என்று இமாம் ஷாபியீ கூறினார்கள். அப்போது இமாம் ஷாபியீயின் கல்வியும் மேதைமையும் பற்றி சபையிலிருந்த கலீபாவின் அந்தரங்க ஆலோசகரான ஹர்ஸமா என்பவர் கலீபாவிடம் கூறினார்.

உடனே கலீபா இமாம் ஷாபியீயின் அறிவுத்திறனை அளவிடுவதற்காக அவர்களிடம் கேள்வியொன்று கேட்டார்.

"அல்லாஹ்வின் வேதத்தைப்பற்றி உமது அபிப்பிராயமென்ன?"

"எந்த வேதத்தைப்பற்றி? திருக்குர்ஆனைப் பற்றியா, அதற்கு முன்னர் இறைவன் பல்வேறு நபிமார்களுக்கு இறக்கித் தந்தானே அவற்றுள் எதையும் பற்றியா?" என இமாமவர்கள் வினவினார்கள்.

"திருக்குர்ஆனைப் பற்றியே வினவுகிறேன்."

"திருக்குர்ஆனின் எந்த அம்சத்தைப் பற்றிக் கேட்கிறீர்கள்? அது எல்லையற்ற பெருங்கடலல்லவா! அதிலுள்ள ஏவல் விலக்கல் வரும் பகுதிகளைப் பற்றியா? உவமைகளைப் பற்றியா? மக்காவிலிறங்கிய, மதீனாவிலிறங்கிய திருவசனங்கள் பற்றியா? பகலில், இரவில் இறங்கிய வசனங்கள் எவை எவை என்பதுபற்றியா? ஒரே பொருளுள்ள வசனங்கள் பற்றிய? நாஸிக் (மாற்றி வைத்தது) மன்சூக் (மாற்றப்பட்டது) பற்றியா? அல்லது அவற்றிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை பற்றியா?..." இமாமவர்கள் வெகு சாதரணமாக இவ்விதம் எழுபத்து மூன்று வகைகளைப்பற்றி வினவிக் கொண்டே போனதும் கலீபா அசாதரணமாகத் திகைப்படைந்து விட்டார். இமாமவர்கள் கைகளில் பூட்டப்பட்டிருந்த விலங்குகளை அகற்றுமாறு கட்டளையிட்டார்.

பின்னர் அவர்களை நோக்கி, "இவ்வளவு ஞானத்தையும் ஒரு மனிதனால் அடைய இயலுமா?" என்று வினவினார்.



"அடைந்தால்தான் அவன் உண்மையான ஹாபிஸ் ஆவான்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

"அதிருக்கட்டும், 'சூரத்துல் பாத்திஹா'வில் எத்தனை எழுத்துக்கள் உள்ளன?"

"'பிஸ்மி' யைச் சேர்த்தா, சேர்க்கலாமா?"

"சேர்க்காமல்"

"சேர்க்காமல் நூற்று இருபத்தெட்டு"

இமாமவர்களின் அனாயசமான பதில் கலீபாவைத் திகைக்க வைத்து விட்டது. பின்னர் ஹதீஸைப்பற்றி வினவினார். அதற்கும் விரிவாக அவர்கள் பதிலளித்தார்கள். அவர்களுடைய அரபி மொழி ஞானம் பற்றிக் கலீபா வினவினார், அதற்கும் இமாமவர்கள் அருமையாகப் பதில் கொடுத்தார்கள். பின்னர் கவிதைகள் பற்றி அவர் வினவினார். அறியாமைக் காலத்திலும், இஸ்லாம் தோன்றிய பின்னரும் எழுதப்பட்ட கவிதைகள், அவற்றின் தராதரங்கள், அவற்றில் மகிழ்ச்சிகரமானவை, சோகமானவை போன்ற அத்தனை வகைகளும் தங்களுக்குத் தெரியும் என்று இமாமவர்கள் கூறினார்கள். பின்னர், சட்டதிட்டங்கள், வைத்திய சாஸ்திரம், தலைமுறை சாஸ்திரம், முதலியன பற்றியெல்லாம் வினவப்பட்ட போதும் இமாவர்கள் அருமையான விடைகள் அளித்தார்கள்.

"இத்தனை அறிவுத்திறம் படைத்த உங்களுக்கு எப்படி இந்தக் கஷ்டம் வந்தது?" என்று கலீபா அவர்களிடம் வினவினார்.

"அறிஞனுக்கு வரும் கஷ்டம் தங்கத்தை நெருப்பில் காய்ச்சுவது போன்றது; அதனால் அவன் மாற்றுத்தான் உயரும்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

இப்போது கலீபா ஹாரூன் இமாமவர்களைத் தமக்கு உபதேசம் அருளும்படி கேட்டார். "அமீருல் மூமினீன், உங்கள் முன் நான் உபதேசமருளக் காத்திருக்கிறேன். ஆனால், பெருமையை ஒதுக்கிப்

பணிவுடண் காது தாழ்த்திக் கேட்க வேண்டும்; கேட்டு, இறைவன் சமுகத்தில் உங்களைத் தாழ்மையான அடியாராக ஆக்கிக் கொள்ள வேண்டும்'' என்று இமாமவர்கள் கூறினார்கள். கலீபா சமிக்ஞை யாலேயே அதை ஏற்றதாகக் கூறியவுடன் இமாமவர்கள் ஓர் அற்புதமான உபன்னியாசத்தை அங்கே நிகழ்த்தினார்கள். அதைக் கேட்டுக் கலீபாவே கண்ணீர் உகுத்து அழுதார்.

அவர்கள் பேசி முடிந்ததும் கலீபா தமது இருக்கையிலிருந்தே துள்ளி எழுந்து நின்று, ''மெய்யாகவே, முஹம்மது பின் இத்ரீஸ், முஹம்மது பின் ஹஸனை * விடச் சிறந்த மேதைதாம்'' என்று கூறினார். அத்துடன் தமது ஆலோசகர் ஹர்ஸமாவை நோக்கி, அவர்களை விடுதலை செய்வதுடன், அவர்களுக்கு அன்பளிப்புச் செய்து அரசாங்க மரியாதைகளுடன் அனுப்புமாறு உத்தரவிட்டார். அந்த ஆலோசகர் இமாமவர்களுக்கு ஆயிரம் தீனார்கள் அன்பளிப்பு நல்கி, சகல மரியாதைகளோடும் அவர்களை அனுப்பி வைத்தார் என்று சொல்லப்படுகிறது.

## மக்காவின் முப்தி

மீண்டும் இமாம் ஷாபியீ அவர்கள் எமனில் பழைய வேலையை ஏற்பதாயின் அதில் அவர்களை அமர்த்துவதாக அந்த ஆலோசகர் அவர்களிடம் விசாரித்தார். அவர்கள் அதற்கு இணங்கவில்லை. எனவே, இமாமவர்கள் மக்கா திரும்பிய பின்னர் அவர்களை மக்காவின் முப்தியாக நியமனம் செய்திருப்பதாகக் கலீபா விடமிருந்து உத்தரவு வந்தது. தங்களுடைய அதீதமான அறிவும், அனுபவமும் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதற்குப் பயன்படுமாதலாலும் மக்களுக்குச் சேவை செய்ய இது வழிசெய்யுமாதலாலும் இமாமவர்கள் இந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்கள்.

---

** இமாம் அபூ ஹனீபாவின் பிரதான மாணவரும், ஹனபி மத்ஹபின் சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்திய இருவர்களுள் ஒருவருமான இமாம் முஹம்மதையே கலீபா குறிப்பிடுகிறார்.*



இமாம் ஷாபியீ மக்காவின் முப்தியானதால், தங்கள் உள்ளக்கிடக்யைச் செயலில் காட்டவும் வாய்ப்புக் கிட்டிற்று. அதாவது, அவர்கள் தாங்களே ஒரு மதரஸாவைத் தொடங்கி ஹதீஸ், பிக்ஹுப் பாடபோதனை அளிக்க வேண்டும். மார்க்கத் தீர்ப்புகள் வழங்க வேண்டும் என்று கொண்டிருந்த ஆர்வம், இப்போது நிறைவேற லாயிற்று. இமாம் ஷாபியீயின் மதரஸாவைத் தேடி நெடுகிலிருந்தும் மாணவர்கள் வரலாயினர். ''எத்தகைய சிக்கலான பிரச்சினைக்கும் உடனடியாகத் தெளிவான விளக்கத்தோடு தீர்ப்பளிக்கும் திறமை கொண்டவர்கள் இமாம் ஷாபியீயைப்போல வேறு யாரையும் நான் காணவில்லை'' என்று பின்னர் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் அருளியதுபோல அப்போதே இமாமவர்களின் தீர்ப்புகள் நாடு நெடுகிலும் புகழ் பரப்பலாயின.

## பக்தாதில்

ஹிஜ்ரி 195 வரை (அதாவது தங்களுடைய நாற்பத்தைந்தாவது வயதுவரை) இமாமவர்கள் மக்காவிலேயே தங்கியிருந்து மகத்தான மார்க்கச் சேவைகளைச் செய்தார்கள். அப்போது பக்தாத் இஸ்லாமிய உலகின் தலைநகராகப் பல விதத்திலும் சிறப்புப் பெற்றுக் கொண் டிருந்தது. உலகின் அறிஞர்கள், மார்க்க வல்லுனர்கள் பலரும் அங்கே வந்து குழுமிக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர், இமாம் ஷாபியீ அவர்களும் பக்தாத் வந்தால் நலம் என்றும், அதன் மூலம் அவர்கள் மேதாவிலாசத்தின் பயனை இன்னும் அதிகமானவர்கள் பெற இயலுமென்றும் அழைத்துக் கொண்டிருந்தனர். கலீபா ஹாரூனர் ரஷீதும் அத்தகைய அழைப்பு ஒன்றை விடுத்தார். எனவே, இமாமவர் கள் மக்காவை விட்டுப் புறப்பட்டு பக்தாத் சென்றடைந்தார்கள்.

இமாம் ஷாபியீ அவர்களுக்கு மகத்தான வரவேற்பு கொடுப்பதற்காகக் கலீபா ஹாருனர் ரஷீது பெரிய ஏற்பாடுகள் செய்தார். நகரிலிருந்த சகல அறிஞர்களும், பெரியார்களும் அந்த வரவேற்பில் கலந்து கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அவருடைய ஆஸ்தான மண்டபத்தில் அறிஞர்கள் கூட்டம் பொங்கிப் பெருகிக்

கொண்டிருந்தது. இமாம் ஷாபியீ அவர்கள் உரிய மரியாதையோடு உள்ளே அழைத்து வரப்பட்டார்கள். தங்களுக்குத் தரப்பட்ட வரவேற்புக்குப் பதிலளித்து அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு யாவரையும் பரவசப்படுத்திவிட்டது. இவ்வளவு அற்புதமான உபன்னியாசத்தையும் நிகழ்த்த முடியுமா என்று யாவரும் திகைத்துவிட்டனர். ஹாரூனர் ரஷீது உணர்ச்சி வசமாகிக் கண்ணீர் சிந்தினார். பேச்சு முடிந்ததும், இமாமவர்களைத் தமது அருகிலமர்த்தி, ஐம்பதாயிரம் திர்ஹம் வைக்கப்பட்ட ஒரு தட்டைத் தமது கையாலேயே இமாமவர்களிடம் அவர் நல்கினார்.

இமாமவர்கள் வெளியில் வந்ததும், அந்த ஐம்பதாயிரம் திர்ஹங்களில் நாற்பதாயிரத்தை உலமாக்களுக்கும், துறவிகளுக்கும் ஏழை, அனாதை, திக்கற்ற விதவைகள் ஆகியோருக்கும் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்கள். இதைக் கண்ட ஒருவர், ''கலீபா தங்களுக்கு அன்பளிப்பாகத் தந்ததை நீங்கள் ஏன் இவ்வாறு பங்கிட வேண்டும்?'' என்று வினவினார். அது கேட்ட இமாமவர்கள், ''அவர்களின் செல்வத்தில் யாசிப்போர்களுக்கும் பங்கு இருக்கிறது'' என்ற திருக் குர்ஆன் வசனத்தை ஓதிக்காட்டி, ''இதனால்தான் இவர்களுக்குரிய பங்கைக் கொடுத்தேன். மேலும், இந்தச் செல்வம் அவர்களிடமிருந்து கலீபாவிடம் போனதுதான். இது மீண்டும் அவர்களிடம் போய்ச் சேர என்னையும் இறைவன் ஒரு சிறிய கருவியாக ஆக்கிவிட்டான். அதனால்தான், இப்படி வாங்கி அப்படிக் கொடுத்துவிட்டேன். மேலும், மறுமையில் இறைவன் இந்தக் கடமையை நான் சரிவரச் செய்தேனா என்று வினவும்போது திருப்திகரமாகப் பதிலளிக்க வேண்டுமல்லவா!'' என்று பதிலளித்தார்கள்.

இமாமவர்களின் மீது கலீபா ஹாரூனுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும் உண்டாக்கிவிட்டது. எனவே, அவர்கள் விரும்பும் எந்தப் பகுதியிலும் அவர்களை நீதிபதியாக நியமிப்பதாகத் தெரிவித்தார். இத்தகைய அரசாங்கப் பதவிகளின் பலாபலனை இமாமவர்கள் நன்கு அறிவார்கள். இதே நீதிபதிப் பதவியின் சாக்கில்தான் இமாமுல் அஃலம் அபூ ஹனீபாவின் உயிர் குடிக்கப்பட்டது என்பதையும் அறிவார்கள்.



எனவே, அதற்கு அவர்கள் இணங்கவில்லை. அவர்களுடைய நோக்கம் முஸ்லிம் சமூகம் முழுவதற்கும் சேவை செய்வதாகும். அதற்கான வழிமுறைகளில் ஈடுபடவேண்டும் என்று அவர்கள் தீர்மானித்திருந்தார்கள். அதனால், அரசாங்கத்தோடு தங்களைக் கட்டிப் போடும் எந்த ஒரு வேலையையும் ஏற்க அவர்கள் தயாராயில்லை. அவர்கள் மனநிலையைப் புரிந்து கொண்ட கலீபா ஹாரூன் அவர்களை வற்புறுத்தாது விட்டு விட்டார்.

பக்தாதில் இரண்டாண்டுகள் தங்கி, மார்க்கத் தீர்ப்புகள் வழங்கவும், மார்க்க உபன்னியாசங்கள் புரியவுமாக அவர்கள் வாழ்ந்திருந்தார்கள். எண்ணற்றவர்கள் அவர்களுடைய போதனை களால் பயனடைந்தார்கள். இமாமவர்கள் பக்தாத் வருமுன், பக்தாதிலுள்ள ஜாமிவுல் கர்பிய்யி என்ற மஸ்ஜிதில் இருபது அறிஞர்கள் தனித்தனியே பாடம் நடத்திவந்தனர். இமாமவர்கள் பாடபோதனை தொடங்கியபின் அவர்களில் பதினாறு பேர் வேறு இடங்களுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. யாவரும் கலாஞான போதத்துக்கு இமாமவர்களிடமே வரலாயினர்.

பக்தாதில் இமாமவர்கள் முதலில் பிஷ்ருல் மரீஸீ என்பவருடைய வீட்டில் தங்கியிருந்தார்கள். அந்த வீட்டில் மாடி முழுமையையும் இமாமவர்களின் உபயோகத்துக்காக அவர் ஒதுக்கிக் கொடுத்தார். சில நாட்களுக்குப் பின்னர் அவருடைய தாயார் இமாமவர்களிடம் வந்து, ''நீங்கள் ஏன் இந்த 'ஜிந்தீக்' (சமுதாயத்துக்கே ஆபத்து விளைவிக்கும் மார்க்க முரணான காரியங்களைச் செய்யும் புற ஒழுக்கவாதி) வீட்டில் தங்கியிருக்கிறீர்கள்?'' என்று வினவினார். அதாவது, இந்த பிஷ்ர் ஒரு முஃதஜிலாவாக இருந்ததையே அவர் இவ்விதம் சுட்டிக்காட்டினார். உடனே இமாமவர்கள் அவருடைய வீட்டைக் காலிசெய்து கொண்டு அபூஹஸ்ஸான் என்பாருடைய வீட்டில் போய்த் தங்கிக் கொண் டார்கள். அவர் இமாமவர்களுக்கு மிகுந்த மரியாதை செய்து வந்தார். அங்கே ஓர் ஆண்டுவரை தங்கியிருந்து, பின்னர் ஸஃபரானீ என்பாருடைய வீட்டில் போய்த் தங்குவதற்குப் புறப்பட்டார்கள். அவர்கள்

தமது வீட்டை விட்டுப் போவது குறித்துப் பெரிதும் வருந்திய அபூ ஹஸ்ஸான் அவர்களுக்குப் பல காணிக்கைகளையும் கொணர்ந்து கொடுத்து வழியனுப்பினார். கடைசியில் மக்கா திரும்பும் வரை ஸஃபரானீயின் வீட்டிலேயே அவர்கள் தங்கியதாகச் சொல்லப்படுகிறது.

பக்தாதிலும் - அதன் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பல்வேறு நகரங்களிலும் - இமாம் அபூ ஹனீபா அறிவித்துத் தந்த பிக்ஹு 'மஸ்அலா'க்களை ஒட்டிய தீர்ப்பே அச்சமயம் வழங்கப்பட்டு வந்தது. காரணம், கலீபா ஹாரூனர் ரஷீதின் பிரதான சட்ட ஆலோசகரும், பிரதம நீதிபதியுமான இமாம் அபூ யூஸுப், இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ஷைபானிய்யியுடன் சேர்ந்து ஹனபி மத்ஹபின் சட்டதிட்டங்களை ஒழுங்குபடுத்தியதுடன், நாடு முழுவதிலுமுள்ள நீதிமன்றங்கள் யாவும் அந்த அடிப்படையிலேயே தீர்ப்புகள் அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டு விட்டார்கள். இதைக் கலீபா ஹாரூனர் ரஷீதும் ஆதரித்தார். இதன்மூலம் குழப்பங்கள் தவிர்க்கப்பட வேண்டும். ஒரேவிதமான சட்ட அடிப்படையில் தீர்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும் என்று அவர் கருதினார். இமாம் ஷாபியீயோ, இமாம் அபூ ஹனீபாவிலிருந்து பல விஷயங்களில் அபிப்பிராய பேதமுள்ளவர்களாக இருந்தார்கள். எனினும், அவர்களுடைய மேதைமையையும், அவர்கள் திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலேயே தமது முடிவை வெளியிட்டதால், அந்தத் தீர்ப்புக்களின் மாண்பையும் கலீபாவும், இமாம் அபூ யூஸுபும் மதித்தார்கள். கலீபாவின் அவையில் இமாமவர்களுக்கு முக்கியமான இடமளிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டு வந்தது. கலீபாவின் பிரதமர் உட்படப் பலரும் அவர்களிடம் விஷேச அன்பு பாராட்டி வந்தனர். உண்மையான-அறிஞன்-பயபக்தியுள்ளவன்-எங்கு சென்றாலும் மதிக்கப்படுவான் என்பதற்கு இமாமவர்கள் நற்சான்றாக விளங்கினார்கள்.

ஆனால், ஹிஜ்ரி 193-ல் (ஜமாதுல் ஆகிர், பிறை நான்கு, சனிக்கிழமையன்று) கலீபா ஹாரூனர் ரஷீது காலமானதுடன் அரச சபையின் நிலையில் பல மாறுதல்கள் உண்டாகிவிட்டன. ஹாரூனின்



மூத்த மகன் அமீன் நான்கு வருஷம் எட்டு மாதம் ஆட்சி செய்தார். அரைக் கிறுக்கன்போல் காரியம் செய்த இந்தக் கலீபா, கேளிக்கைப் பிரியனாகப் போகத்தில் மூழ்கவே, இவருடைய சபையில் நல்லவர்கள் போகவரவே மார்க்கமற்றுவிட்டது. இதனால்தான், இமாமவர்கள் அரசவைத் தொடர்புகளைத் துண்டித்துக் கொண்டு தங்கள் பாட போதனை, மார்க்கத் தீர்ப்பு வழங்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தார்கள். ஹிஜ்ரி 197 கடைசியில் அமீன் ஆட்சியில் குழப்பம் மிஞ்சிய சமயம் அங்கிருந்து புறப்பட்டு மக்காவுக்கு ஹஜ் செய்வதற்காகப் போய்விட்டார்கள். அவர்கள் பக்தாத் திரும்பு முன் ஹிஜ்ரி 198 முஹர்ரம் மாதம் கலீபா அமீன் கொலை செய்யப்பட்டு, மாமூன் கலீபாவானார். இவர் உலகின் சிறந்த ஆட்சியாளர்கள் சிலருள் ஒருவராகக் கணிக்கப்படுபவராவார். ஆனால், இவருடைய ஆட்சியில் முஃதஜிலாக்களின் ஆதிக்கம் ஓங்கிவிட்டது. இமாமவர்கள் மக்கா போய் ஹஜ்ஜை முடித்துக் கொண்டு பக்தாத் திரும்பிய போது இமாம் அபூ யூஸுப் போன்ற மேதைகள் இருந்து மார்க்கச் சட்டம் வளர்த்த அதே நகரில் இன்று முஃதஜிலாக்களே கொட்டமடிக்கக் கண்டார்கள். நகரப் பிரதம நீதிபதியாகக்கூட அவர்களுள் ஒருவரே நியமனமாகி இருந்தார். இதுகண்டு மனக் கசப்படைந்த அவர்கள் பக்தாதை விட்டுக் கிளம்பி எகிப்து சென்றுவிட முடிவு செய்து ஹிஜ்ரி 198 ஷவ்வாலில் அங்கே போய்விட்டார்கள்.

இமாமவர்கள் பக்தாதைவிட்டுப் புறப்படுவது அங்கிருந்த அவர்களுடைய மாணவர்களுக்குப் பெருத்த வேதனையை அளித்தது. அவர்களுள் தலையாயவர்களான இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் இமாமவர்களை நெருங்கி, "நீங்கள் எங்கு புறப்படுகிறீர்கள்?" என வினவினார்கள். அதற்குப் பதிலாக இமாமவர்கள்,

"என் நப்ஸ் (மனம்)
எகிப்துமீது ஆசையானதாகக் கண்டேண்;
அதற்கிடையே காடு, வனாந்தரமெல்லாம்

நடந்தாக வேண்டும்.
அல்லாஹ்வின் ஆணை,
நான் எகிப்தின்பக்கல் ஈர்க்கப்படுவது
சுகமும், வாழ்வும் பெறுவதற்கா
என்பதை நான் அறியேன்."

என்ற கருத்துள்ள ஒரு பாடலிலேயே பதிலளித்து விட்டார்கள்.

## எகிப்தில்

இமாம் மாலிக்கின் மத்ஹபைப் பின்பற்றியவர்கள் எகிப்தில் அதிகமிருந்தனர். எனவே, இமாம் மாலிக்கின் தலையாய மாணவரும், அச்சமயம் பிரபலமடைந்த விட்டவர்களுமான இமாம் ஷாபியீ அவர்களைத் தங்களிடையே வரவேற்க அந்தக் கூட்டத்தார் ஆவல் கொண்டிருந்தனர். இதனால், இமாமவர்கள் கெய்ரோ சென்ற சமயம், அங்கே உற்சகமான வரவேற்பு நல்கினர்; இமாமவர்களுக்கு ஆதரவு அளித்தனர். அவர்களுடைய சொற்பொழிவுகளையும், தீர்ப்புக்களையும் கேட்க ஆயிரக்கணக்கில் வந்து கூடினர். ஆனால், விரைவிலேயே மாலிக்கி மத்ஹபைப் பின் பற்றியவர்களில் பெரும் பாலோருக்கு இமாமவர்களிடம் ஆத்திரமுண்டாகலாயிற்று. தங்களுடைய ஆசிரியரான இமாம் மாலிக் அவர்கள் ஒவ்வொரு பிரச்சினையும் பற்றி எவ்விதம் அபிப்பிராயப்பட்டுள்ளார்களோ அது போன்றே இமாம் ஷாபியீயும் அபிப்பிராயப்பட வேண்டும் என்று அந்த மக்கள் எதிர்பார்த்தார்கள். இமாம் ஷாபியீ தங்கள் சுயமான அபிப் பிராயங்களை வெளியிட்டபோது, அவற்றில் சில இமாம் மாலிக்கின் அபிப்பிராயத்துக்கு முற்றுமே மாறுபட்டவையாக இருக்கக் கண்டு அவர்கள்மீது கோபம் கொள்ளலாயினர். இமாம் ஷாபியீ பேசும் கூட்டங்களைப் பகிஷ்கரித்தனர். அவர்களை அதிகமாகப் பொருட்படுத்தாது ஒதுக்கலாயினிர்.



இதையெல்லாம் கண்ட இமாம் ஷாபியீ அவர்கள் தங்களுக்குள் ளேயே நகைத்துக் கொண்டார்கள். கலாஞானத்தின் பெருமையை அறிய முடியாதபடி துவேஷத்தால் அறிவு மறைக்கப்பட்ட மக்களைக் கண்டு அவர்கள் அனுதாபப்பட்டார்கள். அத்துடன், கவிதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர்களான இமாமவர்கள் ஒரு பாடலில் இதுபற்றி இந்தக் கருத்துப்படப் பாடினார்கள்:

என் (கல்வியறிவெனும்) நன் முத்துமாலையை
ஒட்டகம் மேய்ப்பவர்களுக்கா கொடுப்பேன்?
இறைவன் நல்லருளால் உரிய ரசிகன் கிட்டும்போது
அவனிடம் அன்புகொண்டவனாக
என் முத்தாரத்தை அவனுக்களிப்பேன்.
இன்றேல், இது வீணாகவன்றோபோகும்!
அறிய மறுக்கும் மூடன்முன் கலாஞானத்தை
உதிர்ப்பவன் அதை விரயமாக்கியவனாவான்;
அறிவை விழைபவனுக்கு அதைத் தர மறுப்பவன்
அநியாயக்காரனே யாவான்.

ஒரு கூட்டத்தார் தங்களை வெறுக்கின்றனர் என்பதற்காக இமாமவர்கள், தங்கள் சேவையை நிறுத்திவிடத் தயாராயில்லை. மேலும், இமாமவர்களின் தாய் வழியைச் சேர்ந்த அஜ்து இனத்தார் சிலர் கெய்ரோவிலும் இருந்தனர். இமாமவர்கள் அவர்களோடுதான் தங்கியிருந்தார்கள். அவர்கள் இமாமவர்களுக்குப் பெருத்த மதிப்புக் காட்டி வந்தனர். எனவே, கெய்ரோவிலும் மதரஸா ஒன்று தொடங்கி, ஹதீஸ், பிக்ஹு வகுப்புகளை நடத்தலானார்கள்; மார்க்க சம்பந்தமான தீர்ப்புகளை வழங்கலானார்கள். மேலும், அறிவு முதிர்ச்சியடைந்து விட்ட இந்த நிலையில் பல அருமையான நூல்களை எழுதவும் அவர்களுக்கு வாய்ப்பிருந்தது. இவ்விதம் சுமார் ஆறு ஆண்டுகள் இமாமவர்கள் அங்கே தங்கி மாபெரும் மார்க்கச் சேவை செய்தார்கள்.

## மரணம்

இச்சமயம் அவர்களுக்கு மூலவியாதி வந்துவிட்டது. அதனால் ஆசனத்திலிருந்து இரத்தம் விழலாயிற்று. இதற்கிடையிலும் அவர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகவே செய்து கொண்டு வந்தார்கள். அற்புதமான நூல்கள் பலவற்றை இந்த வேதனையிடையிலும் அவர்கள் எழுதி முடித்தார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளாகக் வேதனைப்படுத்திய மூலவியாதி பின்னர் அதிகமாகிவிட்டது. இதனால், அவர்கள் வாகனத்தின் மீது அமர்ந்தால், இரத்தம் பீரிட்டு வாகனத்தின் மீது போடபட்டிருக்கும் துணியையெல்லாம் நனைத்து விடும் என்று ஹாபிஸ் இப்னு ஹஜர் கூறுகிறார்கள். இவ்விதம் அவர்கள் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் போதே கயவன் ஒருவனின் சம்மட்டி யடியால் அவர்களுக்கு மரணம் சம்பவித்தது என்று சொல்லப்படுகிறது.

மாலிக்கி மத்ஹபைச் சேர்ந்த வக்கிர மனம் படைத்தவர்கள் சிலர், இமாமவர்களிடம் கடுமையான துவேஷம் கொண்டு அவர்கள் மாண்டுபோனால் எவ்வளவோ நலமாக இருக்குமே என்று கூட எண்ணத் தலைப்பட்டு விட்டனர். தங்களுக்கு மத்ஹபை வழங்கிய மகானின் அபிமான மாணவரை, உலகம் கண்டிராத பேராற்றல் பெற்ற பெரியாரை மிகவும் இழிவாக ஏசிப் பேசலாயினர். இவர்களுள் ஒருவனான அஷ்ஹப் என்பவன் "இறைவா, இந்த ஷாபியீயைச் சாகடித்துவிடு! இன்றேல், மாலிக்கி மத்ஹபே அழிந்துவிடும்" என்று அடிக்கடி பிரார்த்திப்பதைக் கண்ட முஹம்மது பின் அப்துல்லாஹ் என்பவர் இதை இமாமவர்களிடம் போய்த் தெரிவித்தார். இதைக் கேட்ட இமாமவர்கள், "நான் மரித்து விடவேண்டும் என்று பலர் விரும்புகின்றனர். ஆனால், நான் இறந்து இவர்கள் மட்டும் சிரஞ்சீவிகளாக இருந்து விட முடியுமா என்ன?" என்று கூறிவிட்டார்கள். (இதுபோன்றே இமாமவர்கள் காலமான பதினெட்டாம் நாள் இந்த அஷ்ஹபும் காலமாகிவிட்டான்.)

இச்சமயத்தில் இமாமவர்கள் கொடுத்த மார்க்கத் தீர்ப்பு ஒன்று மாலிக்கிகளையே ஆத்திரம் கொள்ளச் செய்தது. அப்போது



கெய்ரோவில் மாலிக் மத்ஹபின் தலைவர்களுள் ஒருவனாக இருந்த பீத்தான் பின் அபிஸ் ஸம்உ என்பவன் வெறி தலைக்கேறியவனாக இமாமவர்களின் முன்னர் போய் நின்று, அவர்களை கடுமையாகத் திட்டலானான். இதனால், அவன் காவலதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, விசாரணை நடந்து தண்டிக்கப்பட்டான். உடனே அவனுடைய ஆத்திரம் அணை கடந்துவிட்டது. இமாமவர்களைப் பழிவாங்கச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் இரவில் இமாமவர்கள் இருளில் தனியே போய்க் கொண்டிருந்தார்கள். இதைக் கவனித்த பீத்தான், அவர்களின் பின்னால் பதுங்கிப்போய், ஒரு சம்மட்டியால் இமாமவர்களின் தலையிலடித்துவிட்டான். அதனால் இமாமவர்கள் மண்டை உடைந்து, ரத்தம் பீரிடக் கீழே விழுந்து விட்டார்கள். மரணப்பிணி அவர்களைப் பற்றிக் கொண்டு விட்டது. கட்டுகளுடன் இமாமவர்கள் படுக்கையில் கிடத்தப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய உணர்வு மாறவில்லை; நினைவு பிசகவில்லை. அல்லாஹ்வின் நினைவிலேயே தங்கள் மரண வேதனையை அவர்கள் மறக்க முயன்று கொண்டிருந்தார்கள்.

அச்சமயம் இமாம் முஜ்னீ என்பவர்கள் அவர்களை அணுகி, "குரு மகானே, தங்கள் உடல்நிலை எப்படியிருக்கிறது?" என்று வினவினார்கள். "இன்று என் சகோதர்களையும், இவ்வுலகையும் விட்டு விடைபெற்று, என் அமல்களுக்காக இறைவனிடம் கூலிபெறப் போய்க் கொண்டிருக்கிறேன். என் ஆவி சொர்க்கம் சென்று இன்பமடையுமா, இல்லை, நரகம் சென்று வேதனை அடையுமா என்பது எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார்கள்.

மக்ரிப் நேரத்தில் சமிக்ஞையாலேயே தொழுகையை நிறை வேற்றினார்கள். அவர்களுடைய நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அருகிலிருந்தவர்களிடம், "இந்த நகரிலுள்ள உத்தமரான இத்ரீஸ் அவர்களை எனக்காகப் பிரார்த்திக்குமாறு கூறுங்கள்" என்று தெரிவித்தார்கள். அதன்பின் பலஹீனமான, ஆனால், தெளிவான குரலில் அவர்கள் கீழ்க்காணுமாறு பிரார்த்தித்தார்கள்: "கிருபை யாளனே! இறைவா! நான் குற்றம் குறைகள் நிறைந்தவன். எனவே

தான், உன் சந்நிதியில் அருட் பிச்சையை யாசிக்கிறேன். என் நிலை நெருக்கடியானதாகி, வேறு போக்கற்ற நிலையில் என் நம்பிக்கையை உன் திருச்சமூகத்துக்குக் கொணர்ந்துள்ளேன். அடியார்களின் குற்றம் குறைகள் அனைத்தையும் மன்னித்து, அவர்களுக்கு மகத்தான அருட்பேறுகளை வழங்குபவன் நீயே அன்றோ! எங்களுடைய அவல நிலையில் உன் மன்னிப்பும் கருணையும் மட்டும் இல்லாது போயின் ஷைத்தானின் ஏமாற்றத்துக்கு முன்பு எந்த வணக்கவாளியோ, பயபக்தியாளனோ கூடத் தப்பவே முடியாது. ஹஜ்ரத் ஆதம் நபி (அலை) அவர்களையே வஞ்சித்து ஏமாற்றிய ஷைத்தானின் முன், அற்பசக்தி படைத்த அடியார்களான எங்களால் யாது செய்ய இயலும்! இறைவா! இந்த ஓர் அடியானை நீ பிழை பொறுத்து மன்னிப்பதன் மூலம், பெரிய குறை நிறைந்த ஒருவனையே மன்னித்தவனாவாய். இந்த அடியானான நானோ இரவும் பகலும் தவறிழைத்துக் கொண் டிருந்தவன். என்னை நீ நரகில் தள்ளித் தண்டித்தாலும், அப்போதும் நான் உன் மீது கொண்டுள்ள நம்பிக்கையைக் கைவிடமாட்டேன். நான் சதாவும் தவறுகள் செய்தவன்; பல பெரும் குறைகள் என்னிடமிருந்துள்ளன. ஆனால், அவற்றையெல்லாம் விட உன் கிருபையும், கருணையும் மகத்தான வையன்றோ! என் தவறுகளையும், குறைகளையும் பெரிதாக எண்ணினேன்; ஆனால், உன் காருண்யத்துக்கு முன்பு அவை அற்பமானவையாகிவிட்டன.''

இதன்பின் இஷாத் தொழுகை நேரம் நெருங்கியதும், அந்தத் தொழுகையையும் சமிக்ஞையாகவே தொழுதார்கள். அதே நிலையில் இறைவனிடம் பிரார்த்தித்தவாறே அவர்களுடைய புனித ஆத்மா அவர்களுடைய உடலை விட்டுப் பிரிந்து சென்றது. (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்).

இமாமவர்கள் ஹிஜ்ரி 204 ரஜப் மாதம் பிறை முப்பது (கி.பி 720 ஜனவரி 20) வெள்ளிக்கிழமை இரவில் காலமானார்கள். அப்போது அவர்களுடைய வயது ஐம்பத்து ஐந்து ஆகியிருந்தது.



அந்த வெள்ளிக்கிழமை இரவிலேயே அவர்களை நல்லடக்கம் செய்து விட அவர்களுடைய அன்பர்கள் கருதினார்கள். ஆனால், கெய்ரோ நகரில் வாழ்ந்த பொதுமக்கள் மாபெரும் இமாமாகவும் மேதையாகவும் விளங்கிய அவர்களுடைய ஜனாஸாத் தொழுகையில் கலந்துகொள்ள விரும்புவதை அறிந்து, மறுநாள் ஜும்ஆ குத்பாவுக்குப் பிறகு அடக்குவதென முடிவு செய்யப்பட்டது.

இமாம் முஜ்னி அவர்கள் இமாமவர்களின் சடலத்தைக் குளிப்பாட்டினார்கள். ஜும்ஆத் தொழுகை முடிந்ததும் ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டது.

பின்னர், இமாமவர்களுடைய பூத உடல் கெய்ரோ வெளியில் மக்தம் மலையடிவாரத்திலிருந்த "புஸ்தாத்" என்ற இடத்திலுள்ள கராபத்துஸ் ஸுக்ரா என்ற அடக்கஸ்தலத்தில் அசர் தொழுகைக்கு முன்பே நல்லடக்கம் செய்யப்பட்டது.

அன்று தொட்டு இன்றுவரை அங்கே தினமும் ஏராளமான முஸ்லிம்கள் வந்துகூடி இமாமவர்களுக்காக 'துஆ'ச் செய்து செல்கின்றனர்.

இந்த அடக்கஸ்தலத்தையொட்டி பலஸ்தீனில் சிலுவை ஏந்தி வந்த ஐரோப்பியர்களைக் கலங்க அடித்த சுல்தான் ஸலாஹுத்தீன் அவர்கள் மதரஸா ஒன்றை நிர்மாணித்துள்ளார். இன்று இமாமவர்களின் அடக்கஸ்தலத்தின் மீது காணப்படும் 'குப்பா' ஐயூபி அரசர் மலிக்குல் காமில் என்பவரால் கட்டப்பட்டதாகும்.

அபூ அப்துல்லாஹில் முதவ்வியபி என்ற பெரியார் சொல்கிறார்: ''இமாம் ஷாபியீ மரணித்தபின் அவர்களை நான் கனவில் கண்டு, 'அல்லாஹ் உங்களை எவ்விதம் நடத்தினான்?'' என்று கேட்டேன், அப்போது அவர்கள், 'அவன் என் பிழை பொறுத்தான்' என்று பதிலளித் தார்கள். 'எந்த அமல்களுக்காக?' என்று நான் வினவியதற்கு, 'நான் இந்த ஐந்து ஸலவாத்துக்களை நியமமாக ஓதி வந்தேன். அதன் பரக்கத் தால்' என்று பதிலளித்து, இந்த ஸலவாத்துக்களைக் கூறினார்கள் :

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் பி அததி மன் ஸல்லா அலைஹி, ஸல்லி அலா முஹம்மதின் பி அததி மன்லம் யுஸல்லி அலைஹி, வ ஸல்லி அலா முஹம்மதின் கமா துஹிப்பு வத்தருலா அன் துஸல்லிய அலைஹி, வ ஸல்லி அலா முஹம்மதின் கமா அமர்த்த பிஸ்ஸலாத்தி அலைஹி, வ ஸல்லி அலா முஹம்மதின் கமா யன்பகிஸ் ஸலாத்து அலைஹி, வ ஸல்லிம் அலைஹி வ ஆலிஹி வ ஸஹ்பிஹி அஜ்மஈன்."

## தோற்றமும், குடும்பமும்

இமாம் அவர்கள் செக்கச் சிவந்த நிறத்தினர். நடுத்தரமான உயரமுடையவர்கள். கைகள் நீண்டவையாய் இருந்தன. அவர்களுடைய நெற்றி அகன்று பெரிதாயிருந்தது. அவர்களுடைய வதனம் புன்னகை தவழ்வதாக விளங்கிற்று. பார்வை கம்பீரமானதாக இருந்தது. அவர்களுக்கு முத்துப்போன்ற வரிசையான பற்களிருந்தன. அடர்ந்த நடுத்தர அளவோடு கூடிய தாடியும் வைத்திருந்தார்கள். பிற்காலத்தில் அந்தத் தாடிமீது மருதோன்றி இலையின் சாயம் பூசப்பட்டுச் சிவந்திருந்தது. அம்மை வடுக்கள் போன்ற சில தழும்புகளுடன் கூடிய நீண்ட மூக்கு அவர்களுடையது.

இமாமவர்கள் மிருதுவான உடையையும், கித்தான் உடையையும் உடுப்பார்கள். பருத்திப் போர்வையைப் போர்த்துக் கொள்வார்கள். நடுத்தரமான தொப்பியும், தலைபாகையும், காலுக்கு மேஜோடும் (ஸ்டாக்கிங்ஸ்) விரும்பி அணிவார்கள்.

இமாமவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரை மணந்திருந்தார்களா என்பது சரியாகத் தெரியவில்லை. அவர்கள் தங்கள் இளமைப் பருவத்தில் மக்காவிலிருக்கும் போதே மணம் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பெண்மணியின் பெயர் ஹமதா என்பது. அவர் ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களுடைய சந்ததியாராவார்.

இமாமவர்கள் தாங்கள் மக்காவில் குறைஷி மாது ஒருவரை மணந்து கொண்டதாக ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த



மனைவிதான் ஹமதா என்று கூறப்படுகிறது. இமாமவர்கள் சொல்கிறார்கள்: "நான் அந்தக் குறைஷிப் பெண்ணை மணந்த பின்னர் அவரும் கவிபாடக் கூடியவர் என்று அறிந்தேன். இதனால் நாங்களிருவரும் எங்கள் வாலிபமான அக்காலையில் புதிது புதிதாகக் கவிதைகளைப் புனைந்து ரசித்துக் கொண்டிருப்போம். ஒருநாள் நான் என் மனைவியை நோக்கி,

'அவன் அவளைப் புகழ்ந்து, அவளிடம் அன்புகாட்டி
அவளைப் போற்றி உள்ளன்புடன் நேசித்தாலும்,
அந்தக் காதலி அவனை நேசிப்பதுமில்லை;
அவன் காதல் கண்டு மனமிரங்குவதுமில்லை.
இது அவனுக்கு மாபெரும் வேதனையளிப்பதல்லவா!"

என்று பாடிக்கொண்டிருந்தேன். இந்த இடத்தில் என் மனைவி என்னை இடைமறித்து,

'காதலி பணிவோடும், தாழ்மையோடும்
அவனை விரும்புகிறாள்.
தவறியாவது அவன் பார்வை தன்பக்கம் வரும்போது
அவன் தன்னைப் பார்க்கமாட்டானா என்று
ஏங்கித் தவிக்கிறாள்.
அவனோ, அவளைப் பொருட்படுத்தாது
வேறு எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறான்.
இது அவளுக்கு மாபெரும் வேதனையளிப்பதல்லவா!

என்று (நான் பாடிய சந்தத்தில், அதே பாணியில்) திருப்பிப் பாடிவிட்டார்."

இமாமவர்களுடைய மனைவியான ஹமதாவுக்கு மூன்று ஆண்களும், இரண்டு பெண்களும் பிறந்திருந்தனர். ஆண்களில் இருவர் சிறுவயதிலேயே காலமாகி விட்டனர். அபூ உதுமான் முஹம்மது என்ற ஒரு புதல்வர் மட்டுமே ஜீவித்திருந்தார்கள். பெண் குழந்தைகளின் பெயர்கள் பாத்திமா, ஜைனப் என்பனவாகும். இமாமவர்களுடைய குடும்பத்தில் தகராறுகள் உண்டானதேயில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்தாரிடம் அன்போடும், அந்நியோன்ய

மாகவும் பழகினார்கள். தங்களுடைய குடும்பத்தினர் வளமான செல்வருடைய வீட்டாரைப்போலவே வாழ்வதற்கான வசதிகளை இமாமவர்கள் அளித்தார்கள்.

இமாம் ஷாபியீயின் புத்திரர் அபூ உதுமான் முஹம்மது, இமாம் அஹ்மதிப்னு ஹன்பலிடமே கல்வி பயின்றார்கள். இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் இமாம் ஷாபியீ அவர்களுடைய அபிமான மாணவராதலால் தமது குரு நாதரின் மகனிடம் மிகுந்த அன்போடு நடந்து கொண்டார்கள். அபூ உதுமான் நன்கு கற்ற அறிவாளியாகவே விளங்கினார்கள். இமாமவர்கள் கெய்ரோவில் காலமான சமயம், இந்த மகனார் மக்காவிலிருந்தார்கள், இவர்களிடம் இவர்களுடைய ஆசிரியரான இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அதிக அன்பு செலுத்தினார்கள். "நீங்கள் என் குருநாதரின் புதல்வர். மேலும், குறைஷிக் குலத்தவர்; நபி பெருமானாரின் சுன்னத்தைப் பின்பற்றி நடப்பவர்கள். இந்த மூன்று காரணங்களாலும் நான் உங்களை மனமுவந்து நேசிக்கிறேன்" என்று இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அபூ உதுமானிடம் கூறியுள்ளார்கள். இந்த அபூ உதுமான் ஹலபு, ஐஸாயிர் ஆகிய நகர்களில் காஜியாகப் பதவி வகித்துப் பின் ஹிஜ்ரி 240-இல் காலமானார்கள்.

இமாமவர்கள் இளமையிலே ஓர் அனாதையின் துயரம் என்ன என்பதை நன்கறிந்திருந்தார்கள்; அத்துடன் வறுமையின் கொடுமை எப்படிப்பட்டது என்பதையும் அனுபவத்திருந்தார்கள். தங்கள் இருபத்து நான்கு வயதுவரை இமாமவர்கள் ஒரு வேளையாவது வயிறு நிறைய உணவு உண்டதில்லை என்று அவர்களே தெரிவித்துள்ளார்கள். பின்னர், அவர்கள் கல்வி கற்றபின் அவர்களுடைய நிலையில் மாறுதலுண்டாயிற்று. இறைவனின் நல்லருளால் தேவைக்கு அதிகமான செல்வம் அவர்களிடம் குவியலாயிற்று. ஆனால், அப்போதும் சில சமயங்களில் அவர்கள் வீட்டில் அவசியச் செலவுக்குக் கூட எதுவுமில்லாது போவதுண்டு. காரணம், வறுமையின் கொடுமையை அறிந்திருந்த இமாமவர்கள் வறியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாக இருந்ததுதான்.



## வள்ளன்மை

இமாமவர்களுக்குக் கலீபாவும் மந்திரிகளும், பிரபுக்களும், தங்கள் அன்புக் காணிக்கைகளை அனுப்பி, அவற்றை ஏற்குமாறு வற்புறுத்துவதுண்டு. ஒரு தடவை கலீபா ஹாரூனர் ரஷீது இமாமவர்களுக்கு ஐம்பதாயிரம் திர்ஹம் காணிக்கையாகக் கொடுத்ததையும், உடனேயே அதில் நாற்பதாயிரத்தை அவர்கள் ஏழை வறியவர்களுக்குப் பங்கிட்டு விட்டதையும் முன்னமேயே குறிப்பிட் டுள்ளோம். இதுபோன்றே கலீபா ஹாரூனர் ரஷீதின் பிரதம மந்திரியாக இருந்த யஹ்யா பர்மகீயின் புத்திரர் ஜஃபர் என்பவர் ஆயிரம் தீனார்கள் அன்பளிப்பு அனுப்பினார். மற்றொரு சமயம் அபூ ஹிஸான் என்பவர் ஆயிரம் தீனார்கள் அனுப்பினார்கள். கலீபா ஹாரூனர் ரஷீது வேறு பல தடவைகளில் பண முடிப்புகள் அனுப்பினார். இவற்றிலெல்லாம் இமாமவர்கள் கால் பகுதியை மட்டும் தங்களுக்காக வைத்துக் கொண்டு முக்கால் பகுதியை மறுநாள் வருமுன்பே உடனுக்குடன் வறியவர்கள், கஷ்ட நிலையிலுள்ள உலமாக்கள், மாணவர்கள், அனாதைகள் ஆகியோர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டார்கள். அத்துடன், "இறைவா, இந்த அடியானை இம்மையின் பாசங்கள் பற்றாமல் காத்தருள்!" என்று அவர்கள் பிரார்த்திப்பதுமுண்டு.

இமாம் முஜ்னி கூறுகிறார்கள்: "வள்ளன்மையில் இமாம் ஷாபியீயைவிடச் சிறந்தவர்களையோ, பிறரை அன்புடன் ஆதரித்தவர் களையோ யாரையும் நான் கண்டதில்லை. ஒரு சமயம், ஒரு நாள் இரவு மார்க்கப் பிரச்சினை ஒன்றைப்பற்றி இமாமவர்களுடன் விவாதித்தபடி அவர்கள் வீடுவரை நடந்து சென்றேன். அங்கே வாயிலில் பணியாள் ஒருவன் நின்றிருந்தான். அவன் கையில் ஒரு தட்டில் பணமுடிப்பிருந்தது. அவன் இமாமவர்களுக்கு ஸலாம் சொல்லிவிட்டு, "இந்தக் காணிக்கையை என் எஜமானர் தங்களுக்கு அனுப்பினார். இதைத் தாங்கள் ஏற்றருளவேண்டும்" என்று வேண்டினான். இமாமவர்களும் அதை ஏற்றுக் கொண்டு, அவனுடைய எஜமானனுக்கு நன்றி கூறி அனுப்பினார்கள். அந்தப்

பணியாள் தலைமறையும் முன், இமாமவர்கள் முன் இன்னொருவர் வந்து அவர்களை நோக்கி, "இமாமவர்களே, என் வீட்டில் குழந்தை பிறந்திருக்கிறது. செலவுக்கு ஒரு காசுமில்லை" என்று முறையிட்டு நின்றார். உடனே இமாமவர்கள் தங்கள் கையிலிருந்த அந்தப் பணமுடிப்பைப் புன்னகையோடு அந்த மனிதரிடம் கொடுத்து விட்டுத் தங்கள் வீட்டினுள் போய்விட்டார்கள்."

இமாமவர்கள் பக்தாதிலிருக்கும்போது பெருநாளுக்கு முதல் நாள் இமாமவர்களின் வீட்டிலேயே செலவுக்குப் பணமில்லாது போய் விட்டது. இதனால் இமாமவர்களுடைய மனைவி அவர்களை அணுகி, "நீங்கள் உங்கள் சுற்றத்தாரை நல்ல முறையில் ஆதரித்து அவர்கள் நல்வாழ்வு வாழ வகை செய்துள்ளீர்கள். நமக்குக் கஷ்டமான இந்த நேரத்தில் அவர்களில் யாரிடமாவது சிறிது பணம் கடன் வாங்கக் கூடாதா? பெருநாள் செலவுக்கு என்ன செய்வது?" என்று வருத்தப்பட்டு யோசனை கூறினார். உடனே இமாமவர்கள் வெளியில் சென்று நண்பர் ஒருவரிடம் போய் எழுபது தீனார்கள் கடன் வாங்கி வந்தார்கள். வரும் வழியில் ஏழைகளும், அனாதைகளும் சூழ்ந்து கொள்ளவே, அவர்களுக்கு ஐம்பது தீனார்களை தருமம் செய்து விட்டார்கள். பாக்கி இருபது தீனார்களோடு அவர்கள் வீட்டில் நுழைந்த சமயம், அங்கே குறைஷிக் குலத்தைச் சேர்ந்த வறியவர் ஒருவர் அவர்களிடம் வந்து தமது குறைகளைச் சொல்லி முறையிட்டார். உடனே இமாமவர்கள் தங்கள் கையிலிருந்த இருபது தீனார்களையும் கீழே வைத்து, "நண்பரே, என்னிடமிருக்கும் ரொக்கமெல்லாம் இதுதான். இதில் உமக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளும்" என்று கூறினார்கள். அந்த மனிதர் தமக்குப் பல செலவுகளிருப்பதால் இருபது தீனாருமே தேவைதான் என்று கூறி அனைத்தையும் எடுத்துப் போய் விட்டார்.

இந்தச் செய்தியை இமாமவர்கள் தங்கள் மனைவியாரிடம் தெரிவித்தபோது அந்த அம்மாள் அதிகமான வேதனை அடைந்தார்கள். "எப்போதுமா இந்தப் பழக்கப்படி நடக்க வேண்டுமா? பெருநாளை எப்படிக் கொண்டாடுவோம்?" என்று வருந்திவிட்டுத் தூங்கப் போய் விட்டார்கள். மறுநாள் அதிகாலையில் ஹாரூனர் ரஷீதின் பிரதமரான யஹ்யா பர்மகீயின் பணியாள் வந்து, இமாமவர்களை மந்திரி உடனே அழைத்துவரச் சொன்னதாகக் கூறினான். இமாமவர்கள் மந்திரியின் வீட்டுக்குப் போனார்கள். அவர்களைக் கண்டதும் அவர் அவர்களை எதிர் கொண்டழைத்து, "இமாமவர்களே, உங்களைப் பற்றி இன்றிரவு நான் கனவொன்று கண்டேன். அதில் நீங்கள் யாரிடமோ கடன் வாங்கியதாகவும், பின்பு அதையும் தருமம் கொடுத்து விட்டதாகவும் தெரிந்தது. அப்படி ஏதாவது நடந்ததுண்டா?" என்று வினவினார். இமாமவர்கள் முதல் நாள் நடந்ததைச் சுருக்கமாகக் கூறினார்கள். உடனே மந்திரி யஹ்யா வீட்டினுள் சென்று ஆயிரம் தீனார்கள் அடங்கிய பணப்பை ஒன்றைக் கொணர்ந்து இமாமவர்களிடம் கொடுத்து, அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்தார். இமாமவர்கள் அதைக் கொணர்ந்து தங்கள் மனைவியாரிடம் ஒப்படைத்தார்கள்.



இமாமவர்களிடம் யாரேனும் வந்து தருமம் கேட்டு, அவர்களிடம் எதுவுமில்லாவிடின், அவரை வெறும் கையோடு அனுப்பப் பெரிதும் மனக் கஷ்டப்படுவார்கள். அவரைத் திருப்திபடுத்த ஏதேனும் மார்க்கம் கிடைத்தால்தான் அவர்களுக்கு மனம் சரியாகும். ஒரு சமயம் அவர்கள் தங்கள் வாகனத்தில் சென்று கொண்டிருக்கும்போது ஒருவர் அவர்களிடம் வந்து தருமம் கேட்டார். அவர்களிடம் அச்சமயம் கைவசம் எதுவுமில்லை. உடனே அவர் இருக்கும் இடத்தை விசாரித்து அறிந்து கொண்டு தங்கள் வேலையை நாடிப் போய் விட்டார்கள். அவர்கள் வீடு திரும்பியதும், சிறிது பணத்தை எடுத்துக் கொண்டு போய் அந்த மனிதர் இருந்த இடத்தைத் தேடி, அவரிடம் கொடுத்து விட்டு வந்தார்கள்.

இமாமவர்கள் பக்தாதிலிருந்து கெய்ரோ சென்றடைந்த பின்னர் கலீபா ஹாரூனின் மனைவியான ஜுபைதா அம்மையார் (அச்சமயம் விதவையாக இருந்தார்) வகை வகையான துணிமணிகளை

ஏராளமாக இமாமவர்களுக்கு அனுப்பினார்கள். இமாமவர்கள் அத்தனையையும் ஏழைகளுக்குப் பங்கிட்டு விட்டார்கள்.

இமாமவர்கள் மிருகங்களிடம் கூடப் பேரன்பு கொண்டவர்களாக இருந்தார்கள். ஒரு சமயம் கடும் வெயிலில் அவர்கள் தங்கள் வாகனத்தின் மீது சவாரி போய்க் கொண்டிருந்தார்கள். அச்சமயம் மக்கள் நடமாட்டமற்ற இடமொன்றில் நாயொன்று தாகத்தால் வேதனையுற்றதாகத் தன் நாக்கை வெளியில் தொங்கப் போட்டுக் கொண்டு ஒரு கிணற்றைச் சுற்றிச் சுற்றி வந்தது. இதைக் கண்ட இமாமவர்கள் தங்கள் வாகனத்தை விட்டுக் கீழே இறங்கி, அங்கே தண்ணீர் எடுக்கத் தாம்புக் கயிறோ, பாத்திரமோ இல்லாத நிலையில் தங்கள் நீளமான தலைப்பாகையை கழற்றிப் பிரித்துக் கிணற்றுள் அதன் ஒரு தலைப்பை விட்டுத் தண்ணீருள் முக்கி வெளியிலெடுத்து நாயின் வாயில் பிழிந்து அதன் தாகத்தைத் தீர்த்தார்கள்.

வள்ளன்மையால் கைகள் சிவந்த வள்ளலான இமாம் ஷாபியீ அவர்கள் வள்ளன்மை பற்றிக் கூறும் கருத்து சிந்திக்க வேண்டுவ தாகும். அவர்கள் சொல்கிறார்கள்: "உண்மையான வள்ளன்மை (சகாவத்) என்பது யாதெனின் தனக்கு அவசியமாகப் பயன்படும் ஒரு பொருளை யாருடைய வற்புறுத்தலுக்காகவோ, பிரதி பிரயோசனம் கருதியோ இன்றித் தானே மனமுவந்து பிறருக்கு வழங்குவதாகும். தன் தேவையைவிடப் பிறர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கே முதலிடம் தரவேண்டும். பிறருக்காகத் தன் கல்வி, புகழ், பொருள், உயிர் யாவையுமே அர்ப்பணிக்கத் தயங்கக்கூடாது. பழுதான, பயன்படாத எந்தப் பொருளையும் யாருக்கும் தானமளிக்கக்கூடாது. இப்படிப் பயனற்ற பொருளை வழங்குபவன் தன் மனிதத் தன்மையை இழந்து ஈனத்தனம் மிகைத்தவனாக ஆகிவிடுவான். 'மெய் விசுவாசிகளே, நீங்கள் (உழைத்துச்) சேகரித்த செல்வங்களிலிருந்தும், உங்களுக்காகப் பூமியிலிருந்து வெளியாக்கிக் கொடுத்தவற்றி லிருந்தும், நல்லவைகளைத் தானமாகச் செலவிடுங்கள். மேலும், அவைகளி லிருக்கும் தீய பொருள்களை (பிறருக்குக்) கொடுக்க நாட



வேண்டாம். (ஏனெனில், கெட்டுபோன பொருள்களை உங்களுக்கு ஒருவர் கொடுத்தால்) அவைகளை நீங்கள் (வெறுப்புடன்) கண்மூடியவர்களாக அன்றி எடுக்க மாட்டீர்களல்லவா!' என்ற திருக்குர்ஆன் எச்சரிக்கை யைச் சிந்தித்துச் செயல்படுங்கள்."

## குண ஒழுக்கம்

இமாமவர்களின் விருந்துபசாரம் விசேஷமானதாகும். தங்கள் மாணவர்களுக்கும், தங்களோடு பழகியவர்களுக்கும் அவர்கள் அடிக்கடி விருந்தளிப்பார்கள். விருந்தில் ஹல்வா, பலூதா போன்ற இனிப்புப் பதார்த்தங்களிலும் இமாமவர்களுக்கு விருப்பமதிகம். இதனால், உயரிய ஹல்வாத் தயாரிப்பதற்கென்றே ஓர் ஆளைத் தேர்ந்து வைத்திருந்தார்கள்.

அவர்களுடைய அன்பு அளப்பரியதாக இருந்தது. "அன்பும் பணிவுமே மானிட வாழ்வில் இன்பமளிப்பவன்" என்பது இமாமவர் களின் பொன்மொழி. "மனிதன் தன் பலத்தாலும் அகந்தையாலும், ஏழை எளியவர்களை வதைத்து, அதனால் சீரழிந்து போகாமல் இருக்கவே நாம் அன்பும் பணிவும் காட்ட வேண்டும் என்று நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளது" என்று கூறும் அவர்கள், யாரும் யாருக்கும் கொடுமை புரியாமலிருக்கவும், யாரும் யாரைப் பார்த்தும் தற்பெருமையடித்து அழிந்து போகாமலிருக்கவும் "(நபியே,) நீர் பணிவையும், அன்பையும் ஏற்று (பிறருக்கு முன்மாதிரியாக) விளங்கும்" என்று இறைவன் எனக்கு வஹி அறிவித்துள்ளான் என்ற ஹதீஸையும் அடிக்கடி கூறுவதுண்டு.

இமாமவர்களுடைய பணிவு குறிப்பிடத் தக்கதாக இருந்தது. அவர்கள் தாங்கள் ஒரு பெரிய இமாம், தாங்களே யாவரையும் விடப் பெரிய அறிவாளி என்று காட்டிக் கொண்டதே இல்லை. அவர்கள் சொல்கிறார்கள்: "மனிதனுக்கு அறிவும், ஞானமும் சித்தியாகியுள்ள அளவுக்குத் தான் அவனிடம் பணிவையும், தாழ்மையையும் எதிர்பார்க்க முடியும். ஏனெனில், மனிதனுக்குப் புதிய அறிவும்,

அனுபவமும் உண்டாக உண்டாகத்தான் (அதற்கு முன்) தான் எந்த அளவுக்கு அறிவிலியாகவும், மூடனாகவும் இருந்தான் என்ற தன்னறிவு உண்டாகிறது. எனவே, எனக்கும் காலம் அறிவையூட்டிய பிறகுதான் என்னிடமிருந்த குறைகளை நான் உணரத் தொடங்கினேன். மேலும், என் அறிவும் அனுபவமும் வளர வளரத்தான் என் அறியாமையும் எனக்குப் புலனாயிற்று."

இமாமவர்களுக்கு யாரேனும் ஒரு சிறிய உதவி புரிந்தாலும், அதற்காகப் பெரிதும் நன்றி பாராட்டுவார்கள். தமக்குச் சிறிய பணி செய்தவருக்கும் அதற்குரியதுபோல் இரண்டு மடங்கு சன்மானத்தைக் கொடுப்பார்கள். ஒருவர் ஏதேனும் ஒரு சாஸ்திரத்தில் தேர்ந்தவராக இருக்கக் கண்டால் அவருக்குப் பெரிதும் ஊக்கமூட்டுவார்கள். ஒரு நாள் அவர்கள் வெளியில் சென்றபோது வழியில் ஒருவன் அம்பெய்யப் பழகிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவனருகே சென்று அவனைப் பலவிதமாகவெல்லாம் அம்பெய்யுமாறு சொல்லிக் கொடுத்தார்கள். அவர்களின் சொல்படி, அவன் செய்யவே, அவனைப் பாராட்டி தங்களிடமிருந்த மூன்று தீனார்களை அவனுக்குக் கொடுத்தார்கள். "இன்னும் அதிக மிருந்திருப்பினும் அத்தனையையும் உனக்கே தந்திருப்பேன். நீ இந்த வித்தையை விடா முயற்சியுடன் கற்றால் சிறந்த வில் வல்லவன் ஆகலாம்" என்றும் கூறினார்கள்.

இமாமவர்கள் எப்போதுமே உண்மையையே விரும்புவார்கள். அவர்களுடைய பொழுதில் பெரும் பகுதி வாதப் பிரதி வாதங்களில் கழிவதுண்டு. எதிரிகள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் அவர்கள் அன்போடும், பொறுமையோடும் பதிலளிப்பார்கள். உண்மை மக்களுக்கு விளங்க வேண்டும் என்பதுதான் அவர்களுடைய குறிக் கோளாய் இருந்தது. அவர்கள் பொய்யை விஷமாக வெறுத்தார்கள். "என் வாழ்நாள் முழுவதிலுமே நான் ஒரு பொய் கூடச் சொன்னதில்லை. மேலும், ஒரு சத்தியம் கூடச் செய்தறியேன்" என்று அவர்கள் கூறியுள்ளார்கள்.



இமாமவர்கள் தாங்கள் செய்யாததை மற்றவர்களைச் செய்யுமாறு உபதேசிப்பதில்லை. இதில் சிறிய விஷயங்களில் கூட அவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு நடந்து கொண்டார்கள். ஒரு சமயம் பெண்மணி ஒருத்தி சிறுவனான தன் மகனை அவர்களிடம் அழைத்து வந்து, "இவன் அதிகமாக இனிப்புப் பண்டங்களைத் தின்கிறான்; அப்படித் தின்னக் கூடாது என்று நான் சொல்லும் புத்திமதிகள் இவன் காதில் ஏறவில்லை; நீங்கள் தான் புத்தி சொல்லித் திருத்த வேண்டும்" என்று வேண்டினாளாம். இமாமவர்கள் அவளை அடுத்த வாரம் அவள் மகனை அழைத்து வரும்படி கூறி அனுப்பி விட்டார்களாம். அதன்படி அவள் அடுத்த வாரம் தன் மகனுடன் வரவே, இமாமவர்கள் அந்தச் சிறுவனுக்கு அதிகமான இனிப்புத் தின்பதால் உண்டாகக்கூடிய கெடுதல்களையெல்லாம் எடுத்து விளக்கி, "இனி அதிகமாக இனிப்புத் தின்னாதே!" என்று போதித்து அனுப்பினார்களாம். இது அந்தப் பெண்மணிக்கு வியப்பாக இருந்ததாம். "நான் சென்ற தடவை வந்திருந்த போதே இமாமவர்கள் இந்தப் புத்திமதியைக் கூறி யிருக்கலாமே. அதற்கு ஒரு வாரம் தவணை போடுவானேன்?" என்று அவள் எண்ணலானாளாம். இதை அவள் இமாமவர்களிடம் கேட்டும் விட்டாளாம். ஹல்வா தயாரிக்க விஷேமான வேலைக்காரனைத் தயாரில் வைத்திருந்த இமாமவர்கள், "எனக்கு இனிப்பின் மீது பிரியமதிகம். நானே இனிப்பைத் தின்று கொண்டி ருக்கும் நிலையில், இந்தச் சிறுவனை எப்படி இனிப்புத் தின்னாதே என்று போதிப்பது? நான் செய்யாததைப் பிறர் செய்ய வேண்டும் என்று நான் கூற முடியுமா? அதனால் தான், நான் முதலில் இனிப்புத் தின்பதை நிறுத்திக் கொள்வதற்காக ஒரு வாரம் அவகாசம் கேட்டேன். இப்போது இவனுக்கு உபதேசிக்க நான் அருகதையுடையவனாகி விட்டேன்" என்று புன்னகையுடன் விளக்கினார்களாம்.

நபி பெருமானாரிடமும், நபி பெருமானார் குடும்பத்தாரிடமும் இமாமவர்கள் மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள். பெருமானாரின் ஹதீஸ்களை விளக்குவதில் பெரிதும் பயபக்தி மரியாதை காட்டி னார்கள். ஒரு சமயம் ஒருவர் அவர்களிடம் வந்து மார்க்கப் பிரச்சினை

ஒன்றுக்குத் தீர்ப்புக் கேட்டார். இமாமவர்கள் அந்தத் தீர்ப்பைக் கூறும்போது அதற்கு ஆதாரமான ஹதீஸையும் கூறினார்கள். உடனே அந்த மனிதர், "நீங்கள் இந்த ஹதீஸில் சொல்லப்பட்டபடி நடக்கிறீர்களா?" என்று இமாமவர்களை நோக்கி கேட்டார். இமாமவர்கள் வழக்கம் போல தங்கள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "என்னை என்ன சிலை வணக்கம் நடக்கும் கோயிலிலிருந்து வெளிவந்தவன் என்று எண்ணிக் கொண்டீர்? என் தோளில் பூணூலா தரித்திருக்கிறேன்?" என்று வினவினார்கள். மேலும், "ஆதாரப் பூர்வமான ஹதீஸ் ஒன்று என் கையிலகப்பட்டால், அதுவே என் மத்ஹபு" என்றும் தெரிவித்தார்கள். இந்த விபரம் இமாமவர்களின் மாணவராக விளங்கிய இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அவர்களே தெரிவித்துள்ளதாகும்.

இமாம் ஷாபியீ அவர்கள் தாங்கள் அளித்த தீர்ப்புக்கு மாற்றமான ஆதாரபூர்வமான ஒரு ஹதீஸ் கிடைத்துவிட்டால் உடனே தங்கள் தீர்ப்பை வாபஸ் பெற்றுக் கொண்டு, அந்த ஹதீஸின் தீர்ப்புப்படி நடக்குமாறு மக்களை ஏவுவதுண்டு.

"நான் எழுதிய நூல்கள் அனைத்திலும், நான் தந்துள்ள விளக்கங்களில் மிகுந்த பேணுதலுடனும், பயபக்தியுடனும், ஆதாரங்களைத் தேடித் திரட்டித் தந்துள்ளேன். நானும் ஒரு மனிதன்தான். ஆதலால், மனிதர்களிடம் உண்டாகக்கூடிய தவறுகளும், பிழைகளும் என்னிடமும் உண்டாகவே செய்யும். அல்லாஹ் ஒருவனே மிகத் தூய்மையான வனாவான். இதனால், என் 'ஃபிக்ஹு'க் கிரந்தங்களில் எந்தத் தீர்ப்பேனும் திருக்குர்ஆன், ஹதீஸுக்கு மாற்றமானதாகக் காணப்பட்டால் என் தீர்ப்புச் சரியல்ல என்று முடிவு செய்து கொள்ளுங்கள். மேலும், எனக்கு ஆதாரப் பூர்வமான ஹதீஸ் எதுவும் கிடைத்து, அதன்படி நான் அமல் செய்யாமலிருந்து விட்டால் என் அறிவில் ஏதோ குறையுண்டாகி விட்டதாக முடிவு செய்து கொள்ளுங்கள்" என்று இமாமவர்கள் கூறுவதுண்டு.



இமாமவர்கள் தங்கள் முடிவையும் அபிப்பிராயத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி யாரையும் எப்போதும் வற்புறுத்தியதில்லை. தங்கள் தீர்ப்பில் எப்போதேனும் தவறு நேர்ந்து விட்டால் உடனே மன்னிப்போடு, தவறைத் திருத்திக் கொள்வார்கள். "என் தீர்ப்பை விடச் சரியான ஹதீஸையே நீங்கள் பிரதானமானதாகக் கருதுகிறீர்கள். எனவே, ஆதாரப் பூர்வமான ஹதீஸ்கள் ஏதேனும் உங்களுக்குக் கிடைத்தால் அவற்றை எனக்கும் தெரிவித்து விடுங்கள். அதனால், நானும் என் தவறைத் திருத்திக் கொண்டு அதன்படி நடக்க ஹேதுவாகும்" என்று அவர்கள் தங்கள் அன்பர் களிடம் கூறுவதுண்டு.

"எந்தப் பெரிய மனிதனின் வார்த்தைக்காகவும் நபி பெருமானாரின் ஹதீஸைப் புறக்கணிக்கக்கூடாது" என்பது இமாமவர்களின் நல்லுபதேசமாகும்.

## வகுப்பும், வணக்கமும்

இமாம் ஷாபியீ அவர்கள் ஸுபுஹுத் தொழுகைக்குப்பின் சூரியோதயம் வரை ஃபிக்ஹு வகுப்பு நடத்துவார்கள். பின்னர் ஹதீஸ் வகுப்புக்கள் தொடங்கும். அதற்குப் பின்னர் மார்க்க விளக்கங்கள் நடைபெறும். அதன்பின் பல்வேறு மார்க்கத் தீர்ப்புகள் வழங்கப்படும். லுஹர் தொழுகைக்குப்பின் இலக்கியம், கவிதை, யாப்பிலக்கணம், சொல்லிலக்கணம் குறித்துப் பாடங்கள் நடைபெறும். அஸருத் தொழுதபின் இமாமவர்கள் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, மக்ரிபு வரை 'திக்ரு இலாஹி' (இறைவன் நாமதியானம்) நடத்துவார்கள். இஷாத் தொழுததும் படுக்கப் போய் விடுவார்கள். இமாமவர்கள் இரவை மூன்று பகுதிகளாகப் பிரித்து, முற்பகுதியில் தூங்கிவிட்டு, இரண்டாம் பகுதியில் எழுந்து ஹதீஸ் ஃபிக்ஹுகளை எழுதிவிட்டு, மூன்றாம் பகுதியில் ஸுப்ஹுவரை திருக்குர்ஆன் ஓதுதல், நபில் தொழுகை தொழுதல் போன்ற நல்வணக்கங்களில் ஈடுபட்டிருப்பார்கள்.

இமாமவர்கள் தினமும் ஒரு தடவை திருக்குர்ஆன் முழுவதையும் ஓதி முடித்து விடுவார்கள். ஹுஸைன் கராமீஸி

என்பவர் சொல்கிறார்: "நான் மூன்று மாதங்கள் இமாமவர்களுடன் தங்கியிருக்கும் பாக்கியம் பெற்றேன். அப்போதெல்லாம் இரவில் மூன்றிலொரு பாகத்தைத் திருக்குர்ஆன் பாராயணத்திலும், நபில் தொழுவதிலும் ஈடுபடுத்தியதைக் கண்டேன்."

இமாமவர்கள் திருக்குர்ஆன் பாராயண முறையை மக்காவின் ஷைகாக இருந்த இஸ்மாயீல் என்பவர்களிடம் ஓதித் தேர்ந்திருந் தார்கள். இந்த இஸ்மாயீலோ நபி பெருமானாரிலிருந்தே தலை முறையாய் வந்த கிராஅத் முறையை பயின்றிருந்தவர் ஆவார். இவர் அலீ ஷிப்லீயிடமும், மஃரூப் மஷ்கானிடமும் திருக்குர்ஆன் ஓதக் கற்றார். இவ்விருவரும் அலீ அப்துல்லாஹ்விடமும், அவர்கள் அப்துல்லாஹிப்னு அப்பாஸிடமும், அவர்கள் காரீ உபை பின் கஃபிடமும், அவர்கள் நபி பெருமானார் (ஸல்) அவர்களிடமும் திருக்குர்ஆனின் 'கிராஅத்' முறையை ஓதியுள்ளதாக 'கிராஅத்துல் குர்ஆன்' என்ற நூலில் இமாம் ராஜி குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாமவர்கள் திருக்குர்ஆனை அரபிகள் ஓதும் சகல பாணி களிலும் ஓதுவார்கள். அவர்களுடைய தொனியும் இனிமையானதாக இருந்ததால், அவர்களுடைய 'கிராஅத்' யாவரையும் கவருவதாக இருந்தது. சில சமயம் இமாமவர்கள், முன் நின்று தொழுகையை நடத்தும்போது ஓதும் கிராஅத்தைக் கேட்டுப் பின்னால் நின்று தொழுபவர்கள் 'ருகூஉ' க்குப் போய்விடுவார்கள். பெரிய கூட்டங்களில் இமாமவர்கள் எழுந்து திருக்குர்ஆனை ஓதத் தொடங்கியதும் கூச்சலும், குழப்பமும் தணிந்து எங்கும் நிசப்தம் நிலவி விடும். சில சமயம் இவர்களுடைய உருக்கமான கிராஅத்தால் மக்கள் அழுது கொண்டே தரையில் சாய்ந்து விடுவதுமுண்டு.

இமாமவர்கள் ரமலான் இரவுகளில் கண் விழித்துத் தனிமையில் தொழும்போது திருக்குர்ஆனை ஓதிக் கொண்டே போவார்கள். அப்போது ஃபிக்ஹு சம்பந்தமான பிரச்சினைகளுக்குப் பதில் வரும் ஆயத்துக்கள் குறுக்கிட்டால் அங்கே தொழுகையை



முடித்துக் கொண்டு, உடனே அந்த ஆயத்துக்களைக் குறித்துக் கொள்வார்கள். பின்னர் மீண்டும் தொழுவார்கள்.

"மெய் வணக்கத்திலும், பயபக்தியிலும், புனிதத் துறவு நிலையிலும் இமாம் ஷாபியீ அவர்களைவிடச் சிறந்தவர் யாரை நாம் காண இயலும்!" என்று அம்ரு பின் பதாதா கூறுகிறார்கள். ஒரு சமயம், ஷைத்தான் மனித உருவில் வந்து இமாமவர்களை வழிகெடுக்க முயன்றதாக ஒரு சம்பவம் காணப்படுகிறது. அதன் விபரமாவது:

மனித உருவில் அவர்கள் முன் வந்த ஷைத்தான், "இமாமே, நான் உங்களிடம் ஒரு பிரச்சினைக்குத் தீர்ப்பு வேண்டி வந்துள்ளேன்" என்றான். என்ன? என்று இமாமவர்கள் கேட்டதும், அவன் சொன்னான்: "ஒருவன் தான் நாடிய செயல்களுக்காக என்னைப் படைத்து தான் நாடிய செயல்களில் நீண்ட நாட்களாக வேலை வாங்கிக் கொண்டு, பின்னர் மனமிருந்தால் என்னைச் சுவர்க்கத்துள் புகச் செய்கிறான்; மனமில்லையேல் நரகத்தில் புகச் செய்கிறான். எனவே, இப்படிச் செய்பவன் நேர்மையானவனா? நேர்மையற்றவனா? நீதியாளனா? அநீதியாளனா?"

இமாமவர்கள் பதிலளித்தார்கள்: "உன் சித்தப்படி நீ நடப்பதற்காக அவன் உன்னைப் படைத்திருப்பின் உனக்கு அவன் அநீதியிழைத்த வன் தான். ஆனால், அப்படியின்றி அவன் தன் சித்தப்படி நீ செயலாற்ற வேண்டும் என்பதற்காக உன்னைப் படைத்திருப்பின், அவன் செயல் பற்றி அவனை வினவக் கூடாது. அடிமைகள் செய்யும் செயல் பற்றி அவர்களிடம் விவரம் கேட்கப்படும்"

இது கேட்ட இப்லீஸ் வாயடைத்தவனாகிப் பின் அவர்களைப் பார்த்து, "இமாமவர்களே, இந்தக் கேள்வியை விடுத்தே நான் எத்தனையோ வணக்கவாளிகளை வழி கெடுத்துள்ளேன். நீங்கள் தான் என்னை மடக்கிவிட்டீர்கள்" என்று கூறினான்.

## பெரியார்களிடம் அன்பு

இமாமவர்கள் மற்றப் பெரியார்களிடம் மிகவும் அதிகமான மதிப்பும் மரியாதையும் காட்டினார்கள். தங்களிடம் யாராவது இமாம் மாலிக் அவர்கள் கொடுத்த தீர்ப்பைக் கொணர்ந்தால், "இது என் குருநாதர் இமாம் மாலிக்கின் தீர்ப்பல்லவா!" என்று மிகவும் மரியாதையோடு பேசுவார்கள். ஒரு சமயம் அவர்களை நோக்கி, "இமாம் மாலிக் எத்தகையவர்கள்?" என்று வினவியதற்கு, "நம்மை விடக் கலை, கலாசார ஞானத்திலும், மெய் வணக்கங்களிலும் ஒப்பற்ற வகையில் சிறப்பாக விளங்கியவர்களைப் பற்றி நாம் என்ன சொல்லக் கிடக்கிறது?" என்று கூறினார்கள். "இமாம் மாலிக்கைப் போல் சிறந்த மேதாவியை நான் பார்த்ததில்லை" என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், "இமாம் மாலிக்கும், சுப்யான் பின் ஜனாவும் இல்லாவிடின் ஹதீஸ் கலையே ஹிஜாஸில் இல்லாது போயிருக்கலாம்" என்றும் கூறியுள்ளார்கள். ஸஹாபாக்களைப் பற்றி இமாமவர்கள் மிகவும் பயபக்தி மரியாதையுடன் பேசுவார்கள். "சர்வ கலாஞானங்களிலும், பேணுதலிலும், சுய முடிவுகளிலும், அறிவிலும் மகா மேதைகள் அவர்கள்" என்று பூரிப்போடும், கண்ணியத்தோடும் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஒரு சமயம் ஒருவர், இமாம் ஷாபியீ அவர்களை அணுகி "ஒரு மனிதன் (சத்தியம் செய்வது போல) 'நான் கஃபத்துல்லாஹ் வரை நடந்தே செல்லுவேன்' என்று சபதமிட்டுவிட்டான். ஆனால், அவனால் அந்தச் சபதத்தை நிறைவேற்ற முடியவில்லை. இத்தகையவன் ஷரீஅத்தின் ஆணைப்படி என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினார். அதற்கு இமாமவர்கள், "அவன் தான் செய்த சபதத்துக்கான தண்டனைக்காக (கப்பாரா) கொடுத்தேயாக வேண்டும். நம்மை விடச் சிறந்த மேதையான ஸஹாபி அதா பின் அபீ ரியாத் கூட இவ்வாறே தீர்ப்பளித்துள்ளார்கள்" என்று பதிலளித்தார்கள்.

சுன்னத் வல் ஜமாஅத்துக்குட்பட்ட நான்கு மத்ஹபுகளிலும் இமாம் அபூ ஹனீபா அவர்கள் உண்டாக்கித் தந்த மத்ஹபுக்கும், இமாம் ஷாபியீ அவர்கள் உண்டாக்கித் தந்த மத்ஹபுக்கும் இடையில்



தான் அதிக வித்தியாசங்களுண்டு. இமாம் அபூ ஹனீபாவிலிருந்து இவ்விதம் பல விஷயங்களில் இமாம் ஷாபியீ அபிப்பிராயபேதம் கொண்டவர்களாக இருப்பினும், அவர்களை மதித்துப் போற்றவும், அவர்களுக்கு மரியாதை காட்டவுமட்டும் பின் வாங்கியதில்லை. ஒரு சமயம் அவர்களிடம் இமாம் அபூ ஹனீபாவைப் பற்றி வினவப் பட்டபோது, "கேள், பிக்ஹு சம்பந்தப்பட்ட வரையில் மக்கள் யாவருமே அபூ ஹனீபாவின் குழந்தைகள் தாம்" என்று கூறியுள்ளார்கள். மற்றொரு சமயம் அவர்கள், இமாம் அபூ ஹனீபாவின் அடக்கஸ் தலத்துக்கு ஜியாரத்துக்காகச் சென்றிருந்தார்கள். அன்று இரவில் அந்த இடத்திலேயே அவர்கள் தங்கியுமிருந்தார்கள். அங்கே இஷாவிலும், மறு நாள் சுப்ஹுவிலும் இமாமவர்கள் தொழுகையை முன் நின்று நடத்தினார்கள் ஆனால், தாங்கள் உண்டாக்கிக் கொடுத்த முறைப்படி தொழாமல், இமாம் அபூ ஹனீபா உண்டாக்கித் தந்த முறைப்படியே அவர்கள் தொழுகையை நடத்தினார்கள். 'பிஸ்மி'யைச் சப்தமிட்டு ஓத வில்லை; சுப்ஹில் 'குனூத்' ஓதவில்லை. இதைக் கண்ட சிலர் மறு நாள், "அவர்கள் உண்டாக்கித் தந்த முறையை ஏன் அவர்கள் பின்பற்ற வில்லை" என்று வினவினர். "இது இமாம் அபூ ஹனீபாவின் சமூகம். அவர்களுக்கு நான் மரியாதை காட்டுவதற்காக, அவர்கள் போதித்த முறைப்படியே தொழுதேன்" என்று பதிலளித்தார்கள். இமாமவர்களின் தாராள மனப்பான்மைக்கு இது மகத்தான சான்றாகும்.

## பெரியார்களின் பாராட்டு

இமாமவர்களின் மேதைமையையும், மரியாதையையும், கலா ஞானத்தையும் அவர்கள் கால அறிஞர்கள் பலரும் போற்றிப் பாராட்டியுள்ளனர். "இமாம் ஷாபியீ அவர்களை விட சர்வ கலை களிலும் தேர்ந்த யாரையும் நான் காணவே இல்லை. அவர்கள் கலா ஞானத்தின் சிகரமாகவே விளங்கினார்கள்" என்று காஸிம் பின் ஸலாம் கூறியுள்ளார்கள். இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் அவர்களும் தங்கள் குருநாதரான இமாம் ஷாபியீயைப் பற்றி மிகவும் மரியாதையாகக் குறிப்பிடுவார்கள். அவர்கள் தொழுது முடிந்ததும், "இறைவா, எனக்கும், என் உற்றார், உறவினர்களுக்கும்,

முஹம்மதிப்னு இத்ரீஸ் அவர்களுக்கும் நல்லருள் புரிவாயாக!'' என்று பிரார்த்திப்பதுண்டு. இதைக்கண்ட அவர்களுடைய மகனார் தம் தந்தையை அணுகி, ''இமாம் ஷாபியீ அவர்களுக்காகவும் நீங்கள் பிரார்த்திப்பானேன்?" என்று வினவினார். அது கேட்ட அஹ்மதிப்னு ஹன்பல், ''இமாம் ஷாபியீ இப்பூவுலகில் தன்னேரிலாத அறிவுச் சூரியனாவார்கள். மனிதனுக்கு உடல் நலம் அவசியமானதாக இருப்பது போலவே, இந்தச் சமூகத்துக்கு இமாம் ஷாபியீயும் இன்றி யமையாதவர்களாவார்கள். அவர்களைப் போன்ற மற்றொருவர் கிடைப்பது அரிது. இத்தகைய பெரியாருக்காக நான் எப்படிப் பிரார்த்திக் காமலிருப்பேன்? கடந்த முப்பது ஆண்டுகளாக நான் அவர்களுக்காகப் பிரார்த்திக்காமல் தூங்கியதில்லை" என்று பதிலளித்தார்கள்.

ஒரு சமயம் இமாம் ஷாபியீ அவர்கள், இமாம் அஹ்மதிப்னு ஹன்பலின் வீட்டுக்கு வந்து, உடல் நலமற்றிருந்த அவர்களை வினவிவிட்டுச் சென்றார்கள். அப்போது தங்கள் உடல்நிலை சரியில்லாதிருந்தும், இமாம் அஹ்மது அவர்கள், அவர்களோடு வெளியில் வந்து, அவர்கள் தங்கள் வாகனத்தில் அமர்ந்த பின்னும், அவர்களைத் தொடர்ந்து சிறிது தூரம் நடந்து சென்று வழியனுப்பி னார்கள். இதைக் கண்ட ஒருவர் இமாம் அஹ்மதிப்னு ஹன்பலை நோக்கி, "ஏன் நீங்கள் உடல்நிலை சரியில்லாதிருந்தும் அவர்களைக் கண்டு இத்தனை சிரமம் எடுத்துக் கொள்கிறீர்கள்?" என்று வினவினார். அதற்கு "இமாம் ஷாபியீ அவர்களுக்கு நான் செய்ய வேண்டிய மரியாதையில் இது எம்மாத்திரம்! அவர்கள் ஏறிச் செல்லும் வாகனத்தின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு போனால்கூட எனக்கு ஏதாவது பயனுள்ள அறிவு உண்டாகவே செய்யும்'' என்று அஹமதிப்னு ஹன்பல் பதிலளித்தார்கள்.

இமாம் அபூ ஹனீபாவின் தலைமையான மாணவரும், ஹனபி மத்ஹபை ஒழுங்குபடுத்திய இருவர்களுள் ஒருவருமான இமாம் முஹம்மது பின் ஹஸன் ஷைபானிய்யியும் இமாம் ஷாபியீயிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்கள். கலீபா ஹாரூனிடம் அவர்களைப் பற்றி இவர்கள் வெகுவாகப் பாராட்டிப் பேசியுள்ளார்கள்.



ஒரு சமயம் அவர்கள் ஓர் அவசர வேலையாக வெளியில் புறப்பட ஆயத்தமாகித் தங்கள் வாகனத்திலேறப் போனார்கள். அப்போது, இமாம் ஷாபியீ தங்கள் வீட்டுக்கு வருவதாகச் செய்தி கிடைத்தது. உடனே அவர்கள் தங்கள் பிரயாணத்தை நிறுத்திவிட்டு, இமாமவர் களை வரவேற்கத் தயாராகி விட்டார்கள். இமாமவர்கள் வந்ததும், அவர்களை எதிர் கொண்டு வீட்டினுள் அழைத்து வந்து மரியாதை செய்தார்கள். அங்கேயிருந்த யாவரையும் வெளியிலனுப்பி விட்டு, இமாமவர்களுடன் அமர்ந்து ஓர் இரவும் ஒரு பகலும் தொடர்ந்து அளவளாவினார்கள். இமாமவர்கள் தங்கள் வீட்டில் தங்கியிருக்கும் வரை யாரையும் அங்கே வரவிடவே இல்லை. இமாமவர்களிடம் கற்ற மாணவர்களில், இமாம் அஹ்மதிப்னு ஹன்பலையன்றி, மேலும் பல பிரபலஸ்தர்களும் உண்டு. இமாமவர்களோடு தொடர்பு கொண்டு, அவர்களுடனேயே தங்கியிருந்து கல்வி பெற்ற மாணவர்களில் இத்தகைய, சுமார் நூற்றி அறுபது பெயர்களை ஹாபிஸ் இப்னு ஹஜர் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுள், ஹதீஸ் கிரந்தத்தைத் தொகுத்த இமாம் புகாரியின் குருநாதரான இமாம் ஹுமைதி, அபூ முஹம்மது, ஹர்மலா, அபூ இப்ராஹீம், இஸ்மாயீல் பின் யஹ்யா, அபூ தௌர், ரபிஉ சுலைமான், அபூ யஃகூப், இமாம் பைஹகி, இப்னு ஹஜர் ஆகியோர் இஸ்லாமிய உலகில் புகழ் பெற்றுள்ளவர்களாவர்.

"இமாமவர்களின் வீட்டு முன்னால் சுமார் எழுநூறு வாகனங்கள் வரை நிற்கக் கண்டிருக்கிறேன். அவை இமாமவர்களிடம் பிக்ஹு, ஹதீஸ் பாடங்களைக் கற்றுப் போக வரும் மாணவர்களுடைய வையே" என்றும் ஹாபிஸ் இப்னு ஹஜர் குறிப்பிடுகிறார்கள்.

## இமாமவர்களின் கவிதைகள்

கவிதைகளியற்றுவதில் இமாமவர்கள் தனியானதோர் சிறப்புப் பெற்றிருந்தார்கள், அவர்கள் அந்தத் துறையில் மட்டுமே கவனம் செலுத்தியிருந்தால் கூட, அவர்களை ஒரு மாபெரும் கவிஞர் என்று உலகம் போற்றித் தான் இருக்கும். ஆனால், மார்க்கத்துக்குத் தாங்கள் ஆற்றவேண்டிய சேவையை உணர்ந்த இமாமவர்கள் மற்ற வேலைகளை ஒதுக்கி விட்டார்கள். அதில் இந்தக் கவிதைகளும்

சேர்ந்துவிட்டன. எப்போதேனும் நினைத்துக் கொண்டால் திடீரென்று பாட்டெழுதுவதுண்டு. மார்க்கச் சேவையில் புகுமுன் தங்கள் வாலிப வயதில் கவிதைகள் பல எழுதியுள்ளார்கள்.

கவிதை எழுதுவது நல்லதுதான் என்று
மார்க்கப் பெரியார்கள் அனுமதித்திருப்பின்
நான் லபீதைவிட அழகும் பொருளும் நிறைந்த
கவிதைகள் பலவற்றை ஆக்கியிருப்பேன்

என்று பாடலொன்றில் இமாமவர்கள் தங்கள் கவிதை இயற்றும் திறம் பற்றியும். அதில் தாங்கள் அதிகக் கவனம் செலுத்தாத காரணம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இளமையில் அவர்கள் கவிதைகள் இயற்றுவதிலேயே பொழுது போக்கிக் கொண்டிருந்தார்களென்றும், அச்சமயம் ஒரு நாள் அவர்கள் கஃபத்துல்லாஹ்வின் சுவரில் சாய்ந்து கொண்டிருந்த போது, "முஹம்மதே, கவிதைகள் புனைவதைக் கைவிட்டு, பிக்ஹுச் சட்ட விளக்கங்களில் கவனம் செலுத்தும்!" என்று ஒரு சப்தம் கேட்டது என்றும், அது முதல் பாட்டெழுதுவதைக் குறைத்துக் கொண்டார் களென்றும் சொல்லப்படுகிறது.

இமாமவர்கள் நபி பெருமானார் மீதும், அவர்களுடைய சந்ததியார் மீதும் கொண்டிருந்த அன்பைப் பாடல்களிலும் எழுதினார் கள். அவ்விதம் அவர்கள் பாடல்கள் எழுதுவதைக் கண்ட காரிஜிகள் அவர்களுக்கு 'ஷீயாக்காரர்' என்று பட்டம் சூட்டினர். அதனால் அவர்கள் மனம் தளராது, மேலும் மேலும் அத்தகைய பாடல்களை பலவற்றை எழுதினார்கள். காரிஜிகள் தங்களை 'ஷீயாக்காரர்' என்றழைத்ததைப் பொருட்படுத்தாததுடன், அதையும் கூட அவர்கள் ஒரு பாடலில் சொல்லிக் காட்டியுள்ளார்கள். ஒரு பாடலின் கருத்தாவது:

மகிமைமிக்க நபிபிரான் குடும்பத்தவர்களே,
உங்களை உவந்து நேசிக்க வேண்டுமென்று
இறைவனே எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளான்.
நபிமீது 'ஸலவாத்துக்' கூறாதவன் தொழுகை



அங்கீகரிக்கப் படமாட்டாது என்று இறைவன்
அருளியுள்ளது ஒன்றே போதுமே
உங்கள் மகிமைக்கும், பெருமைக்கும் சான்று!

இன்னொரு கவிதையின் கருத்தாவது:

ஹே ஒட்டகத்தின் மீது சவாரி செல்பவர்களே.
நீங்கள் மினாவில் மஸ்ஹப் என்ற இடத்தில் நின்றவாறு
காலைத் தொழுகைக்காக புராத் நதியின் வெள்ளமென
வரும் ஹஜ்ஜாஜிகளிடமும்,
கைப், நாஹில்வாழ் மக்களிடமும் கூறுங்கள்;
எம்பெருமானரையும். அவர்களின் குடும்பத்தாரையும்
போற்றிப் புகழ்வதால் மட்டும் ஒருவன்
'ராபிஜி' யாவானாயின்
தானே கலையாய ராபிஜி என்று
நான் ஹஜ்ரத் அலீயைப் போற்றியதும்
மூடர்கள் என்னை
'மேன்மை தங்கிய ராபிஜி' என்கின்றனர்.
நான் ஹஜ்ரத் அபூபக்கரைப் போற்றினாலோ
இந்த அறிவிலிகள் அதே வாயால் நான்
'நாஸிபி' என்கின்றனர்.
எனவே, நான் இவர்கள் முடிவுப்படி
'ராபிஜி' யாயுமுள்ளேன்; 'நாஸிபி' யாயுமுள்ளேன்!
எனவே, இந்த அறிவிலிகள் எதை நினைப்பினும்
அதுபற்றிப் பாதகமில்லை,
இந்த இரண்டு நிலைகளையும் என்னில்
அமர்த்தியவனாகவே
நான் ஒரு நாள் புதைகுழியில் புகுவேன்.

இமாமவர்கள் தங்கள் கவிதைகளில் பல அருமையான கருத்துக் களை அள்ளித் தெளித்துள்ளார்கள். அத்தகைய கவிதையொன்றின் பொருளாவது:

சுகபோகத்தில் மூழ்கித் திளைப்பவர்கள்
அதற்காக நன்றிசெலுத்துவதில்லையே!
நன்றி செலுத்தவேண்டும் என்ற எண்ணம்கூட
அவர்களுக்கு உண்டாவதில்லையே!
எத்தகைய கடினமான காரியத்தையும்
மனிதன் தன் ஆற்றலால் முடிக்கிறான்
கையெட்டாத தொலையிலுள்ள பொருளைக்கூட
இடையறாது முயன்று தனக்கு அருகிலாக்கிவிடுகிறான்.
நல்லதிர்ஷ்டமென்ற ஆதி ஏற்பாடு
மனிதனுக்குச் சாதகமானதும்
எத்தகைய உறுதியான கதவும்
தானாகவே திறந்துகொள்கிறது
நல்லதிர்ஷ்டமுடையவனொருவன்.

''நான் காய்ந்த குச்சியொன்றைக் கையிலெடுத்தேன்
அது பூத்துக் காய்த்துப் பழம் தந்தது' என்றாலும்
அதைக்கூட நம்பலாம்.

நல்லதிர்ஷ்டமற்றவனொருவன்,
'நான் தாகவிடாய் தீர ஓர் ஆற்றின்கரை யேகினேன்;
என்னைக் கண்டதும்
ஆறு வற்றி வரண்டுவிட்டது' என்றாலும்
அதையும் நம்பலாம்.
இது வியப்புக்குரிய விஷயமல்ல.

மானிடனுடைய அறிவாற்றலால் மட்டும்
யாவும் ஆகிவிடுமெனின்,
இன்று நானே வானவிதானத்திலே சென்று
அங்குள்ள தாரகைகளிடையே அமர்ந்துவிடுவேன்.
(அந்தோ, என் செய்வது!)

நல்லதிர்ஷ்டமும், செல்வமும் வாய்ப்பவருக்கு
அறிவு, ஞானங்கள் என்ற
ஒப்பற்ற செல்வங்கள் வாய்ப்பதே இல்லை.



அறிவும் செல்வமும் ஒன்றுக்கொன்று எதிரிகள்;
அவை என்றுமே ஓரிடத்தில் சேர்ந்திருக்கமாட்டா.

அறிஞர்கள் சதாவும் வறுமையாலும்,
கவலையாலும் வாடுவதும்,
மூடர்களும், தகுதியற்றவர்களும்
சுகபோகங்களில் திளைப்பதும்
மெய்யாகவே 'ஆதிஏற்பாடு' ஒன்று உண்டு
என்பதற்கு மறுக்கவியலாத சான்றுகளல்லவா!

இமாமவர்கள் எழுதியுள்ள வேறு சில கவிதைகளின் கருத்தாவது:

கொடிய (தொகுத்து) நோய் பீடித்தவனை
நெருங்காமல் மக்கள் ஒதுங்குவதுபோல,
அறிஞர்களையும், பேணுதலாளர்களையும் கண்டும்
மக்கள் குறைகூறாது ஒதுங்கிக்கொள்வார்கள்.
(ஆனால்) பொறாமையுடையவர்கள்
எனக்குப் புறம்பே என்மீது குறைகூறுகின்றனர்;
எனக்கு நேரிலோ என்னைப் புகழ்கின்றனர்.
உன்கண்ணியம்பற்றி உனக்கு அக்கறையில்லாவிடின்
இறைவனைப்பற்றிய பயமில்லாவிடின்
நீயும்கூட உன் மனம் போனபடி நடக்கலாம்.

என்னோடு ஒத்த கருத்துள்ளவர்களையே
நான் விரும்புகிறேன்.
என் குற்றங்குறைகளை மன்னிப்பவர்களையும்,
என் சேவையில் பக்கபலமாக நிற்பவர்களையும்,
என் லட்சியங்களைப் பேணுபவர்களையும்,
என் மரணத்துக்குப்பின்னர் என்னை நினைப்பவர்
களையும்,

எனக்குச் சகோதரர்களாகத் தேடினேன்.
அவர்கள் நிறையக் கிடைத்தனர்.
(ஆனால்) அவர்களை நான் சோதித்தபோது
அவர்கள் எண்ணிக்கையில் சிலராகிவிட்டனர்!

எனது இந்தக் குறையைப் போக்குவார் யார்?
என் லட்சிய சகோதரர்கள் கிடைத்துவிடின்
என் செல்வமனைத்தையும் அவர்களுக்குப்
பங்கிட்டுக் கொடுத்து விடுவேன்.

நல்லதிர்ஷ்டமுடையவனே,
நீயொன்றும் எனக்காகக் கவலைப்பவேண்டாம்!
என்னிடம், ஒரு நாள் உணவு இருப்பினும் போதும்,
நாளையைப்பற்றிய கவலை எனக்கில்லை.
இறைவன் தருவதை நான் ஏற்கிறேன்;
அவனை நம்பியே முயற்சியிலிறங்குகிறேன்.
நல்ல செயலின் முடிவு நல்லதாகவே இருக்கும்;
சஞ்சல நாட்கள் நீடிக்கமாட்டா;
உலகில் சுகமோ துக்கமோ
எப்போதும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை;
இரவுக்குப்பின் பகல் வந்துதான் தீரும்.

உன் உடலில் சொறிசிரங்கு உண்டானால்,
அதன் நமைச்சலைப் போக்க,
உன் நகத்தைப் பிரயோகிக்கிறாய்.
எனவே, உன் வேலையை நீயே கவனி!
(பிறரை நாடாதே!)
(ஒருக்கால்) உனக்குப் பிறர் உதவி தேவையாயின்,
உன் கண்ணியத்துக்குத் தக்கபடி உதவும் மனிதனிடம்
உதவி தேடு!

இம்மையையும், அதன் புற அழகையும்
மோகிப்பவர்களே, எச்சரிக்கை!
(எத்தனையோ) மாட மாளிகைகளையும்,
அவற்றை நிர்மாணித்தவர்களையும்
காலம் உண்டு ஏப்பமிட்டுவிட்டது.



இம்மையின் மாட்சியையும், செல்வத்தையும் விழைபவர்
அவற்றின் அழியும் இயல்பை உணரவேண்டும்.
எச்சரிக்கை! இம்மையின் நிலவறைகள்
தங்கள், வெள்ளியாலேயே நிரம்பியுள்ளன!
உங்கள் பொக்கிஷத்தை நற்செயல்களாலும்,
மெய்விஸ்வாசத்தாலுமே நிரப்புங்கள்!

இம்மை நாற்றமெடுத்த மாமிசத் துண்டையொக்கும்;
அதைப் பற்றியிழுக்க நாய்கள் பல போட்டியிடுகின்றன.
ஹே மனிதா, நீ இந்த இம்மையெனும்
நாற்றப் புலாலைவிட்டு ஒதுங்கிக்கொள்வாயாயின்
இவ்வுலகில் வாழ்பவர்கள் யாவருக்கும் நல்லவனவாய்
அந்த மாமிசத் துண்டைக் கடிப்பாயாயின்
அந்த மனித நாய்களோடு சச்சரவிடும்
நாயாகவே நீயும் ஆகிவிடுவாய்

## இலக்கியம், சொல்லகராதியில்

இமாம் ஷாபியீ அவர்கள் கவிதையை விடவும், வசன நடையிலும், அரபு மொழி அகராதிப் பயிற்சியிலும், அரபி இலக்கியத்திலும் சிறப்பான தேர்ச்சியுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஹுஜைல் இனத்தாரின் பத்தாயிரம் பாடல்களையும், சொல் வழக்கற்றுப் போன அகராதியின் பதங்களையும் மனப்பாடமாக்கி இருந்தார்கள். "இமாமவர்களின் வாசகமே அகராதிக்கு மூலமாகும்" என்று அக்காலையில் புகழ் பெற்றிருந்த இலக்கிய, அகராதித் தொகுப்பு நிபுணராண மப்ரத் கூறுகிறார். மேலும், இமாமவர்களுடைய வசன நடை பல வகையில் சிறப்புடையதாக இருந்தது. யாவருக்கும் புரியும் படியான எளிய நடையில் எழுத வேண்டுமாயினும் எழுதுவார்கள்; மிகக் கஷ்டமான நடையிலும் எழுதுவார்கள். "இமாமவர்களின் இலக்கியக் கட்டுரைகளைவிட அதிகமாக என்னை யாருடைய கட்டுரைகளும் கவரவில்லை. அவர்கள் எழுதுவது வசன நடையா, அல்லது முத்துக்களைத்தான் அப்படி அழகாகக் கோத்துத்

தருகிறார்களா என்று போற்றும் வண்ணம் எழுதியுள்ளார்களா?" என்று பிரபல அரபி இலக்கிய மேதை ஜாஹிஜ் கூறுகிறார். "இமாமவர்களின் நெஞ்சையள்ளும் வசன நடையை, இனிய சொற்பிரயோகங்களை, அற்புதமான பாணியை, வேறு யாருடைய நடையிலும் நான் காணவில்லை" என்று இமாமவர்களின் மாணவர்களுள் ஒருவரும், அக்காலையில் சொல்லகராதியில் 'மாபெரும் தூண்' என்று மக்களால் போற்றப்பட்டவர்களுமான இமாம் அபூ ஸுலைமான் கூறுகிறார்கள். "மாபெரும் ஆலிமும், இமாமும், முஜ்தஹிதுமான ஷாபியீ அவர்களின் ஒவ்வொரு வார்த்தையும் சிந்தனையைத் தூண்டக்கூடியதாகும்; அரபி இலக்கியம், அகராதி போன்றவற்றில் அவர்கள் ஒப்பற்ற மேதையாக விளங்கினார்கள்" என்று அல்லாமா ஜமக்ஷரீ கூறுகிறார்கள்.

மேலும், சொல்லகராதியில் அவர்களுக்கிருந்த தேர்ச்சி யையும் பலர் பாராட்டியுள்ளனர். "அகராதிக் கலைக்கே இமாமவர்கள் ஒரு புதையலாக விளங்கினார்கள். மேலும், சொற்களின் பொருள்களையும், மூலாதாரமான கருத்துக்களையும் அவர்களிடம் கேட்பதில்தான் எவ்வளவு ஆனந்தம்!" என்று அபுல் அப்பாஸ் போற்றியுள்ளார். "இமாம் ஷாபியீ சொல்லகராதிக் கலையில் மாபெரும் கடல் போன்றவர்கள்" என்று இலக்கிய மேதை அபூ மன்ஸூர் கூறுகிறார். மேலும், இவர்கள் இமாமவர்கள் விளக்கியுள்ள வழக்குச் சொற்களை எல்லாம் திரட்டி அவற்றுக்கு விரிவுரையொன்றும் எழுதியுள்ளார்கள். அந்த விரிவுரையின் முகவுரையில், "இமாமவர்கள் சான்றாகக் கொடுக்கும் இலக்கியப் பழமொழிகளையும், வழக்கற்றுப் போன அகராதிச் சொற்களையும் முற்கால அரபிக் கவிதைகளைக் கற்றுள்ள அறிஞர்கள்கூட அனேகமாகத் தெரிந்திருக்க மாட்டார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## வரலாற்றுத் தேர்ச்சி

அரபி இலக்கியத்திலேயே பண்டைய அரபிகளின் உயர்வு, வீழ்ச்சி பற்றிய சரித்திரங்களுக்கு முக்கியமான இடமிருந்தது. இதை நன்கு அறிந்தவர் அக்காலையில் சரித்திரப் பேராசிரியர் என்றே போற்றப்படுவார். இந்த வரலாற்றுப் பாடங்களில் இமாம் ஷாபியீ நன்கு தேர்ந்திருந்தார்கள். "இமாம் ஷாபியீ வரலாற்றுப் பாடத்தில் தன்னேரிலாதவர்களாகத் திகழ்ந்தார்கள்" என்று 'மிர் அதுல் ஜினான்' என்ற வரலாற்று நூலின் ஆசிரியர் கூறுகிறார். இமாமவர்கள் கலீபா ஹாரூனர் ரஷீதின் முன் பல்வேறு சாஸ் திரங்களையும் பற்றி விளக்கம் கொடுத்த போது, கடைசியில் இலக்கியம், அகராதி பற்றியெல்லாம் அவர் வினவினார். அப்போது இமாமவர்கள், "நான் அரபி மண்ணில் பிறந்தவன்; அரபி மொழியே என் நரம்புகளில் ஓடிக் கொண்டிருக்கிறது; இதுவே என் தாய் மொழி" என்று பதிலளித்தார்கள்.



## வான நூல்

வானநூல், ஜோதிடம் முதலியவற்றிலும் இமாமவர்கள் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்கள். சூரியன், சந்திரன் போன்ற கிரஹங்களின் சஞ்சாரம், அதனால் உண்டாகும் பலாபலன்கள், பருவங்களால் உண்டாகும் சீதோஷ்ண மாறுதல்கள் முதலிய விஷயங்களை வானசாஸ்திர நிபுணர்களிடம் அவர்கள் பயின்றுள்ளார்கள். இப்னு ஹஜர் 'தவாலியத் தாஸீஸ்' என்ற நூலில் கீழ்க்கண்ட சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்: " ஷாபியீ இமாமவர்கள் தங்களுடைய நண்பர் ஒருவரிடமிருந்த ஜாதகம் ஒன்றை வாங்கிப் பார்த்தார்கள். அதைக் கூர்ந்து கவனித்த அவர்கள், 'இது பெண்ணுடைய ஜாதகம். இவளுக்கு இன்றிலிருந்து பதினேழாம் நாள் குழந்தையொன்று பிறக்கும். அதன் இடப்பக்கத் தொடையில் கறுப்பு மச்சமொன்றிருக்கும். மேலும், அந்தக் குழந்தை இருபத்து நான்கு நாட்களே உயிரோடிருக்கும். பிறகு இறந்துவிடும்" என்று கூறினார்கள். அதுபோன்றே குழந்தை பிறந்து இருபத்து நான்காம் நாள் இறந்து போய்விட்டது. இதைக் கேள்வியுற்ற இமாமவர்கள் தங்களிடமிருந்து வானசாஸ்திர நூற்களையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கி விட்டதோடு, பிறகு யாரிடமும், என்றுமே ஜாதகம் பற்றிப் பேசியதே இல்லை."

## வைத்தியப் பயிற்சி

இமாமவர்கள் கைதேர்ந்த வைத்தியராகவும் விளங்கினார்கள். உடற்கூறு நுட்பங்களையும், மருந்துகளின் தன்மையையும் அறிவதற்காக அவர்கள் கிரேக்க வைத்திய நிபுணர்களான கேலன் (ஜாலினூஸ்), அரிஸ்டாட்டில், (அரஸ்தூ) பிளேட்டோ (அஃப்லாத்தான்) முதலியவர்களின் நூல்களையும் விரிவாகக் கற்றுள்ளார்கள். "மனிதனுக்கு உடலும் ஜீவனும் அவசியமானவையாக இருப்பது போல, வைத்தியக் கலையும், சன்மார்க்கக் கலையும் அவசியமான வையாகும்" என்று அவர்கள் கூறியுள்ளார்கள். "அந்தோ, முஸ்லிம்கள் வைத்தியக் கலையைக் கற்காமல் பின்தங்கி விட்டார்களே! இறைவன் தந்த அறிவின் இந்தப் பகுதியைக் கிறிஸ்தவர்களும், யூதர்களும் எடுத்துக் கொள்ள விட்டுவிட்டார்களே!" என்றும் அவர்கள் வருந்தி யுள்ளார்கள். மேலும், "கருணையுள்ள ஒரு வைத்தியனும், நேர்மையாளன் ஒருவனும், ஓடும் தண்ணீரும் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்!" என்றும், "முஸ்லிம்கள் வைத்திய கலை பற்றி ஆராய்ச்சி நடத்தாமலும், அதன் நுட்பங்களை அறியாமலும் இருக்கிறார்களே!" என்றும் அவர்கள் அடிக்கடி கூறுவார்கள். இமாமவர்களை அவர்கள் கால மக்கள் ஒரு சிறந்த உடற்கூறு, வைத்திய கலை நிபுணராகவும் கருதிப் போற்றியுள்ளனர்.

"மொச்சைக் கொட்டை மூளையைப் பலப்படுத்தும். மூளை அறிவை அதிகரிக்கச் செய்யும். மொச்சைக் கொட்டை தின்பதால் மறதியுண்டாகும் என்று சொல்வது சரியல்ல" என்று இமாமவர்கள் தெரிவித்துள்ளார்கள். மேலும், "காலரா (வபா) நோய் கண்டால் 'பனபுஸஜு' என்ற (உர்துவில் பனபுஷா அல்லது பன்புஷா என்ற) பூவை அரைத்து உடலில் பூசுவதுடன், உள்ளேயும் குடிக்கக் கொடுக்க வேண்டும். இந்த நோய்க்கு இது மிகவும் கைகண்ட மருந்தாகும்" என்று இமாமவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இமாமவர்கள் தங்களுக்கு (உஷ்ண) ஜுரம் வந்தால், கொம்மட்டி மாதுளம் பழச் சாற்றைப் பிழிந்து குடிப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. இரவில் கத்திரிக்காயையும், முட்டையையும் உண்ணாது ஒதுக்க வேண்டும் என்று அவர்கள் கூறியுள்ளார்கள். முகம் மஞ்சணித் திருப்பின் தேனையும், வெந்தயத்தையும் சேர்த்துச் சாப்பிடச் சொல்லி யுள்ளார்கள். "பசித்திருந்து குளித்தபின் உணவுண்ணாமல் இருப்பவனும், உடலில் இரத்தம் குத்தி எடுத்தபின் உணவுண்ணாமல் இருப்பவனும் உடனே மரணிக்காதிருப்பின் ஆச்சரியம் தான்" என்றும் அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.



மேலும், "கொழுத்தவர்கள், முஹம்மது இப்னு ஹஸனைப் போல் இருந்தாலன்றி ஈடேற்றம் பெறுவது கஷ்டம்" என்று அவர்கள் கூறியபோது, அதன் கருத்தென்ன என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. "அறிவாளியானவன் இம்மை அல்லது மறுமை பற்றிய ஏதெனும் ஒரு கவலையால் பீடிக்கப்பட்டவனாய் இருப்பான். இவ்விதம் இரண்டில் ஒரு கவலையும், பாரக்கும் மிகைப்பதால், அவன் உடலில் ஊறும் கொழுப்பு உருகிக் கொண்டே போகும். இந்த இரண்டு விதக் கவலையு மில்லாதவனுடைய உடலில் கொழுப்பு ஊற ஊற உறைந்து கொண்டே வரும். அதனால், அவன் மிருகங்களைப் போன்ற குணமுள்ளவனாகி விடுவான்" என்று அவர்கள் விளக்கினார்கள்.

இதற்கு உதாரணமாக அவர்கள் கதையொன்று சொல்லிக் காட்டினார்கள். அதன் சாராமாவது: ஓர் அரசன் உடல் கொழுத்த வனாக, எவ்வளவோ வைத்தியம் செய்தும் அதை மெலிய வைக்க இயலாதவனாக இருந்தான். அவனிடம் வந்த வைத்தியர் ஒருவர் அவனை நன்றாகப் பார்த்துவிட்டு நட்சத்திரக் கணக்கைப் போட்டுப் பார்த்தார். பின்னர் உதட்டைப் பிதுக்கியவராக, "அரசே, உங்களுக்கு மருந்து கொடுப்பதால் எந்தப் பயனுமில்லை, இன்னும் சரியாக முப்பது நாட்களில் உங்களுக்குத் தீடீர் மரணம் சம்பவிக்கப் போகிறது" என்று கூறினார். உடனே அரசன் அவர்மீது ஆத்திரம் கொண்டு அவரைச் சிறையிலடைத்து விட்டான். ஆனால், அவர் சொன்ன விஷயம் அவன் மனத்தை அறுக்க ஆரம்பித்துவிட்டது. உணவு செல்ல வில்லை; தூக்கம் வரவில்லை. முப்பது நாட்களில் அவன் உடம்பு துரும்பாக இளைத்துவிட்டது. ஆனால் வைத்தியர் சொன்னபடி மரணம் சம்பவிக்கவில்லை. உடனே, அவரை விடுதலை செய்து விட்டு, அவரிடம் கேட்டபோது, அரசன் உடல் மெலிய அவர் கொடுத்த கவலை மருந்து அதுவேயாகும் என்று கூறியதைக் கேட்ட அரசன் அவரைப் போற்றினான்.

இமாமவர்கள் மரண வியாதியாகப்படுத்திருக்கும் போது, கிறிஸ்தவ வைத்தியன் ஒருவன் வந்து அவர்களுடைய நாடியைப் பிடித்துப் பார்த்தான். அதே சமயம் அவனிடம் பேசிக் கொண்டே இமாமவர்கள் அவன் நாடியைப் பரிசோதித்து விட்டார்கள். அவன் சென்ற பின், வெகு விரைவிலேயே அவன் மரணித்து விடுவான் என்று கூறினார்கள். அதன்படியே இமாமவர்களுக்கு முன்னரே அவன் மரணமடைந்து விட்டான்.

"மருந்தில்லாத சகல நோய்களுக்கும் இந்த மூன்று பொருள்கள் நற்பயன் தரலாம். அவை, கொடி முந்திரிப் பழமும், பசு (அல்லது ஒட்டகைப்) பாலும், கரும்பும்" என்றும் இமாமவர்கள் கூறியுள்ளார்கள். "உங்கள் ஊரில் கரும்பு இல்லாவிடின் நான் அங்கே வந்து தங்கவே மாட்டேன்" என்று கூறியுள்ளார்கள். பார்வை குறைவானவனுக்கு ஆட்டு ஈரலை உலர்த்திப்பொடி செய்து, வஸ்திரகாயம் செய்து கண்ணில் போட்டால் பார்வை சரியாகும் என்பதும் அவர்கள் சொல்லியுள்ள ஒரு மருந்தாகும்.

இமாமவர்களிடம் கலீபா ஹாரூனர் ரஷீது ஒரு சமயம் கேட்டார், "முஹம்மதே, நீர் அதிகாலையிலேயே உணவு உண்பதாய்க் கேள்விப்பட்டேன். அதன் காரணமென்ன?" என்று. அதற்கு இமாமவர்கள் சொன்னார்கள், "நான்கு காரியங்களுக்காக அப்படிச் செய்கிறேன். அப்போது இரவு முழுவதும் குளிர்ந்த தண்ணீர் கிடைக்கிறது; காற்று மணமானதாக இருக்கிறது; ஈக்களும் குறைவு; என் மனம் மற்றவர்களின் உணவின் மீது ஆசை கொள்ளாமல் இருக்க அது உதவியாகவும் இருக்கிறது" என்று. இதை ஹாரூனர் ரஷீது பாராட்டி ஏற்றுக் கொண்டார்.

இமாமவர்கள் கெய்ரோவிலிருந்த சமயம், அவர்களிடம் வந்து வைத்திய சாஸ்திரம்பற்றி உரையாடிக் கொண்டிருந்த வைத்தியர் ஒருவர், இமாமவர்களுக்கு வைத்திய சாஸ்திரத்திலுள்ள தேர்ச்சியைக் கண்டு, அவர்களிடம் வைத்திய நூல்கள் சிலவற்றைத் தாம் கற்க விரும்புவதாகத் தெரிவித்தார். இமாமவர்கள் புன்னகையுடன், தாங்கள் ஓதிக்கொடுக்கும் மாணவர்களைச் சுட்டிக்காட்டி, "இந்த ஜாமிஉல் அஸ்ஹரில் ஓதும் மாணவர்கள் உமக்கு அதைக் கற்றுத்தர என்னை விடமாட்டார்கள்" என்று பதிலளித்தார்கள்.



## ஆருடத்தில்

மனிதனுடைய முகச் சாயல், அங்க அமைப்பு ஆகியவற்றை வைத்து மனிதனுடைய இயல்பைக் கூறும் ஆருடத்தில் (இல்மு பிராஸத்) இமாமவர்கள் சிறப்பான தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இமாமவர்களுடைய இந்தத் திறமையை நிரூபிக்கும் சம்பவம் ஒன்றை இமாம் புகாரியின் குருநாதரான ஹுமைதி தெரிவித்துள்ளார்கள். அது வருமாறு: "இமாமவர்களும் நானும் மக்காவின் எல்லையில் உலாவிக்கொண்டு போனோம். அங்கே ஒரு மனிதனைக் கண்டோம். நான் உடனே இமாமவர்களை நோக்கி, "உங்கள் ஆருட ஞானத்தால் இந்த மனிதன் எப்படிப் பட்டவன் என்று கூறுங்கள், பார்க்கலாம்!" என்று கேட்டேன். உடனே இமாமவர்களை அவனைக் கவனித்துப் பார்த்துவிட்டு, "இவன் ஒன்று, தச்சுவேலை செய்பவனாக இருப்பவன்; அல்லது, தையல்வேலை செய்பவனாக இருப்பான்" என்றார்கள். உடனே நான் அந்த மனிதனை அணுகி, "உன் தொழில் என்ன?" என்று கேட்டேன். அவன், "நான் முதலில் தச்சுவேலை செய்து கொண்டிருந்தேன்; இப்போது தையல்வேலை செய்து வருகிறேன்" என்று தெரிவித்தான்."

இமாமவர்கள் இந்த ஆருட சாஸ்திரத்தை யமனிலிருக்கும் போது கற்றதாகத் தெரிவிக்கிறார்கள். அவர்கள் இதைக் கற்ற புதிதில், வெளியூர் ஒன்றுக்கு செல்ல நேர்ந்தது. அது மிகவும் சிறிய ஊராகும். அங்கே இரவில் தங்க நேரவே, தங்குவதற்கு வசதியான இடத்தைத் தேடினார்கள். அச்சமயம் அவர்கள் முன்னால் ஒரு மனிதன் வந்தான். அவனை ஆருடத்தால் பார்த்த இமாமவர்கள் அவன் அற்புதமான குணமும், கீழான இயல்புமுடையவனாக இருக்க வேண்டும் என்று முடிவு செய்தார்கள். எனினும், வேறு வழியற்று, இரவு தங்குவதற்கு எங்காவது ஜாகை வசதி கிடைக்குமா என்று அவனிடம் விசாரித்தார்கள். அவன் அவர்களோடு மிகவும் அன்பாகப் பேசினான். தன் வீட்டிலேயே அவர்கள் தங்கலாம் என்றான். அவர்களுக்காக ஓர் அறையைச் சித்தப்படுத்திக் கொடுத்தான். அங்கே வாசனைப் புகை

மணம் கமழ்ந்தது. நல்ல உணவு கொடுத்தான். மெத்தைகள் போட்ட சுத்தமான படுக்கை விரிக்கப்பட்டிருந்தது. இமாமவர்களின் குதிரைக்கும் வயிறு நிறைய உணவளித்தான். அந்த மனிதனுடைய பரிவையும், உபசரிப்பையும் கண்டு இமாமவர்கள் அந்த மனிதனைப் பற்றி மிகவும் உயர்வாக எண்ணலானார்கள். தங்களுடைய ஆருட ஞானம் சரியானதல்லவோ என்றும் ஐயுறலானார்கள்.

மறுநாள் காலையில் இமாமவர்கள் பிராயணத்துக்கு ஆயத்தம் செய்தார்கள். அப்போது வீட்டுக்காரனிடம் சென்று, அவன் செய்து கொடுத்த வசதிகளுக்காக நன்றி தெரிவித்தார்கள். அவனை அவசியம் தன் வீட்டுக்கு வர வேண்டும் என்றும் அழைத்தார்கள். அவனோ, சுற்றி வளைத்துக்கொண்டு, தான் அவர்களுக்கு இரவில் செய்து கொடுத்த வசதிகளுக்காக ஒரு பெருந்தொகையைத் தர வேண்டும் என்றான். இமாமவர்கள் ஒன்றும் பேசாமல் அவன் கேட்ட தொகையைக் கொடுத்து விட்டார்கள். அதன் பின்னரும் அந்த மனிதன் ஒரு மாதிரியாக நிற்பதைக் கண்ட அவர்கள், ஏன், இன்னும் ஏதாவது பாக்கியுள்ளதா?" என்று வினவினார்கள். அவன், "ஆமாம், நீங்கள் தங்கிய அறைக்கு வாடகை இதில் சேர்க்கப்படவில்லை" என்றான். அது எவ்வளவு என்று கேட்டு அவன் சொன்னதைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டார்கள். இந்த விபரங்களை இமாமவர்களே கூறிவிட்டுக் கடைசியில், "இல்முல் பிராஸத் ஓர் உண்மையான சாஸ்திரம் தான் என்று எனக்கு அப்போது முடிவு உண்டாயிற்று" என்று தெரிவிக்கிறார்கள்.

## இமாமவர்களின் கூர்த்தமதி

இமாம் அபூ ஹனீபா, இமாம் மாலிக் ஆகிய இருவரும் தோன்ற இருந்தது பற்றி எம்பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்ததுபோல, இமாம் ஷாபியீயின் தோற்றம் பற்றியும் பெருமானார் முன்னறிவிப்புச் செய்துள்ளார்கள். ஆதாரபூர்வமான ஹதீஸ் கிரந்தங் களில் எம்பெருமான் அருளிய இந்தத் திருமொழி காணப்படுகிறது:



''குறைஷி குலத்தைச் சேர்ந்த ஆலிம் ஒருவர் பூமியின் பல பாகங்களிலும் அறிவை-மார்க்க ஞானத்தை-நிரப்புவார்'' என்று எம்பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். இவ்விதம் 'குறைஷி குலத்தைச் சேர்ந்த ஆலிம்' என்று பெருமானார் குறிப்பிட்டுள்ளது இமாம் ஷாபியீ அவர்களைத் தாம் என்பது இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் போன்ற பல இமாம்களுடைய கருத்தாகும். உலகின் பல்வேறு பாகங்களிலும் இமாமவர்கள் அருளிய மார்க்கஞானம் பரவியுள்ளதுடன், இன்று உலக முஸ்லிம்களில் பெரும்பாலோர்-கிழக்கே இந்தோனேஷியா, மலாயா தொட்டு, மேற்கே எகிப்துவரை பல நாடுகளிலும்-அவர்கள் உண்டாக்கிய மார்க்கச் சட்டத்தையே ஏற்று கடைப்பிடித்து வருகின்றனர்.

இத்தகைய பெருமைக்குரிய மகான் ஆன இமாமவர்களின் பயபக்தியையும், வணக்கத்தையும், மன இயல்பையும் பற்றி ஓரளவு கண்டோம். இனி அவர்கள் வழங்கிய பதில்கள், தீர்ப்புக்கள் எத்துணை அற்புதமானவை என்பதையும் காண்போம்.

இமாமவர்களின் அபாரமான ஞாபக சக்தியைப்பற்றி பல்வேறு இடங்களிலும் குறிப்பிட்டுள்ளோம். தங்கள் ஆசிரியர்கள் கூறும் பாடங்களை அவர்கள் உடனுக்குடன் மனப்பாடமிட்டுக் கொண்டதை யும், அரபிப் பாடல்கள் பதினாயிரம் வரை மனப்பாடமாகச் சொல்லியதையும் பற்றியெல்லாம் நாம் அறிவோம். இது போன்றே எத்தனையோ நூல்களை அவர்கள் மனனம் செய்துள்ளார்கள். அவர்கள் இமாம் முஹம்மது பின் ஹஸனின் வீட்டுக்குச் சென்ற சமயம், அங்கே இமாம் அபூ ஹனீபாவின் நூலான 'ஔஸத்' என்பதைக் கண்டு, அதைப் படித்து விட்டுத் தருவதாக வாங்கிச் சென்றார்கள். அதை ஒரே இரவில் மனப்பாடமாக்கிக் கொண்டு திருப்பிக் கொடுத்து விட்டார்கள்.

இதுபோன்றே இமாம் ஷாபியீயின் மதிநுட்பமும் உன்னத மானதாக இருந்தது. "இமாம் ஷாபியீ அவர்களைவிட மதிநுட்ப

மிக்கவரையும், மேதையையும் நான் காணவில்லை" என்று காஜி யஹ்யா பின் அக்ஹம் கூறுகிறார்.

ஒரு சமயம் இமாம் அஹ்மதிப்னு ஹன்பலும், இமாம் இஸ்ஹாக்கும், இமாம் யஹ்யாவும் சேர்ந்துகொண்டு மக்காவில் அப்போது பிரபலமாக விளங்கிய முஹத்திஸ் அப்துர் ரஜ்ஜாக் அவர்களின் ஹதீஸ் வகுப்பைப் பார்க்கப் போயிருந்தனர். இவர்கள் மூவரும் ஹரம் ஷரீபுக்குள் நுழைந்ததும், அங்கே ஓரிடத்தில் பெரும் கூட்டம் கூடியிருப்பதையும், அதன் நடுவில் வாலிப வயதினரான ஒருவர் அமர்ந்து ஹதீஸ் விளக்கங்கள் கொடுப்பதையும் கண்டனர். உடனே இமாம் இஸ்ஹாக் அருகிலிருந்த ஒருவரிடம், அந்த வாலிபர் யார்? என்று வினவினார். அவருடைய பெயர் முஹம்மது பின் இத்ரீஸ் ஷாபியீ என்று அறிவிக்கப்பட்டது. உடனே அவர் ஹன்பலை நோக்கி, "பறவைகளை அவற்றின் கூடுகளில் அமைதியாக இருக்க விடுங்கள்!" என்ற ஹதீஸுக்கு இவரிடம் விளக்கம் கேட்கலாமா!" என்று வினவினார். உடனே அஹ்மதிப்னு ஹன்பல், "இதற்கு விளக்கம் எதற்கு? பறவைகளைத் தொந்தரவு செய்யாதீர்கள்; அவைகளை அவைகளின் கூடுகளில் இருக்கவிடுங்கள்" என்று தான் அதன் பொருள் தெளிவாக இருக்கிறதே!" என்று தெரிவித்தார்கள். "இல்லை, இவரிடம் கேட்டுப் பார்போம்!" என்று கூறிய இஸ்ஹாக் கூட்டத்துள் நுழைந்து, இமாம் ஷாபியீ அவர்களை அணுகி, இந்த ஹதீஸைக் கூறி இதற்கு விளக்கம் யாது? என வினவினார். உடனே, இமாம் ஷாபியீ பதிலளித்ததாவது:

"வழி தவறிய காலத்து அரபிகள் இரவில் வெளியூர் புறப்பட நாடினால், முதலில் பறவைகளின் கூடுகள் இருக்கும் இடம் சென்று ஒரு கல்லை எடுத்துக் கூடுகளின்மீது எறிவார்கள். பறவைகள் கலைந்து வெளியில் ஓடும். அப்படி ஓடுகையில் அவை வலப்புறம் பறந்தால் நல்ல சகுனம் என்று முடிவு செய்து பிரயாணப் படுவார்கள். இல்லாது, மற்றத் திசைகளில் அவை பறந்தால் சகுனம் சரியில்லை என்று பயணத்தை நிறுத்திவிடுவார்கள். இதுதான் அவர்களுடைய பழக்கமாக இருந்தது. பிறகு நபிபெருமானார் (ஸல்) அவர்கள்



இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த சமயத்தில் இந்தப் பழக்கத்தை நபியவர்கள் கண்டித்து, "பறவைகளை அவற்றின் கூடுகளில் அமைதியாகத் தூங்கவிட்டு, இறைவன்மீது நம்பிக்கை வைத்துப் பயணப்படுங்கள்" என்று போதித்தார்கள்." இவ்வாறு இமாமவர்கள் கொடுத்த விளக்கம் யாவரையும் வியப்பிலாழ்த்திற்று. இமாம் அஹ்மதிப்னு ஹன்பலுக்கு அப்பொழுதுதான் இமாமவர்களிடம் தனியானதோர் மதிப்பும் மரியாதையும் உண்டாயிற்று. அதனால், அவர்கள் மற்றப் பெரியார்களுடைய கலாஞான வகுப்புக்களை யெல்லாம் விட, இவர்களுடைய கலாஞான வகுப்பையே சிறந்ததாகக் கருதி அங்குச் சென்று அமர்ந்து அவர்களுடைய உபன்னியாசங் களைக் கேட்டார்கள்.

ஒரு சமயம் அவர்கள் இவ்விதம் இமாமவர்கள் சபையில் அமர்ந்திருப்பதைக் கண்ட அவர்களுடைய நண்பரான பஜ்லு என்பவர், "ஹஜ்ரத் ஸுப்யான் பின் ஐனா நடத்தும் ஹதீஸ் வகுப்புகளுக்குக்கூடப் போகாமல், வயதில் இளையவரான இந்த மனிதருடைய சபையில் வந்து அமர்ந்திருக்கிறீர்களே!" என்று ஹன்பல் அவர்களிடம் வினவினார். உடனே அவர்கள், "நீங்கள் சும்மா இருங்கள்! இந்த அறிவுக் களஞ்சியத்திலிருந்து நான் கலா ஞானங்களை இப்போது அள்ளிப் பருகாவிட்டால் பிறகு எனக்கு இறுதி நாள் வரை அந்தப் பாக்கியம் கிடைக்காமல் போகுமோ என்று அஞ்சுகிறேன். மேலும், திருக்குர்ஆனின் அந்தரார்த்தங்களை யெல்லாம் அறிந்து போதிக்கும் அறிஞர் இந்த மனிதரை விட வேறு யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை" என்று பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் பக்தாதிலிருந்த காலத்தில் இந்தச் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது: கலீபா ஹாரூனர் ரஷீதுக்கும், அவர் மனைவி ஜுபைதாவுக்கும் ஒருநாள் சண்டை மூண்டு, அது பெரிதாகிவிட்டது. உடனே அந்த அம்மாள் தம் கணவரை நோக்கி, "நீர் நரகவாதி" என்று கூறிவிட்டார். உடனே ஆத்திரத்தோடு கலீபா, "நான் நரகவாதியானால் உன்னைத் தலாக் சொல்லி விடுகிறேன்" என்று சத்தியம் செய்து விட்டார். இதனால் இருவரும் பிரிந்திருக்க நேர்ந்தது.

எனினும், மீண்டும் சேர வேண்டும் என்ற பிரியாமை வேட்கை இருவரையும் வாட்டலாயிற்று. ஆனால், அவர்கள் சேர்வதாயின் அதற்கு, "ஹாரூனர் ரஷீது நரகவாதியல்ல" என்று தீர்ப்புப் பெற வேண்டும். அவருடைய சட்ட ஆலோசகர் முதல், உலமாக்கள் பலரும் இவ்விதம் அவருக்கு அத்தாட்சிப் பத்திரம் வழங்கத் தயாராயில்லை. "மறுமையில் அல்லாஹ் அவருக்கு என்ன கதியை வைத்துள்ளானோ!" என்று எண்ணித் தயங்கினர். கடைசியில் அவர் இமாம் ஷாபியீயை அழைத்து, அவர்களிடம் தமது வழக்கைச் சொல்லி ஒரு நல்ல முடிவு தரும்படி கேட்டார். "நீங்கள் நரகவாதியா அல்லவா என்பதுதானே இப்போதுள்ள பிரச்சினை! சரி, நான் கேட்கும் கேள்விக்கு நீங்கள் ஒழுங்காகப் பதில் சொல்லுங்கள்: நீங்கள் என்றாவது ஒரு பாவம் செய்ய நினைத்துப் பின் அல்லாஹ்வுக்காக அதை விட்டு விலகிக் கொண்டதுண்டா?" என்று இமாமவர்கள் வினவினார்கள்.

கலீபா சொன்னார்: "ஆமாம். ஒரு நாள் நான் வேட்டைக்குப் போன சமயம் வழியில் கட்டழகு மிக்கதோர் காரிகையைக் கண்டேன். அவள்மீது ஆசை தலைக்கேறியவனானேன். அவளை அழைத்துவரச் செய்தேன். அவள் வந்துவிட்டாள். ஆனால், என் மனக் கண்முன் மறுமையின் காட்சி தென்பட்டது. இறைவன்முன் 'விபச்சாரம் செய்தவன்' என்று நான் அழைக்கப்படுவதையும், மற்றும் நபிமார்கள், மகான்களின் முன் நான் வெட்கித் தலை குனிவதையும் கண்டேன். என் உடல் குன்றியது. இப்படிப் பாவ நெருப்பில் விழுவதை அல்லாஹ்வுக்காக விலக்கிக்கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். உடனே அந்தப் பெண்ணை அவள் வீட்டுக்கு அனுப்பி விட்டேன்" என்றார்.

உடனே, இமாமவர்கள், "நீர் சுவர்க்கவாதிதான்" என்று கூறி, "வலிமன் ஃகாஃப மகாம ரப்பிஹி ஜன்னத்தான்" (தன்) இறைவனின் சந்நதிக்கு அஞ்சுபவர்களுக்கு (சொர்க்கத்தில் இரண்டு பூங்காக்க ளுண்டு) என்ற திருக்குர்ஆன் வசனத்தை ஓதிக் காட்டினார்கள். அவர்கள் தீர்ப்பின்படி கலீபா மீண்டும் தமது மனைவி ஜுபைதாவுடன் சேர்ந்து வாழ முடிந்ததாம்.



பின்னர் ஹாரூன்-ஜுபைதா தகராறுகள் போன்ற பலவற்றில் இமாமவர்கள் தலையிட்டுத் தீர்ப்பு வழங்கியதாகச் சொல்லப்படுவ துண்டு. ஒரு சமயம் ஹாரூனே தம் மனைவி சுன்னத்துத் தொழக் கூடாதென்றும், தொழுதால் அவரை முத்தலாக்கும் கொடுத்து விட்டதாகும் என்றும் சபதமிட்டாராம். அதைப் பொருட்படுத்தாமல் ஜுபைதா ஸுன்னத் தொழுது விட்டாராம். எனவே, தலாக்குப் பூர்த்தி யாகிப் போய்விட்டதோ என்று ஹாரூன் கவலையுற்றராம். இதில் அவர்களிடம் தீர்ப்புக் கோரப்பட்டபோது, இமாமவர்கள் திரைக்கு அப்பாலிருந்து ஜுபைதாவை இரண்டு 'ரகஅத்' சூரா பாத்திஹாவைச் சப்தமிட்டு ஓதித் தொழச் சொன்னார்களாம். அவ்விதம் ஓதுகையில் அவர் ஒரு பிழையிட்டு ஓதினாராம். திருப்பியும் ஓதச் சொல்லவே முன்பு போலவே பிழையிட்டு ஓதவே, "இந்த அம்மாளின் தொழுகை சரியல்ல, அதனால் தலாக்குச் செல்லாது" என்று தீர்ப்புக் கூறினார்களாம்.

இமாமவர்களிடம் ஒரு சமயம், "ஒருவனுடைய தீக்கோழி இன்னொருவனுடைய விலைமதிப்பற்ற இரத்தினம் ஒன்றைக் கொத்தி விழுங்கிவிட்டால், அதனால் உண்டாகும் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது?" என்று கேட்கப்பட்டதாம். அதற்கு "இரத்தினத்தின் சொந்தக் காரன் புத்திசாலியானால், அந்தத் தீக்கோழியைப் பிடித்துத் 'தக்பீர்' சொல்லி அறுத்து, அது விழுங்கிய ரத்தினத்தை எடுத்துக் கொள்வான். பின்னர், அதன் சொந்தக்காரனுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்காக, அதன் விலையையும், அதைத் தக்பீர் சொன்ன பின் அது பெறுமான விலையையும் ஒன்றாகக் கூட்டி, அந்தத் தொகையில் பாதியைக் கொடுக்கச் சொல்வேன்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் மக்காவில் முப்தியாக இருந்தபோது ஒரு சமயம், இளைஞன் ஒருவன் இமாமவர்களிடம் துண்டுத்தாள் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். அதில் எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, இமாமவர்கள் அதற்குக் கீழ் சில வரிகள் எழுதிக் கொடுத்து அனுப்பினார்கள். அதன் விபரத்தை அறிய நாடிய ரபீஉ என்பவர் அந்த வாலிபனைத் தொடர்ந்து போய், அவனிடமிருந்து பிரஸ்தாபத் துண்டுத்தாளை வாங்கிப் பார்த்தார். அதில் பாட்டாக,

மக்காவின் முப்தியிடம் கேளுங்கள்,
மனத்திலே இச்சை கொண்டவன்
ஆலிங்கனம் நாடி (மனைவியை) வருடுவதால் மட்டும்
அவன் நோன்புக்கு பங்கமுண்டோ என்பதை

என்று அந்த வாலிபன் எழுதியிருந்தான். அதற்கு இமாமவர்கள் பாட்டாகவே,

மனத்தகத்தில் ஆசையுறும் புண்ணுண்டாகி
அதனால் ஈரல்கள் ஒன்றோடொன்று ஒட்டுவதால்
இளைஞரின் நோன்பு முறிவதைவிட்டும்
அல்லாஹ்விடம் காவல் தேடுகிறேன்

என்று பதிலளித்தார்கள். இதைக் கண்ட அந்த ரபீஉ என்பவருக்கு ஆத்திரம்கூட உண்டாயிற்று. இத்தகைய இளைஞனுக்கு இமாமவர்கள் இப்படிப் பதில் கொடுக்கலாமா என்று ஐயுற்று, இதுபற்றி அவர்களிடம் வினவினார். அவர்கள் சொன்னதாவது: "இந்த இளைஞர் ஹாஷிமிக் குலத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இந்த ரமலானில் தான் திருமணம் முடிந்தது. வாலிபரான இவருடைய ஆசையின் கொடுமையால், ரமலான் பகலில் வீடு கூடல் அற்ற சேர்மானமாக இவர் தம் மனைவியை தழுவிக் கொண்டார். அதனால், நோன்பு முறிந்து போயிருக்மோ என்று சந்தேகப்பட்டு என்னிடம் அந்தக் கேள்வியைக் கேட்டு வந்தார்.

இமாமவர்களின் மேதைமையைக் காட்டும் பல அற்புதமான பதில் களுமுண்டு. அவர்கள் ஹாரூனர் ரஷீதின் சபைக்கு வந்த போது, அங்கே அவர்களிடம் பல கேள்விகள் கேட்கப்பட்டன. அவற்றுக்கு அவர்கள் சொன்ன பதில்கள் நாம் படித்து இன்புறத்தக்கவையாகும். அவற்றுள் சில கேள்வி-பதில்களை இங்கே தரலாம்.

1. கேள்வி: ஒருவன் தன் வீட்டில் ஓர் ஆட்டை அறுத்தான். அதன்பின் அவன் வெளியில் போய்விட்டு வீட்டுக்குள் நுழைந்தவன்.



தன் மனைவி மக்களை நோக்கி, "எனக்கு அந்த ஆடு 'ஹராம்' ஆகிவிட்டது. நீங்கள் சாப்பிடுங்கள்" என்று கூறினான்.

உடனே, "அது எங்களுக்கும் 'ஹராம்' ஆகிவிட்டது" என்று அவர்களும் கூறினர்.

இமாமவர்கள் சொன்ன பதிலாவது: அவன் இணை வைப்பவனாக வீட்டை விட்டுப் புறப்பட்டான். அல்லாஹ் அவனை இஸ்லாத்திலாக்கி விட்டான். பின்னர் வீட்டிலுள்ளவர்கள் இதை அறிந்தவுடன் தாங்களும் முஸ்லிமாகி விட்டனர். எனவே, இணை வைப்பனாக இருந்தபோது அவன் ஆட்டை அறுத்தால் அது முஸ்லிமான பின் அவர்களுக்கும் 'ஹராம்' ஆகிவிட்டது.

2. கேள்வி : ஓர் அடிமை ஓடிப்போய்விட்டான். அவனுடைய எஜமானன், "நான் அவனைக் கண்டு பிடியாது உணவுண்டால், அவனை உரிமை விட்டவனாவேன்" என்று சபதம் செய்கிறான். அவன் உணவுண்ணவும் வேண்டும். அந்த அடிமையை விடுதலை செய்யாதிருக்கவும் வேண்டும். எப்படி?

பதில் : அந்த எஜமானன் அந்த அடிமையைத் தன் புத்திரர்களுள் ஒருவருக்குச் சம்மானமாக அளித்துவிட்டு உணவுண்ணலாம். பிறகு இஷ்டப்பட்டபோது நன்கொடையை மீட்டுக் கொள்ளலாம்.

3. கேள்வி : முஸ்லிமான, சுயபுத்தியுள்ள இருவர் மதுக் குடித்தனர். ஒருவனுக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, மற்றவனுக்குத் தண்டனை விதிக்கப்படவில்லை. ஏன்?

பதில் : அவர்கள் இருவரில் ஒருவன் யுக்த வயதை அடைந்து விட்டவனாவான். மற்றவன் சிறுவன். அவன் மீது இதற்குத் தண்டனை விதிக்க முடியாது.

4. கேள்வி : ஒருவன் தன் மகனை விளித்து, "நான் மரணித்தால், உனக்கு என் சொத்திலிருந்து இரண்டாயிரம் திர்ஹம் கிடைக்கும். நீ என் சிறிய தகப்பன் மகனாக இருப்பின் உனக்குப் பதினாயிரம் திர்ஹம் கிடைத்திருக்கும்" என்று கூறுகிறான். எப்படி?

பதில் : அவனுக்கு முப்பதினாயிரம் திர்ஹம் ஆஸ்தி இருக்கிறது. அவனுக்கு இருபத்தெட்டுப் பெண்களும், இந்த ஓரே மகனும் உண்டு. எனவே, அவன் சொத்தில் அந்தப் பெண்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் ஆயிரம் திர்ஹமும், மகன் இரண்டாயிரம் திர்ஹமும் அடைவர். அந்த மகன்மட்டும், அவன் மகனாகவன்றி, அவன் சிறிய தகப்பன் மகனாக இருப்பின், அந்தப் பெண்கள் அனைவருக்குமாக அவன் ஆஸ்தியில் மூன்றில் இரண்டு பங்கு (இருபதினாயிரம் திர்ஹம்) போக மீதியுள்ள பதினாயிரமும் அவன் சிறிய தகப்பன் மகனுக்கே கிடைக்கும்.

5. ஒருவன் ஒரு கலையத்தில் தண்ணீரெடுத்துக் குடிக்கும்போது, ஓரளவு குடிக்கும்வரை அது 'ஹலால்' ஆக இருந்தது; பின்னர், மீதித் தண்ணீர் 'ஹராம்' ஆகிவிட்டது. எப்படி?

பதில் : அவன் தண்ணீர் குடிக்கும்போது அவனுடைய பொன்னி மூக்கு உடைந்து, அந்த மீதித் தண்ணீரில் இரத்தம் விழுந்து கலந்ததால் அந்தத் தண்ணீர் அசுத்தமானதாகி 'ஹராம்' ஆகிவிட்டது.

6. கேள்வி : ஓர் ஆணும், பெண்ணும் நடந்து சென்றபோது, இரண்டு சிறுவர்களைச் சந்தித்தார்கள். உடனே அவர்களை இருவரும் முத்தமிட்டனர். பின்னர் ஆண் சொன்னான், "என் தகப்பனை இவர்கள் இருவருக்கும் பாட்டனாக்கினேன்; என் தம்பியை இவர்களுக்குச் சிற்றப்பனாக்கினேன்; என் மனைவியை இவர்களுடைய தகப்பனுக்கு மனைவியாக்கினேன்" என்று. உடனே அந்தப் பெண் சொன்னாள், "என் தாயாரை இவர்களுக்குப் பாட்டியாக்கினேன்; என் சகோதரியை இவர்கள் சிறிய தாயாராக்கினேன்; என் கணவரை இவர்களுடைய தாய்க்குக் கணவராக்கினேன்" என்று எப்படி?

பதில் : அந்த ஆணும் பெண்ணும் கணவன் மனைவியுமாவர்; அந்த இரண்டு சிறுவர்களும் அவர்களுடைய குழந்தைகளாவர்.



7. கேள்வி : ஒருவன் ஒரு சபையில் ஒரு பொருளையிட்டு நிரப்பிக்கட்டி, அந்தக் கட்டின்மீது முத்திரை போட்டுத் தன் மனைவியிடம் கொணர்ந்து கொடுத்து, "இந்தப் பையைத் திறந்தாலும், கிழித்தாலும், முத்திரையை உடைத்தாலும் நீ தலாக் ஆவாய். இந்தப் பையிலுள்ளதை நீ வெளியாக்கி, இந்தப் பையைக் காலியாக்கா விட்டாலும் நீ தலாக் ஆவாய்" என்றான். அவள் தலாக் ஆகாமலிருப்பதெப்படி?

பதில் : அந்தப் பையில் உப்பு அல்லது சீனிபோன்ற கரையும் பொருளை அவன் நிரப்பினான். அந்தப் பையைச் சூடான தண்ணீருள் முக்கினால் அதனுள் இருக்கும் பொருள் உருகி வெளியாகிவிடும். முத்திரையை உடைக்காமலும், பையைத் திறக்காமலும், இவ்விதம் அதனுள் இருப்பதைக் காலி செய்து பையை அவள் அவனிடம் ஒப்படைத்துவிட முடியும்.

8. கேள்வி : ஐந்து பேர்கள் ஒரு பெண்ணிடம் விபச்சாரம் செய்து விட்டார்கள். ஒருவனுக்கு மரண தண்டனையும், ஒருவனுக்கு நாட்டி வைத்துக் கல்லெறியும் தண்டனையும் விதிக்கப்பட்டது. மூன்றாமவனுக்கு நூறு கசையடியும், நான்காமவனுக்கு ஐம்பது கசையடியும் அடிக்க உத்தரவிடப்பட்டது. ஐந்தாவது நபர் எந்தத் தண்டனையுமின்றி விடுதலை செய்யப்பட்டான். எப்படி?

பதில் : விபச்சாரம் செய்வது ஆகுமானதுதான் என்று கூறி, அதில் ஈடுபட்டவனுக்கு மரண தண்டனையும், மணமுடித்தவனான நிலையில் அதில் ஈடுபட்டவனுக்கு நாட்டி வைத்துக் கல்லெறியும் தண்டனையும் விதிக்கப்பட்டன. மூன்றாவதானவன் மண முடியாதவன்; நூறு அடி பெற்றான். நான்காமவன் அடிமை; எனவே, ஐம்பது அடி அளிக்கப்பட்டது. ஐந்தாவது நபர் பைத்தியக்காரன்; எனவே, சும்மாவிடப்பட்டான்.

9.கேள்வி : ஒருவன் சிலருக்கு இமாமாக முன் நின்று தொழுகையை நடத்தினான். அவன் வலப்பக்கம் ஸலாம் கொடுத்த உடன் அவனுடைய மனைவி அவனை விட்டும் 'தலாக்' ஆனாள்.

அவன் இடப்பக்கம் ஸலாம் கொடுத்த போது அவன் தொழுகையே முறிந்து போய்விட்டது. அப்போது வானத்தைப் பார்த்தான். அப்போதே அவன் ஆயிரம் திர்ஹம் கொடுக்க வேண்டியதாயிற்று. எப்படி?

பதில் : இவனுடைய மனைவியின் கணவன் தலைமறைவாகப் போய்விட்ட நிலையில், அவனோடு அவளுக்குள்ள தொடர்பு அறுபட்டுப் போனதாகக் கூறி அவளை இவன் மணந்து கொண்டிருந்தான். இந்த நிலையில் இவன் வலப்பக்கம் ஸலாம் கொடுத்தபோது தன் மனைவியின் (தலைமறைவான) அந்தக் கணவனை இவன் கண்டான். எனவே, அப்போதே அந்தப் பெண் இவனை விட்டும் தலாக்கானவளாகிறாள். இவன் இடப்பக்கம் ஸலாம் கொடுத்த சமயம் தன் உடையில் அதிகமான இரத்தத்தைக் கண்டான். அதனால் தொழுகை கூடாமல் போய்விட்டது. இவன் வானத்தை நோக்கியபோது அங்கே பிறையைக் கண்டான். இவன் கொடுக்க வேண்டிய கடனுக்குக் குறித்த தவணை வந்து விட்டதை அது நினைவு படுத்திற்று.

10. கேள்வி : ஒருத்தி மூன்று குழந்தைகளைப் பெற்றாள். அவற்றுள் ஒன்று அடிமையாயிற்று. ஒன்று ஹராமில் பிறந்ததாயிற்று. மூன்றாவது குழந்தை அரசனாயிற்று. அந்த அரசனின் பெயர் குத்பாக்களில் ஓதப்படும் புகழைப் பெற்றது. இந்த மூன்று குழந்தைகளுக்கும் தாயும் தகப்பனும் ஒரே நபர்கள் தாம்.

பதில் : அவள் ஓர் அடிமைப் பெண்ணாவாள். அவளை ஹாஷிமிய்யி குலத்தைச் சேர்ந்த ஒருவன் மணமுடித்தான். அதில் அவள் ஒரு குழந்தை பெற்றாள். அந்தக் குழந்தை அவள் யாருக்கு அடிமையாயிருந்தாளோ அந்த எஜமானனுக்கு அடிமையாயிற்று. பின்னர் அந்த ஹாஷிமிய்யி குலத்து மனிதன் அவளை விவாகரத்துச் செய்துவிட்டு, அவளோடு விபசாரம் புரிந்தான். அதில் ஒரு குழந்தை பிறந்தது. அது ஹராமில் பிறந்ததாயிற்று. பின்னர் அவன் அந்த அடிமைப் பெண்ணை அவளுடைய எஜமானனிடமிருந்து விலைக்கு வாங்கி, அவளோடு சேர்ந்தான். அதில் ஒரு குழந்தை பிறந்தது. அதுதான் அரசனாயிற்று.



11. கேள்வி : ஒருவன் இன்னொருவனைத் தடியால் தலையில் அடித்துவிட்டான். அதனால் அடிபட்டவன், அந்த அடியால் ஒரு கண் பார்வை போய்விட்டதென்றும், மூக்கின் முகரும் சக்தி போயிற் றென்றும், நாவு பேச இயலாமல் சமிக்ஞையாலேயே பேச வேண்டியதாகி விட்டதென்றும் முறையிடுகிறான். அவன் சொல்வது சரிதானா என்று உடனே காண்பதெப்படி?

பதில் : அவனைச் சூரியனுக்கு எதிராக நிறுத்தி சூரியனைப் பார்க்கச் செய்து, அவன் கண் சிமிட்டாதிருந்தால் கண்பற்றி அவன் சொன்னது சரி. காரசாரமான ஒரு பொருளின் புகையை அவனை நாசியால் உறிஞ்சச் சொல்லி, நாசியிலிருந்து தண்ணீர் வராமலிருந்தால் நாசி பற்றி அவன் சொன்னதும் சரியே. நாவில் ஊசியைக் குத்தி அதிலிருந்து கறுப்பான இரத்தம் வந்தால் நாவைப் பற்றி அவன் சொன்னதும் உண்மையே.

12. கேள்வி : இரண்டு ஆண்கள் மாடி வீடு ஒன்றில் இருக்கும் போது, ஒருவன் கால் சறுக்கிக் கீழே விழுந்து இறந்து போனான். உடனே, உயிரோடிருந்தவனுடைய மனைவி அவனுக்கு 'ஹராம்' ஆகிவிட்டாள், எப்படி?

பதில் : மரணமானவன் எஜமானன்; உயிரோடிப்பவன் அவன் அடிமை. இந்த நிலையில் அவன் மரணிக்கவே, அந்த அடிமை அவன் மகளான-தான் மணந்த-பெண்ணுக்கு அடிமையாகிவிட்டான். இதனால், அவனுக்கு அவள் 'ஹராம்' ஆகிவிட்டாள்.

13. கேள்வி : இருவர் ஒரு பெண்ணை மணம் பேசப் போயினர். ஒருவனுக்கு அவள் 'ஹலால்' ஆயினாள்; மற்றவனுக்கு 'ஹராம்' ஆகிவிட்டாள்.

பதில் : அந்த இருவரில் ஒருவன் ஏற்கனவே நான்கு பெண்களை மணந்திருந்தான். எனவே, இவள் அவனுக்கு ஹராமாகிவிட்டாள்.

14. கேள்வி : ஒரு பெண் ஒரே மாதத்தில் மூன்று கணவர்களை மணந்தாள். மூன்று 'நிக்கா' ஹும் ஹலால் ஆக இருந்தது. எப்படி?

பதில் : அந்தப் பெண்ணின் முதல் கணவன் அவள் பூரணக் கர்ப்பிணியாக இருக்கும்போது அவளைத் தலாக்குச் சொன்னான். அதிலிருந்து பத்தாவது நாள் அவள் குழந்தை பெற்றாள். அதனால் தலாக்கின் 'இத்தா' முடிவடைந்துவிட்டது. அச்சமயம் இரண்டாவது கணவன் அவளை மணந்தான். ஆனால், அவனுடன் பொருந்தாமல் அவர்கள் வீடுகூடுமுன் பிரிந்துகொண்டனர். எனவே, இந்தத் தலாக்குக்கு 'இத்தா' இல்லை. பின்னர் மூன்றாம் கணவனை அவள் மணந்து கொண்டாள். இவ்விதம் ஒரே மாதத்தில் அவள் மூவருக்கு மனைவியானாள்.

15. கேள்வி : ஒருவனுக்கு அவன் மனைவி ஒரு வருஷம் முழுவதும் ஹராம் ஆக இருந்து, பின்னர் 'ஹலால்' ஆனாள். இடையில் தலாக்கும் நடக்கவில்லை; சத்தியம் முறித்தலுமில்லை; இத்தாவுமில்லை.

பதில் : அவனும் அவன் மனைவியும் ஹஜ்ஜுக்கு இஹ்ராம் கட்டியிருந்தார்கள். அந்த வருஷம் அவர்களுக்கு ஹஜ்ஜு தப்பிப் போய்விட்டது எனவே, மறுவருஷம் வரை வீடுகூடுதல் அவர்கள் இருவருக்கும் 'ஹராம்' ஆயிற்று.

இப்படிச் சிக்கலான கேள்விகளுக்கெல்லாம் அருமையான பதில் கொடுத்த இமாமவர்கள் தாங்கள் இரண்டு கேள்விகள் கேட்பதாகவும், அவற்றுக்குக் கலீபா ஹாரூனின் சபையிலுள்ள யாரும் பதிலளிக்கலாம் என்றும் கூறிக் கீழ்க்கண்ட கேள்விகளை விடுத்தார்கள்:

1. மரணமான ஒரு மனிதன் அறுநூறு திர்ஹம் சொத்தையும், வாரிசுதாரர்கள் சிலரையும் விட்டுச் சென்றிருந்தான். அந்த வாரிசுதாரர்களுள் ஒரு சகோதரியும் இருக்கிறாள். அவளுக்கு ஒரு திர்ஹம் மட்டுமே பங்கு கிடைக்கிறது. இதைப் பங்கிடும் விதம் எப்படி?



2. ஒரு மனிதன் ஒரு பெண்ணை மணம் முடித்தான்! அவன் மகன் அந்தப் பெண்ணின் தாயை மணம் முடித்துக் கொண்டான். அந்த இருவரும் இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றார்கள். அந்த இரண்டு குழந்தைகளிடையேயும் உள்ள உறவு முறை யாது?

இவ்விரண்டு கேள்விகளும் கேட்கப்பட்டபோது அந்தச் சபையில் இமாம் அபூ யூஸுப் அவர்களும் இருந்தார்கள் என்றும், அவர்கள் உட்பட யாராலும் இவற்றுக்குப் பதில் கூற இயலாது போகவே, ஹாரூனர் ரஷீது கேட்டுக் கொண்டதன் பேரில் இமாம் ஷாபியீ அவர்களே பதிலளிக்கலானார்கள் என்றும் சொல்லப்படுகிறது:

1. இதில் சொல்லப்பட்டது போன்ற பிரச்சினை ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் ஆட்சியில் நேர்ந்தது. அவர்கள் பிரயாணம் போவதற்காகத் தங்கள் கோவேறு கழுதைமீது ஏற ஒரு காலை அதன் அங்கவடியின் மீது வைத்துவிட்டார்கள், அச்சமயம் பெண்ணொருத்தி அவர்களிடம் வந்து, "அமீருல் மூமினீனே, என் சகோதரன் மரணமாகி அறுநூறு திர்ஹம் சொத்து விட்டுப் போயிருக்க, அதில் ஒரு திர்ஹம்தானா எனக்குரிய பங்கு கிடைக்க வேண்டும்?" என்று வினவினாள். உடனே ஹஜ்ரத் அலீ (ரலி) சொன்னார்கள்: "உன் சகோதரன் அறுநூறு திர்ஹத்தையும், இரண்டு பெண் மக்களையும், தன் தாயையும், மனைவியையும், பன்னிரண்டு சகோதரர் களையும், உன்னையும் விட்டுப் போனான். அந்த அறுநூறு திர்ஹத்தில் இரண்டு பெண் மக்களுக்கும் அல்லாஹ் சொல்லியபடி நானூறும், தாய்க்கு நூறும், மனைவிக்கு எழுபத்தைந்தும், சகோதரர்கள் பன்னிருவருக்கும் தலா இருபத்து நான்கும், உனக்கு ஒன்றும் விட்டுச் சென்றான்" என்று கூறியவர்களாகச் சவாரியைத் தொடங்கினார்கள்.

2. தாயின் மகன் மகளுடைய மகனுக்கு மாமாவாயினான். மகளுடைய மகன் தாயின் மகனுக்குச் சிறிய தகப்பனாயினான்.

இமாமவர்கள் சாதுரியமாகப் பேசுவதிலும் தேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய உரையாடலில் நகைச்சுவையும் மிளிரும். அத்தகைய சம்பவம் ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம்: இமாமவர்கள் எகிப்து செல்லுமுன், அச்சமயம் கலீபாவாகயிருந்த மாமூனின் சபைக்கும் சில தடவை சென்று வந்துள்ளார்கள். மாமூன் முஃதஜிலாக்களின் ஆதிக்கத்தில் அகப்பட்டிருப்பதைக் கண்டு அவர்கள் அவரை விட்டுப் பெரும்பாலும் ஒதுங்கியே வந்தார்கள். ஒரு சமயம் இமாமவர்கள் தமது சபைக்கு வந்திருந்தபோது மாமூன் அவர்களை நோக்கி, "அல்லாஹ் இந்த ஈயை ஏன் படைத்தான்?" என்று வினவினார். உடனே இமாமவர்கள் "ஆட்சியாளர்களைத் தாழ்மையாக்குவதற்காகத்தான்" என்று பதிலளித்தார்கள். உடனே கலீபா சிரித்தவராக, "இல்லை, என் கன்னத்தில் ஈ ஒன்று வந்து அமர்ந்தது. அதனால் கேட்டேன்" என்று கூறினார். "நீங்கள் இதைக் கேட்டதும் என் உடல் திடுக்கத்தால் ஒரு குலுங்குக் குலுங்கி விட்டது" என்று இமாமவர்கள் சொல்லவே, "ஏன்?" என்று அவர் வினவினார். இமாமவர்கள், "உங்கள் கன்னத்தை பதினாயிரம் வாள் வீரரும், பதினாயிரம் ஈட்டி வீரரும், அவர்களின் தளபதிகளும் தொட முடியாதிருக்க கேவலம், கடுகளவுள்ள ஈயொன்று அதில் வந்து அமர்ந்து உங்களைத் தாழ்மையாக்கும்படி செய்த அல்லாஹ்வை எண்ணியவுடன் தான் என் உடலில் திடுக்க முண்டாயிற்று" என்று விளக்கினார்கள்.

இமாமவர்கள் தீர்ப்பின் மாண்பைக் காட்டும் ஒரு சம்பவம் வருமாறு: இமாமவர்கள் பக்தாதிலிருந்த சமயம் விதண்டாவாதமாக கேள்வி கேட்கும் நபர் ஒருவன் இமாமவர்களிடம் வந்தான்.அவன், "நான் தங்களிடம் மூன்று கேள்விகள் கேட்பேன். அவற்றுக்குத் தாங்கள் திருப்திகரமாகப் பதில் சொல்ல வேண்டும்" என்று கூறினான். இமாமவர்கள் இசையவே, அவன் தன் கேள்விகளை விடுத்தான் :

1. அல்லாஹ்வை நான் நம்ப வேண்டுமானால், (நான்) அவனை எனக்கு ஸ்பஷ்டமாக நேரில் பார்க்க வேண்டும். முடியுமா?



2. அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்று இருப்பது உண்மையானால், நாம் செய்யும் நன்மை தீமைகள் யாவும் அவனால் உண்டாகுபவைதாமே! அவற்றில் தீமையானவற்றுக்காக அவன் நம்மைத் தண்டிப்பது சரியா?

3. இப்லீஸை அல்லாஹ் வேதனை செய்வதாகவும், தண்டிப்பதாகவும் சொல்கிறானே. இப்லீஸோ நெருப்பாலானவனா யிற்றே! அவனை நரக நெருப்பு வாட்டுவது எப்படி?

இந்த மூன்று கேள்விகளையும் அந்த விதண்டாவாதி சொல்லி முடித்த உடனே, இமாமவர்கள் எழுந்து கீழே கிடந்த ஒரு கல்லை எடுத்து அவன் மீது வீசிவிட்டார்கள். அது அவனுக்கு அதிகமான நோவையும், கோபத்தையும் உண்டாக்கிவிட்டது. "கேள்வி கேட்டால் கல்லால் அடிப்பதுதான் முறையோ! பதில் சொல்ல முடியாவிட்டால் சும்மா இருப்பதுதானே!" என்று கூறிக் கொண்டே அவன், "இவ்வளவு பெரிய அறிவாளி என் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது என்னை அடித்து விட்டார்" என்று நகர நீதிபதி (காஜி)யிடம் முறையிட்டான். உடனே, சட்டம் தன் வேலையைத் தொடங்கிற்று. இமாமவர்கள் அவனுடைய குற்றச்சாட்டுக்கு நீதிமன்றத்தில் வந்து ஆஜராகி பதில் சொல்ல வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். உடனே, இமாமவர்கள் இதில் சில முக்கியமான விஷயங்கள் தெளிவுபட வேண்டியதிருப்பதால் இதைக் கலீபா ஹாரூனர் ரஷீதின் சபையில் விசாரிக்க உத்தரவிட வேணுமாய்க் கேட்டார்கள். நீதிபதியும் அதற்கு ஏற்பாடு செய்தார். கலீபாவின் சபையில் இமாமவர்கள் விஷமத்தனமான ஒரு செயல் செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு நின்றார்கள். கலீபா கேட்டார் "ஏன் இவனைக் கல்லால் அடித்தீர்கள்?" என்று. "அவன் என்னிடம் என்ன கேள்விகள் கேட்டான் என்று திருப்பிச் சொல்ல உத்தரவிடுங்கள்" என்று இமாமவர்கள் கேட்டார்கள். அவன் தன் வினாக்களை அங்கே எடுத்துக் கூறினான். உடனே இமாமவர்கள், "நீ கேட்ட கேள்விகளுக்குப் பதில்தானே இது!

அப்படியிருக்க நீ முறையிட வேண்டிய அவசியமென்ன?" என்று கேட்டார்கள். அவர்கள் சொல்வதை விளக்குமாறு கலீபா உத்தரவிட்டார். இமாமவர்கள் சொன்னார்கள்: "முதலாவதாக, நீ என்னிடம் கேட்டாய், அல்லாஹ்வை நேரில் ஸ்பஷ்டமாகப் பார்க்க வேண்டும் என்று. இப்பொழுது நான் உன்னைக் கல்லால் அடித்ததால் வேதனை உண்டானதாக முறையிடுகிறாயே. எங்கே அந்த வேதனையை நீ என்னிடம் ஸ்பஷ்டமாகக் காட்டு. இல்லாவிட்டால் அதை நான் நம்புவதெப்படி? இப்படி உன் முதல் கேள்விக்குப் பதில் தரும் முகத்தான் உன்னைக் கல்லால் அடித்தேன்.

இரண்டாவதாக, நீ கேட்டாய், அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றிருக்கும்போது, நீ செய்யும் தீமைகளுக்கு அவன் உன்னைத் தண்டிப்பது எப்படி சரி என்று. சரி, இப்போது மட்டும், நான் கல்லால் அடித்ததாக முறையிடுகிறாயே, அது ஏன்? அவனன்றி ஓர் அணுவும் அசையாது என்றிருக்கும் போது நீ கல்லால் அடிப்பட்டதும் அவனால் உண்டான சம்பவம்தானே! அதற்கு நீ அவன் மீதல்லவா வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டும்! என் மீது வழக்குத் தொடரலாமா? இதுவே உன் இரண்டாவது கேள்விக்கு அந்தக் கல் மூலம் நான் தந்த பதிலாகும்.

மூன்றாவதாக நீ கேட்டாய், நெருப்பாலான ஷைத்தானை நரக நெருப்பு துன்புறுத்துவதெப்படி என்று. ஆமாம். மண்ணால் படைக்கப்பட்ட உன்னை மட்டும் நான் அடித்தேனே அந்தக் கல் துன்புறுத்திய தெப்படி? நீ மண்ணினால் படைக்கப்பட்டுள்ளாய்; அதுவும் மண். அப்படியிருக்க அது உன்னைத் துன்புறுத்தி இருப்பது சாத்தியமா! இதுவே உன் மூன்றாவது கேள்விக்கு அந்தக் கல் மூலம் நான் தந்த பதிலாகும்."

இமாமவர்கள் பதில்களைக் கேட்டுக் குற்றம் சாட்டியவன் தலை கவிழ்ந்தான். இப்படி ஓர் அருமையான வழக்கு தமது முன் நடந்ததற்காகக் கலீபாவும் மகிழ்ச்சியில் திளைத்தார்.



## இமாமவர்களின் நூற்கள்

எண்ணற்ற நூல்களை எழுதி எல்லையற்ற மார்க்கச் சேவைகளும் செய்த மகான் இமாம் ஷாபியீயாவார்கள். அவர்கள் மொத்தம் நூற்றுப் பதிமூன்று நூல்கள் எழுதியிருப்பதாகச் சொல்லப் படுகிறது. அவற்றுள் ஷரீஅத்தின் சட்ட திட்டங்களின் மூலங்களாக விளங்கும் மகத்தான நூல்கள் மட்டும் பதினான்கு ஆகும். மத்ஹபின் பிரிவுகளைப் பற்றியும், மற்றும் பல விஷயங்களைப் பற்றியும் தங்களுடைய மற்ற நூல்களில் பேசுகிறார்கள்.

இமாம் ஷாபியீயின் போக்கு நடுவு நிலையானது. அவர்கள் பூரணமான பழைய சம்பிரதாயத்துக்கும், சுதந்திரமான முடிபுகளுக்கும் இடையிலுள்ள பாதையை வகுத்துத் தந்தார்கள். 'உஸூலுல் பிக்ஹு' என்ற பிக்ஹின் சட்டமுறையை வகுத்துத் தந்து உதவியவர்கள் அவர்கள் தாம். இவர்கள் 'கியாஸ்' (அனுமானம்) சம்பந்தப்பட்டவரை வெகு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார்கள். அத்துடன், ஹனபி இமாமவர்களின் விஷேமான வழிமுறைகளில் ஒன்றான-நாம் உரிய இடத்தில் குறிப்பிட்டுள்ள-'இஸ்திஹ்ஸான்' ஐ ஷாபியீ இமாமவர்கள் முற்றும் ஒதுக்கிவிட்டார்கள்.

இமாமவர்களின் நூல்கள் பெரும்பாலும் பக்தாதிலும், கெய்ரோவிலும் இருக்கும்போதே எழுதப்பட்டன. அவர்கள் பக்தாதிலிருந்த சமயம் ஆக்கிய நூல்களை அவர்களுடைய மாணவர்களான இமாம் அஹ்மதிப்னு ஹன்பல், ஜஃபரானீ, அபூ தௌர், கராபீஸீ ஆகியோர்கள் தொகுத்ததாகவும், கெய்ரோவிலிருந்த சமயம் ஆக்கிய நூல்களை முஜ்னீ, ரபீஉ பின் ஸுலைமானுல் ஜீஸி, ராபிஉ பின் ஸுலைமானுல் முராதீ, புவைதி, ஹர்மலா, யூனுஸ் பின் அப்துல் அஃலா ஆகிய ஆறு பேர்களும் தொகுத்ததாகவும் தெரிய வருகிறது.

இந்த நூல்களில் அவர்கள் கையாண்டுள்ள வசன நடை பல வகைகளில் சிறப்புடையது. சில நூல்கள் யாவரும் படிக்கத்தக்க எளிமையுடனும், இன்னும் சில, அரபிமொழி வல்லுனர்களே கூடப்

புரிந்துகொள்ள முடியாத கடுமையான நடையிலும் அமைந்துள்ளன வாகும். இமாமவர்கள் தங்கள் நூல்களில் அரபிகளின் வழக்குச் சொற்களையும், பழமொழிகளையும் அள்ளித் தெளித்து தனியான தோர் இலக்கிய விருந்தையே பரிமாறியுள்ளார்கள். தங்களோடு கொள்கை மாறுபட்டவர்களின் வாதங்களையும், தங்கள் வாதங்களையும் அவர்கள் சமர்ப்பிக்கும் முறை மிகவும் அருமையானதாகும்.

இமாமவர்களின் நூல்களில் மிகவும் பெரியது 'கிதாபுல் உம்மு' என்பதாகும். இது சுமார் நாலாயிரம் பக்கங்களையுடையது, பைஹக்கியால், இமாமவர்களின் தனி நூல்கள் என்று குறிப்பிடப் பட்டுள்ள பல, உண்மையில் இந்த 'கிதாபுல் உம்மு' விலுள்ள பகுதிகள் தாம் என்றும், அவை தனி நூல்களல்ல என்றும் "என் ஸைக்ளோபீடியா ஆப் இஸ்மாயில்" குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விதம், ஜிமாஉல் உலூம், கிதாப் இப்தாலுல் இஸ்திஹ்ஸான், கிதாப்-இக்திலாபுல் மாலிக்கி வஷ் ஷாபியீ, கிதாப் இக்திலாபுல் இராகீன், கிதாப் இக்திலாப் மஅ முஹம்மது பின் ஹஸன், கிதாப் இக்திலாப் அலீ வ அப்துல்லா ஹிப்னு மஸ்வூது ஆகியவை இவ்விதம் அதன் பகுதியாக உள்ளவையே என்று தெரிய வருகிறது. இவை தனித்தனி நூல்களாகச் சமீபத்தில் எகிப்திலிருந்து வெளி வந்துள்ளதாகவும் தெரிகிறது. இந்த மாபெரும் கிரந்தம் ஒன்றால் மட்டுமே கூட இமாம் ஷாபியீயின் பெயர் என்றும் நிலைத்து நிற்கக் கூடியதாகும். இமாமவர்களின் மற்றக் கிரந்தங்களில் ரிஸாலா கதீம் (முந்தைய முடிவு), ரிஸாலா ஜதீத் (பிற்காலத் தீர்ப்பு), இக்திலாபுல் ஹதீஸ் (மாறுபட்ட ஹதீஸ்களின் கருத்துக்கள்), பலாயிலு குறைஷ், கிதாபுல் ஸுனன், மப்ஸூத், இம்லா ஸகீர் முதலியன முக்கியமானவையாகும்.

அப்துர் ரஹ்மான் பின் மஹ்தி என்பவர், "திருக்குர்ஆனின் வசனங்களுக்கு ஹதீஸ்களிலிருந்தே ஆதாரம் தருவதுடன் கூடிய ஓர் உரையை ஆக்கித்தர வேண்டும், அதை முஹத்திஸ்களும் ஏகமனதாக ஒப்புக் கொள்ள வேண்டும்" என்று கேட்டுக்



கொண்டதற்கிணங்க, 'கிதாபுர் ரிஸாலத்' என்ற நூலை இமாமவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். 'கிதாபுல் மப்ஸூத் பில் பிக்ஹ்' என்பது இமாமவர்கள் பிக்ஹுச் சட்டம் சம்பந்தமாக எழுதிய பெரிய நூலாக இருந்தது என்றும் தெரிய வருகிறது. மேலும், அஹ்காமுல குர்ஆன், வஸீயத்துஷ் ஷாபியீ, பிக்ஹுல் அக்பர் (இதே பெயரில் ஹனபி மத்ஹபின் பெரிய கிதாபு ஒன்று உண்டு. இமாம் அபூ ஹனீபாவின் தொலைந்துபோன நூலின் பெயரும் இதுவே. இந்தப் பெயரில் இமாம் ஷாபியீ எழுதியுள்ளது பிக்ஹு சம்பந்தமான சிறிய நூல்) ஆகியவை அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுபவையாகும்.

## ஷாபியீ மத்ஹப்

இமாம் ஷாபியீ அவர்கள் போதித்த செயல் முறையும், இமாம் அபூ ஹனீபாவின் செயல் முறையைப் போல எம்பெருமானார் (ஸல்) அவர்களுடைய அத்தாட்சியை (கனவுமூலம்) பெற்றதாகும். அவர்களுடைய காலத்தில் ஈராக் பகுதியில் ஹனபி மத்ஹப் ஆதிக்கம் செலுத்தி வந்தது. எகிப்தில் மாலிக் மத்ஹபுக்காரர்கள் அதிகமாக இருந்தனர். எனினும், இமாமவர்கள் போதனை, அவர்களுடைய மத்ஹபின் பிரச்சாரம் முதலில் பக்தாதிலிருந்து தொடங்கிப் பின்னர் கெய்ரோவில் நடந்து கொண்டிருந்தது. அவர்களைத் தொடர்ந்து முன்னர் நாம் பெயர் குறிப்பிட்டுள்ள அவர்களுடைய தலையாய சீடர்கள், இந்த மத்ஹபை உலகெங்கணும் பிரச்சாரம் செய்தனர், இவ்விதமாக இருநூறு வருடங்களில் எகிப்தும், மக்கா, மதீனாவும் ஷாபியீ மத்ஹபின் முக்கியமான இடங்களாக ஆகிவிட்டன.

பத்தாம் நூற்றாண்டில் இராக், ஈரான், ஸிரியா, குராஸான் போன்ற நாடுகளில் ஷாபியீ மத்ஹப் பரவலாயிற்று. சுல்தான் ஸலாஹுத்தீன் இந்த மத்ஹபைப் பின்பற்றியதுடன், எகிப்தில் இதை அரசாங்க மத்ஹப் ஆகவும் ஆக்கினார். நாளடைவில் இஸ்லாமிய உலகின் பல நகரங்களில் நான்கு மத்ஹபின் நீதிபதிகளும் நியமிக்கப்பட்டு நீதி வழங்கப்பட்டது. பல இடங்களில் கால மாறுதலால், ஆட்சி மாறுதலுடன், மத்ஹப்களின் விஷயத்திலும் பல மாறுதல்கள்

ஏற்பட்டிருப்பினும், இன்றுவரை கெய்ரோவிலுள்ள அல் அஸ்ஹர் சர்வகலாசாலை அதிபர்மட்டும் ஷாபியீ மத்ஹபைச் சேர்ந்தவராகவே இருந்து வருகிறார். இன்று தென் அரேபியா, பஹ்ரைன், தென் இந்தியா, இலங்கை, மலேசியா, இந்தோனேஷியா, திஜிஸ்தான், மத்திய ஆசியாவின் பெரும் பகுதி ஆகியவற்றில் பெரும்பாலான முஸ்லிம்கள் ஷாபியீக்களாகவே இருக்கின்றனர். எனவே, உலகில் பெரும்பாலான வர்களால் பின்பற்றப்படும் மத்ஹப் இது என்றால் வியப்பில்லை.

## இமாமவர்களின் பொன்மொழிகள்

இமாம் ஷாபியீ அவர்களின் எழுத்துக்களில் எத்தனையோ அருமையான வாசகங்களைக் காண முடிகிறது. அவற்றுள் ஒரு சிலவற்றைமட்டும் இங்கே தொகுத்துத் தரலாம்.

கல்வியை தேடுவது சுன்னத்துத் தொழுவதை விடவும் சிறப்பானதாகும்.

ஓர் ஊரில் ஒருவராவது கல்வி பெறாதவராகிவிடின், ஆட்சியாளர்கள் அந்த ஊராரைப் பிடித்துப்போய்க் கட்டாயமாகக் கல்வி கற்பிக்க வேண்டுவது அவர்கள் கடமையாகும்.

நல்ல செயலை (அமலை) நாடிக் கல்வி கற்காதவனுக்கு அவனுடைய கல்வி பயன்தராது.

அறிஞனுக்கு பயபக்தியே அலங்காரமாகும்; சற்குணமே அணிமணிகளாகும்; மனத் தயாளமே அழகாகும்.

கல்வி யாவையும் விடச் சிறந்தது என்பதற்கு இரண்டு அத்தாட்சி களே போதுமானவையாயிருக்கின்றன. சரியான கல்வி பெறாத வனைப் பார்த்து இவன் நல்ல அறிஞன் என்றால் உடனே அவன் மகிழ்ச்சியில் குதூகலிக்கிறான். இதுபோல் மடையன் ஒருவனை மடையன் என்றதுமே அவன் அதை ஏற்காது கோபத்தால் கொதிக்கிறான்.



புனிதமான கல்வி ஞானங்களை அடையப் பெறாதவர்கள் மறுமையில் இறைவனின் நேயர்களாக எழமாட்டார்கள்.

கல்வியை விரும்பாதவனிடம் எந்தச் சிறப்புமிருக்காது. அவனோடு நீ நட்புறவு கொள்ளாதே!

உண்மையான அறிஞன் எளிமையை உவப்புடன் ஏற்பான். அறிவிலி (ஜாஹில்) தான் அதைக் கண்டு மிரளுவான்.

தான் கற்ற கல்வியின்படி ஒழுகாத அறிஞனும் (ஆலிமும்) ஷைத்தானும் ஒன்றுதான்.

எளிமையும், போதும் என்ற மனமுமே அறிஞர்களுக்குச் சிறந்த அணிமணிகளாகும். அத்துடன், அவர்களிடம் பொறுமையும் சேர்ந்து விடுமாயின், அது அந்த அணிமணிகளையும் பிரகாசிக்கச் செய்துவிடும்.

போதும் என்று திருப்தியடைபவர்கள் மூடர்களிடம் பணியத் தேவையில்லை;

தீய செயல்களைச் செய்யவிடாது தடுக்கும் அறிவே உயர்ந்த அறிவாகும். நான் குளிர்ந்த தண்ணீரைக் குடிப்பதால் எனக்குக் கெடுதலுண்டாகும் என்று தெரிந்தால்கூடக் குளிர்ந்த தண்ணீரைக் குடிக்கமாட்டேன்.

கலாஞானம் எஜமானனாகும்; அதைத் தேடிப் படிப்பவர் பணி யாளாகும். பணியாள் சரிவரப் பணி செய்தால் தான் எஜமானனின் அன்பைப் பெறலாம். பணியாளே பெருமையடித்துக் கொள்வதாயின், எஜமானன் எந்த அளவு பெருமையடிக்க முடியும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

பேசுவதும், விவாதிப்பதும் அறிவுக்கு விழிப்பாகும்; மௌனமாக இருப்பது அதற்குத் தூக்கமாகும். எனவே, விழிப்பு நல்லதா, தூக்கம் நல்லதா என்பதை எண்ணிப் பாருங்கள்.

நன்மை தீமை இரண்டிலும் சோதிக்கப்படும்போது நல்வழி தெரிந்து நடப்பவனே அறிவாளியாவான்.

நான் சொல்லும் உபதேசங்கள் ஏற்று நடப்பவன் மீது என் அன்பு திரும்புகிறது. தெரிந்தோ தெரியாமலோ கூட நல்ல விஷயங்களை எதிர்ப்பவனை என் மனம் விரும்ப மறுக்கிறது.

உன் நண்பனாய் இருக்கும்போது உன்னிடமில்லாத நற் குணங்களை எல்லாம் உன்னிடமிருப்பதாகப் புகழ்பவன் உனக்குப் பகைவனானதும் உன்னிடமில்லாத குறைகளெல்லாம் உன்னிட மிருப்பதாகக் கூறித்திரிவான்.

பிறர் குறைகளை உன்முன்னர் பேசுபவன், நிச்சயம் உன் குறைகளையும் பிறரிடம் பேசுவான்.

நண்பனின் நண்பனையும் உண்மையாக நேசிப்பதே நட்புக்குரிய நற்பண்பாகும்.

அரைகுறையான கல்வி கற்பவன், இரவில் சுள்ளி பொறுக்கு பவன் போலாவான். ஏனெனில், அவன் சுள்ளி பொறுக்குகிறானா, பாம்பைப் பொறுக்குகிறானா என்பதை அவன் அறிய முடியாது, மரணிக்கவும் நேருமல்லவா!

நன்கு சிந்தித்துச் செயலாற்றுவது, சிபாரிசு தேடுவதைவிடச் சிறந்ததாகும்.

தன் தவறைக் கண்டு சிரிப்பவன், அதைக் களைந்து கொள்ளவும் முயலுவான்.

தன் அனுபவம் காட்டும் எச்சரிக்கையால் பாடம் பெறாதவன் மனிதத் தன்மையை விட்டே புறம்பானவனாவான்.

அவசரப்பட்டு ஒரு காரியத்தைச் செய்தால் அதனால் நல்லதைவிடத் தீயதே பெரிதும் விளையும். நன்கு சிந்தித்துச் செயலாற்றுவதால் நாடிய பயனைப் பெறலாம்.

மனிதக் கடமையை உணர்ந்து நடப்பவர்களின் குறைகள் அப்பாலாகிவிடும். மேலும், அவர்களுடைய குற்றம் குறைகளும் மன்னிக்கப்படும். ஏனெனில், அவர்களே தங்களுடைய குறைகளை நினைத்து வருந்திச் சீர்பட்டுவிடுகின்றனர்.



தன் இனத்தாரைப் புறக்கணித்துவிட்டுப் பிற இனத்தாரைப் போற்றிக் கொண்டாடுபவன் முட்டாளாவான். ஏனெனில் அத்தகைய நயவஞ்சகன் தன் நயவஞ்சகத்தால் பிறரைப் போற்றிப் புகழ்ந்து அவர்களுக்கு நல்லவனாகிவிட நினைக்கிறான். இது ஒருக்காலும் நடவாத காரியமாகும்.

இறைவனே உன்னைச் சுதந்திர மனிதனாகப் படைத்திருக்கும் போது, நீயும் ஏன் அவ்வாறு சுதந்திரமானவனாக நடந்து கொள்ளக் கூடாது?

உன் நண்பன் தனித்திருக்கும்போது அவனுக்கு நீ புத்திமதி கூறுவதே சாலச் சிறந்ததாகும். மேலும், அவன் சீர்படவும் அது பயன்படும். பிறர் இருக்குமிடத்தில் நண்பனுக்குப் புத்திமதி கூறுவதால் அவன் உன்மீது ஆத்திரமடைவதோடு, உன் பெயரும் கெட்டுப்போகும்.

அன்பும், பணிவுமே மேன்மக்களின் பண்பாகும். அகந்தையும், இழிவும் ஈனர்களின் குணமாகும்.

ஒருவருடைய பொருள்களை அமானிதமாக வலிய வந்து ஏற்க ஆவல் காட்டுபவன் ஒன்று மடையனாய் இருக்க வேண்டும் அல்லது திருடனாக இருக்க வேண்டும்.

நீ முடித்தாக வேண்டிய வேலைகள் பல இருப்பின் அவற்றுள் மிகவும் முக்கியமானவைகளை முதலில் செய்து முடித்துவிடு!

இம்மையை அதிகமாக நேசிப்பவர்கள்தாம் அதிகமாக நாசமடைகின்றனர்.

இறைவனின் மெய்ஞ்ஞானமென்ற ஜோதியை (நூரை) விரும்புபவர்கள், மூடர்களை நெருங்கி இருப்பதை விட்டும் தம்மைப் பேணிக் கொள்ள வேண்டும்; குறைவாக உணவுண்ண வேண்டும்; தனிமையை நாட வேண்டும்.

திருக்குர்ஆனின் சத்தியபோதனைகளைத் தெரிந்து, அதன்படி நடப்பதால் மனிதனின் படித்தர உயர்வும், மார்க்கச் சட்டத்தை (ஃபிக்ஹை) தெரிந்து கொள்வதால் அவன் கண்ணியமும், ஹதீஸின் போதனையைத் தெரிந்து கொள்வதால் இறைவன்மீது உறுதியும், அகராதிக் கலையைப் பயில்வதால் முடிவான யோசனையும் உண்டாகும்.

வறுமையான சமயத்தில் தருமம் கொடுப்பதும், தனிமையில் பூரணமாகப் பயபக்தியைக் கைக்கொள்வதும் அச்சமுண்டாகிவிட்ட பெரிய இடத்தில் உண்மை பேசுவதும் கடினமான காரியங்களாம்.

உணர்ச்சியூட்டப்பட்டும் உணர்ச்சி பெறாதவன் கழுதைக்குச் சமமாவான். சமாதானப்படுத்தியும் சமாதானமடையாதவன் உண்மையான ஷைத்தானாவான்.

வறுமையில் உழல்பவனிடம் எதற்கும் யோசனை கேட்காதே!

பேராசையின்மை, பிறருக்குத் தீங்கிழைக்காமை, பேணுதலுடன் ஒழுகுதல், ஆகுமான (ஹலால் ஆன) செல்வத்தையே விரும்புதல், சகல சந்தர்ப்பங்களிலும் இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுதல் ஆகிய இந்த ஐந்து இயல்புகளும் இம்மை, மறுமை ஆகிய இரண்டு உலகங்களிலும் நன்மை பயப்பனவாம்.

சகலரையும் திருப்திப்படுத்தி விடலாம் என்பது ஒருக்காலும் சாத்தியமல்ல. எனவே, மனிதன் இறைவன்மீது நம்பிக்கை வைத்துத் தன்னைச் சீர் செய்து கொள்ள முயல்வதே நலமாகும்.

மனித இயல்பு பொதுவாக விரும்பப்படக் கூடியதா என்றால், இல்லை என்றே கூற வேண்டுவதாகிறது. ஏனெனில், இந்த இயல்பல்லவா தன்னை வெறுப்பவன் பின்னால் ஓடவும், தன்னை நேசிப்பவனைக் கண்டு வெறுக்கவும் தூண்டுகிறது!

மனிதனைத் திருத்துவதை விடப் பகுத்தறிவற்ற மிருகத்தைத் திருத்துதல் எளிது. அறிவு சூன்யமான மூடன் ஒருவன் தனக்கு எல்லாம் தெரியும் என்பதுபோல் நடித்து, யாருடைய உபதேசத்தையும் ஏற்றுச் சீர்படாமல் நாசமாகிறான்.



கண் பார்வைக்கு ஓர் அளவு (தூரம்) இருப்பதுபோல, அறிவுக்கும் ஓர் எல்லையுண்டு. அந்த எல்லைவரை தான் பகுத்தறிவு செல்லும்.

சிறந்த நல்லியல்பு, தயாளம், பணிவு, நன்றியறிதல் ஆகிய நான்கும் தாம் மனிதனுக்கு மிகவும் அவசியமானவையாகும்.

நம்பிக்கைக்குரியவனாக இருத்தல், அடைக்கலப் பொருள்களைப் பாதுகாத்தல், தெய்வ நம்பிக்கை, ஆழ்ந்த நோக்கு ஆகிய நான்கு மின்றேல் மனிதன் பூரணத்துவமடைய முடியாது.

இம்மையின் வாழ்விலேயே மூழ்விடுவது தீய நண்பர்களைத் தேடிக் கொள்ளவே உதவும்; மக்களோடு பழகாமல் ஒதுங்கி விடுவதும் பகைமையைத்தான் உண்டாக்கும்.

அளவுக்கதிகமாக ஒருவனை நான் சங்கை செய்து கொண்டிருந்தால், அந்த அளவுக்கு என் கண்ணியம் குறைந்து விடுகிறது.

கருமியிடம் நல்லெண்ணம் வைப்பவனுக்கு அவன் வெறுங்கையுடன் திரும்புவதே அவன் பெறவேண்டிய குறைந்த தண்டனையாகும்.

வெட்கத்தை விற்று விட்டவனுடன் நட்புக் கொள்பவன் மறுமையில் வெட்கப்பட நேரும்.

தன்னை மதித்துக் கண்ணியப்படுத்தாதவனையும், தன்னைப் புரிந்து கொள்ளாதவனையும் நேசித்துப் புகழ்ந்து கண்ணியப் படுத்துபவன் தன் ஆத்மாவுக்கே அளவற்றத் தீமை செய்து கொண்டவனாவான்.

காகிதமும், பேனாவுமின்றிப் பாடபோதனை நடக்குமிடம் செல்பவன், கோதுமையின்றி கோதுமை அரைத்துத் தரும் இடத்துக்குச் செல்பவன் போன்றவனாவான்.